விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 02 செவ்வாய்க்கிழமை (18.07.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 211

## வாட்டுகிறது வரட்சி

# தீவகப்பகுதி மக்கள் இடம் பெயரும் அவலம்

(யாழ்ப்பாணம்)

தீவகப் பகுதிகளில் குடிநீர் இல்லாத காரணத்தால் அப்பகுதியில் வாழும் மக்கள் வேறு பிரதேசங்களுக்கு இடம்பெயரும் அவலநிலை ஏற்பட்டுள்ளதென பிரதேச செயலர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன், இப் பாரிய பிரச்சினையை தீர்ப்பதற்கு குடிநீர் வழங்கல் நடவடிக்கைகளை விரைவு படுத்த வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)



## கஞ்சாவுடன் ஒருவர் கைது

(குருமன்காடு)

வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் நேற்று மாலை 6.30 மணியளவில் கேரளா கஞ்சாவுடன் இளைஞர் ஒருவரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய 24☛

## வித்தியா படுகொலை வழக்கு; இன்று மீண்டும் விசாரணை

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா கூட்டு வன்புணர்விற்கு உட்படுத்தப் பட்டு படுகொலை செய்யப் பட்டமை தொடர்பிலான வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் இன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

மாணவி வித்தியா கூட்டு வன்புணர்விற்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப் பட்டமை தொடர்பிலான இந்த வழக்கு விசாரணை மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இடம் பெற்று வருகிறது.

ஏற்கெனவே ட்ரயல் அட் பார் முறையில். மேல் நீதி மன்ற நீதிபதிகளான 23☛

## சிங்கப்பூர் வெளி. அமைச்சர் இன்று கொழும்பு வருகை

### நாளை யாழிற்கும் விஜயம்

(கொழும்பு)

சிங்கப்பூர் வெளிநாட்ட மைச்சர் விவியன் பால கிருஷ்ணன் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற் கொண்டு இன்று கொழும்பு வருகிறார். 23☛



## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

வீடொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ். பெருமாள் கோவிலடியை சேர்ந்த பரமா 23☛

## ஜனாதிபதி - பிரதமருக்கு நீதிமன்று நோட்டீஸ்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு எதிர்வரும் டிசம்பர் மாதம் 4 ஆம் திகதி கொழும்பு உயர் நீதிமன்றத்தில் 23☛



## 13 மாவட்டங்களில் குடிநீர் தட்டுப்பாடு

(கொழும்பு)

நிலவும் வரட்சி காரணமாக நாட்டின் 13 மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் குடிநீர்த் தட்டுப்பாட்டை எதிர்நோக்கி யுள்ளனர்.

13 மாவட்டங்களைச்சேர்ந்த 2 இலட்சத்து 60 ஆயிரம் குடும்பங்கள் வரட்சியினால் பாதிக் கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. 24☛

## கர்ப்பிணி கொலை; சந்தேக நபர்களின் மறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை கர்ப் பிணி பெண் படுகொலை வழக்கின்சந்தேகநபர்களது விளக்கமறியலை மேலும் பதின்னான்கு நாட்களுக்கு நீடித்துள்ள நீதிமன் 24☛

## இந்த வருடத்தில் இந்.மீனவர்கள் 81 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்புக் குள் அத்துமீறி நுழைந்து வட பகுதி கடற்பரப்பில் மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட் டில் இந்த வருடம் 81 23☛

## டெனீஸ்வரனின் இடத்துக்கு விந்தனை ரெலோ பரிந்துரை?

### முதலமைச்சருக்கு இன்று கடிதம் அனுப்பப்படும்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண மீன்பிடி போக்குவரத்து வர்த்தக வாணிப கிராம அபிவிருத்தி மற்றும் வீதி அபி விருத்தி அமைச்சராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினத்தை 23☛



## கடற்படை தளபதியை சந்தித்த நொக்ஸ்!

(கொழும்பு)

அமெரிக்க தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகராக பணியாற்றி, அந்தப் பதவி யிலிருந்து விடைபெற்றுச் செல்லும் கேர்ணல் ரொபட் நொக்ஸ் கடற்படைத் தளபதி வயிஸ் அட்மிரல் ரவீந்திர விஜே குணவர்தனவை சந்தித்துள்ளார்.

இலங்கை கடற்படைத் தலைமையகத்தில் 24☛

## இலங். அகதிகளை அமெரிக்காவில் குடியேற்றும் திட்டம் அமுலாக்கப்படும்

(நியூயோர்க்)

நவூறு மற்றும் மானுஷ் தீவு அகதி முகாம்களில் வசிக்கும் இலங்கை உள்ளிட்ட நாடுகளை சேர்ந்த அகதி களை அமெரிக்காவில் குடி யேற்றும் திட்டம் உரிய வகையில் நடைமுறைப்படுத்தப் படும் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிசப் இதனைத் தெரி வித்துள்ளார்.

அமெரிக்காவின் முன் னாள் ஜனாதிபதி பராக் ஒபா மாவின் நிர்வாகத்தின் கீழ் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இந்த உடன் படிக்கையின் அடிப்படையில் 1250 அகதிகள் [illegible] 23☛

## மாவட்டத்தை அபிவிருத்தி செய்ய நம்மவரே தடையாக உள்ளனர்!

### எதற்கும் எதிர்ப்பு என யாழ். அரச அதிபர் விசனம்

(யாழ்ப்பாணம்)

எமது மாவட்டத்தை அபி விருத்தி செய்வதற்கு நம்ம வரே தடையாக உள்ளார் [illegible] யாழ்



மாவட்ட அரச அதிபர் நா.வேத நாயகன், கெட்டதை செய்தால் எதிர்ப்பதில் தவறில்லை; நல் லதைச் செய்தாலும் எதிர்க்கின் றார்கள் எனவும் 23☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

**சிறிய முதலீடு - நிரந்தர வருமானம்**

A9 வீதி, நுணாவில் சந்தி அருகே மட்டுவில் வீதியில் 300M தூரத்தில் 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. வீடு கட்ட, தென்னை, மா, பலா, தேசி போன்ற மரங்கள் வைத்து பலன்பெற உகந்த இடம். (9832)

தொடர்பு

**077 873 0129**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## கூவில் தீபஜோதி சனசமூக நிலையத்தின்

# 43ஆவது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும் - 2017

காலம் : 23.07.2017 ஞாயிற்றுக்கிழமை (ஆடி அமாவாசை தினத்தன்று)
இடம் : கூவில் தீபஜோதி விளையாட்டுக்கழக மைதானம்

## வெளிக்கழகங்களுக்கான காலை நிகழ்வுகள்

**15 KM மரதன் ஓட்டம் (கட்டணம் ரூபா 100)**
நேரம்: காலை 6.00 மணி | இடம்: கிராமக்கோட்டுச்சந்தி

**40 KM சைக்கிள் ஓட்டம் (கட்டணம் ரூபா 200)**
நேரம்: காலை 7.00 மணி | இடம்: கிராமக்கோட்டுச்சந்தி

## வெளிக்கழகங்களுக்கான மாலை நிகழ்வுகள்

**கிறீஸ்கம்பம் ஏறுதல் (கட்டணம் ரூபா 50)**
நேரம்: மாலை 4.30 மணி | இடம்: தீபஜோதி விளையாட்டுக்கழக மைதானம்

**5000 M ஓட்டம், பலூன் உடைத்தல் (கட்டணம் ரூபா 50)**
நேரம்: மாலை 5.00 மணி | இடம்: தீபஜோதி விளையாட்டுக்கழக மைதானம்

*பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளதனால் அனைத்து கழக வீரர்களையும் தவறாது பங்குகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.*

தீபஜோதி சனசமூக நிலையம்
தீபஜோதி விளையாட்டுக்கழகம்
தீபஜோதி முன்பள்ளி,
தீபஜோதி கல்விக்கழகம் (C-9094)

தொடர்புகளுக்கு:
தர்சன் - 0779165212,
குணநாதன் - 0773164522
கபிலன் - 0770858322, பிரதீபன் - 0778033500


# மரண அறிவித்தல்கள்



## அமரர் வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை

(இளைப்பாறிய அலுவலக உதவியாளர்- யா/ஞானாசாரியார் கல்லூரி; கரவெட்டி)

கரவெட்டி மத்தி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய அலுவலக உதவியாளர் - யா/ஞானாசாரியார் கல்லூரி, கரவெட்டி) நேற்று (17.07.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வரும் அன்னம்மாவின் அன்புக் கணவரும் கருணாகரன் (லண்டன்), அருட்செல்வி (லண்டன்), பரணிதரன் (அமரர்), கலைச்செல்வி (அமரர்), கோணேஸ்வரன் (இ.போ.ச பருத்தித்துறை), தவச்செல்வி ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜிதா (லண்டன்), செல்வராஜா (லண்டன்), விஜிதா (இலங்கை), மயூரன் (இலங்கை) ஆகியோரின் மாமனாரும் சோபிகா, அபிலாஷ், சாருஜா, கனிஷா, விதுன் (லண்டன்), லேதுஜன், சங்கவி, மகிசா ஆகியோரின் பேரனும் கண்ணகை (அமரர்), இலட்சுமிப்பிள்ளை (அமரர்), கண்மணி (இளைப்பாறிய தாதிய உத்தியோகத்தர்), ஆறுமுகம் (அமரர்) ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.07.2017) புதன்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேரொண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'மருதவனம்'
கரவெட்டி மத்தி, கரவெட்டி. (C-9099)

தகவல்:
குடும்பத்தினர்

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்
31 - 01 - 1972

மறைவு
04 - 06 - 2017

## அமரர் தணிகாசலம் ஜெயச்சந்திரன்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே!
உற்றவர்க்கு உதவுகின்ற உத்தமனே!
பற்றினையோ பற்றற்றான் பாதமலர்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்

கடந்த 04.06.2017 அன்று சிவபதமடைந்த தணிகாசலம் ஜெயச்சந்திரன் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 18.07.2017 செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் ஸ்ரீவீரபத்திரர் ஆலய முன்றலில் நடைபெறுவதுடன் அன்னாரது இல்லத்தில் மு.ப 11.30 மணியளவில் நடைபெறும் சபீண்டீகரண நிகழ்விலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கற்கோவளம்,
பருத்தித்துறை. (C-9085)

தகவல்: பாசமிகு சகோதரன் த.ஜெயரூபன்,
குடும்பத்தினர்

## திருமதி யோசவ் ஞானப்பூ (மணி)

மண்ணில்
22 - 04 - 1935



விண்ணில்
17 - 07 - 2017

நாரந்தனையை பிறப்பிடமாகவும் 425 (793) நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி யோசவ் ஞானப்பூ (மணி) நேற்று (17.07.2017) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டேவிட் (அருளம்பலம்), றோசமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஆசீர்வாதம் யோசவ்வின் அருமை மனைவியும் காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம்-மேரியம்மா அவர்களின் மருமகளும், காலஞ்சென்றவரான அன்ரன் ஜெயக்குமார் (G.S) மற்றும் யோண்சன் ராஜ்குமார் (ஆசிரியர்-திருக்குடும்ப கன்னியர்மட தேசிய பாடசாலை, பிரதி இயக்கு நர்-திருமறைக்கலாமன்றம்), மேரி பிறேமிளா ஜெயறோஸ் (நூலகர்-யாழ்.இந்து மகளிர் கல்லூரி), மரிய அசம்ரா (ஆசிரியர்-நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம், யா/அரியாலை சிறீபார்வதி வித்தியாலயம்), ஜெயராணி, மஞ்சுளா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - சமூக சேவைகள் திணைக்களம், கைதடி) ஆகியோரின் அன்புத் தாயும் மேரி யோசப்பின் (கனடா), விறிசிற்றம்மா (லூடா), இராஜேஸ்வரி, மரியதாசன் (மரியடி பற்றிமா ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி யோ.றுஜந்தா (அபிவிருத்தி உத்தியோகத்தர் கல்வி கோட்டம், நல்லூர்), கு.உமாகாந் (யாழ்.போதனா வைத்தியசாலை), பி.றெஜினோல்ட் சாந்தகுமார் (இ.போ.ச யாழ்ப்பாணம்), ஆ.சதீஸ்குமார் (கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான சிசிலியா, ஸ்ரீபன், இம்மானுவேல், றீற்றம்மா மற்றும் யேசுதாசன் (கனடா), ஞானம் (பண்டத்தரிப்பு) ஆகியோரின் மைத்துனியும் டிலக்ஷிகா, ஜோய் டிலுக் ஷன், டிலக்ஷனா, எறின் டினுஜா, அபிஷேக், அனந்திகா, அனோமிகா, றொஷானா, நிதர்சனா, ஷெரோணிக்கா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (18.07.2017) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 03.45 மணிக்கு நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியுடன் யாழ்.புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

793 (425), நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-0212221828, 0773086944 (9833)

தகவல்:-
யோ.யோண்சன் ராஜ்குமார்
(மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதித்துறையின் கரங்களை கட்டிவைத்த சட்டமா அதிபர்

## ஐ.நா.நிபுணர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**இலங்கை நீதித்துறையின் கரங்களை சட்டமா அதிபர் கட்டி வைத்திருப்பதாக இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த மனித உரிமைகள் மற்றும் தீவிரவாத எதிர்ப்புக்கான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் பென் எமர்ஷன் குற்றம் சாட்டியுள்ளார்.**



தனது இலங்கை பயணத்தின் முடிவில் கருத்து வெளியிட்ட போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இலங்கை நீதித்துறையின் கரங்கள் சட்டமா அதிபர் மூலமாக கட்டி வைக்கப்பட்டுள்ளது. இது ஜனநாயக நீதித்துறையின் அடிப்படைத் தத்துவம் மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கு முற்றிலும் முரணானது.

எந்தவொரு பிணை மனுவையும் நிராகரிக்கும் அதிகாரம் பெற்றவராக சட்டமா அதிபர் இருக்கிறார். இந்த நடைமுறை இன்னமும் இலங்கையிலுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

## 11 தமிழர்கள் கடத்தல் விவகாரம்

# கடற்படையின் முன்னாள் பேச்சாளர் அடிப்படையற்ற குற்றச்சாட்டில் கைது

## உதய கம்மன்பில கூறுகிறார்

(கொழும்பு)

கடற்படையின் முன்னாள் பேச்சாளர் டி.கே.பி. தசநாயக்க அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே கைது செய்யப்பட்டுள்ளதாக பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் செயலாளர் உதய கம்மன்பில எம்.பி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொலிஸ்பேச்சாளர் ருவான் குணசேகரவின் தகவலை பார்க்கும் போது 11 தமிழர்கள் கடத்தல் தொடர்பில் அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே தசநாயக்க கைது செய்யப்பட்டுள்ளார்.

எனவே தம்முடன் பகிரங்க விவாதம் ஒன்றுக்கு வருமாறு பொலிஸ் பேச்சாளரை அழைப்பதாகவும் உதய கம்மன்பில கூறியுள்ளார்.

மேலும், போர்க்காலத்தின் போது இடம்பெற்ற கடத்தல்களுக்கு போரை வெற்றி கொண்ட படை வீரர்கள் பொறுப்பல்ல என கம்மன்பில மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## இசை நிகழ்ச்சிக்குச் சென்ற இளைஞன் அடித்துக் கொலை

வீரகெடிய பொலிஸ் பிரிவின் தங்காலை வீதி, வீரகெடிய பகுதியில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இளைஞன் ஒருவன் அடித்துக் கொல்லப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். நேற்று முன்தினம் இரவு மண்டாடுவ பகுதியில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு மீண்டும் வீடு திரும்புகையிலேயே அவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக, விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

தங்காலை - பஹலகொடுவ பகுதியைச் சேர்ந்த 21 வயது இளைஞனே இவ்வாறு கொலை செய்யப்பட்டார். சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இதேவேளை, கொலை செய்த சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்கான விசாரணைகளை வீரகெடிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## நூதனசாலையாகும் தேர்தல் ஆணைக்குழு

### வாசு எம்.பி.சுட்டிக்காட்டு



தேர்தலை பிற்போடும் திட்டத்திலேயே அரசியல் கட்சிகளுக்கிடையில் அலரி மாளிகையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் மாட்டிக்கொள்ளாமல் இருப்பதற்கே கூட்டு எதிர்க்கட்சி கலந்து கொள்ளவில்லை. அத்துடன் தொடர்ந்து தேர்தல்கள் பிற்போடப்படுமானால் தேர்தல்கள் ஆணைக்குழு நூதனசாலையாக மாறும் நிலையே ஏற்படும் என ஜனநாயக இடதுசாரி கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணி நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## நேற்று 125 ஆவது நாள் கவனயீர்ப்பு தொடர்கிறது




காணாமற் போனோரின் உறவினர்களால் மருதங்கேணியில் மேற்கொள்ளப்பட்டுவரும் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று 125 நாளாக தொடர்ந்து இடம்பெற்றது. (இ-60)

## இரண்டு கட்சிகள் இணைந்து பணியாற்றுவது சிரமமானது

# பிரதமர் ரணில் தெரிவிப்பு



இரண்டு கட்சிகள் இணைந்து பணியாற்றுவது மிகவும் சிரமமான காரியமாக இருந்தாலும் நாட்டில் காணப்படும் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக இணைந்து பணியாற்றி வருவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரச மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் மத்தியளவிலான வருமானத்தை பெறும் ஊழியர்களுக்காக முன்னெடுக்கப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக 500 வீடுகளை நிர்மாணிக்கும் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் நேற்று உரையாற்றும் போதே பிரதமர் இதனைக் கூறியுள்ளார்.

தேசிய அரசாங்கத்தின் மூலம் ஐக்கிய தேசியக் கட்சிக்கோ அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கோ இலாபம் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாது.

மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களை பார்த்து எதிர்காலத்தில் நடைபெறும் தேர்தலில் மக்களால் அரசியல்வாதிகள் தெரிவு செய்யப்படுவார்கள். அதேவேளை நாட்டின் கடன் தேவையைப் பூர்த்தி செய்ய போட்டியான வர்த்தக பொருளாதாரம் அவசியம்.

2020 ஆம் ஆண்டில் கடனை கட்டி முடிக்க கூடிய பொருளாதாரத்தை உருவாக்குவோம். சுகாதாரம் மற்றும் கல்வித்துறையில் மேலும் அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டும்.

இதன் ஊடாக மக்களுக்கு நிவாரணங்கள் கிடைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்தை 133 ஓட்டங்களில் சுருட்டி; 340 ஓட்டங்களால் தென்னாபிரிக்கா வெற்றி



டிரென்ட் பிரிட்ஜ் மைதானத்தில் நடைபெற்ற 2-வது டெஸ்டில் இங்கிலாந்தை 133 ஓட்டங்களில் சுருட்டி, தென்னாபிரிக்கா அணி 340 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இங்கிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது.

ஏற்கெனவே, லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற முதல் டெஸ்டில் இங்கிலாந்து 211 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. 331 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய தென்னாபிரிக்கா 119 ஓட்டங்களில் சுருண்டு மோசமான தோலவியை சந்தித்தது.

இந்நிலையில் 2-வது டெஸ்ட் கடந்த 14 ஆம் திகதி நாட்டிங்காமில் உள்ள டிரென்ட் பிரிட்ஜ் மைதானத்தில் தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணித் தலைவர் டு பிளசிஸ் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். அம்லா (78), டி கொக் (68), பிளண்டர் (54) ஆகியோரின் அரைச்சதத்தால தென்னாபிரிக்கா முதல் இன்னிங்சில் 335 ஓட்டங்கள் சேர்த்தது. இங்கிலாந்து அணி சார்பில் ஜேம்ஸ் அண்டர்சன் அதிகபட்சமாக 5 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.

பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி 205 ஓட்டங்களில் சரணடைந்தது. அணித் தலைவர் ஜோ ரூட் 78 ஓட்டங்களும், பேர்ஸ்டோவ் 45 ஓட்டங்களும் எடுத்தனர். தென்னாபிரிக்கா அணி சார்பில் கிறிஸ் மோரிஸ், மகாராஜ் தலா மூன்று விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்கள்.

பின்னர் 130 ஓட்டங்கள் முன்னிலையுடன் தென்னாபிரிக்கா 2-வது இன்னிங்சை தொடங்கியது. தொடக்க வீரர் டீன் எல்கர் (80), அம்லா (87), டு பிளசிஸ் (63) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் தென்னாபிரிக்கா 2-வது இன்னிங்சில் 9 விக்கெட் இழப்பிற்கு 343 ஓட்டங்கள் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. சுழற்பந்து வீச்சாளர் மொயீன் அலி நான்கு விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.


ஒட்டுமொத்தமாக இங்கிலாந்தை விட 473 ஓட்டங்கள் அதிகம் பெற்றிருந்தது. இதனால் இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு 474 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயித்தது தென்னாபிரிக்கா.


474 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் இங்கிலாந்து அணி 2-வது இன்னிங்சை தொடங்கியது. 3-வது நாள் ஆட்ட முடிவில் இங்கிலாந்து 4 ஓவர்களை சந்தித்து விக்கெட் இழக்காமல் 1 ஓட்டம் எடுத்திருந்தது. அலஸ்டைர் குக், ஜென்னிங்ஸ் ஆகியோர் ஓட்டங்கள் ஏதும் எடுக்காமல் களத்தில் இருந்தனர்.

நேற்று 4-வது நாள் ஆட்டம் தொடங்கியது. ஆட்டம் தொடங்கிய 2-வது ஓவரின் கடைசி பந்தில் ஜென்னிங்ஸ் பிளாண்டர் பந்தில் 3 ஓட்டங்கள் எடுத்த நிலையில் விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

அடுத்து வந்த பேலன்ஸ் 4 ஓட்டங்களிலும், அணித் தலைவர் ஜோ ரூட் 8 ஓட்டங்களிலும் ஆட்டமிழக்க, இங்கிலாந்து அணி 55 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 3 விக்கெட்டுக்களை இழந்தது.

மறுமுனையில் விளையாடிய குக் ஓரளவிற்கு தாக்குப்பிடித்து 42 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தார். அதன்பின் வந்த பேர்ஸ்டோவ் 16 ஓட்டங்களிலும், பென் ஸ்ரோக்ஸ் 18 ஓட்டங்களிலும், மொயீன் அலி 27 ஓட்டங்களிலும் ஆட்டம் இழந்தனர். கடைநிலை வீரர்கள் பிராட் (5), வுட் (0), அண்டர்சன் (0) அடுத்தடுத்து வெளியேற இங்கிலாந்து அணி 44.2 ஓவரில் 133 ஓட்டங்கள் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.





இதனால் தென்னாபிரிக்கா 340 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. தென்னாபிரிக்கா அணி சார்பில் பிளாண்டர், மகாராஜ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களும், ஆலிவர் மற்றும் மோரிஸ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களும் வீழ்த்தினார்கள்.

இந்த வெற்றியின் மூலம் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் 1-1 என சமநிலையில் உள்ளது. 3-வது டெஸ்ட் வருகிற 27ஆம் திகதி ஓவல் மைதானத்தில் நடக்கவுள்ளது.

## இந்து மகளிர் கல்லூரியின் தமிழ் மொழி தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் தமிழ் மொழித்தின விழா இன்று நடைபெறவுள்ளது.

தமிழ் மன்றத் தலைவர் செல்வி ஜெனனி ஜெயராசா தலைமையில் இன்று காலை 8.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன், சிறப்பு விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எப்.எக்ஸ். அன்ரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் வாழ்த்துரையை கல்லூரி அதிபர் திருமதி மிமலாதேவி விமலநாதன் வழங்குவார்.

தமிழ் மன்றத்தால் வெளியிடப்படும் "ஆரம்" இதழின் முதற் பிரதியை கல்லூரியின் பழைய மாணவி திருமதி யசோதை சரவணபவன் பெற்றுக் கொள்ளுவார். (செ)

# வெற்றிக்கு இலங்கைக்கு 218 ஓட்டங்கள் தேவை சிம்பாப்வேயிற்கு 7 விக்கெட்டுக்கள் தேவை

பரபரப்பான கட்டத்தில் கொழும்பு டெஸ்ட் உளளது.. இலங்கை அணியின் வெற்றிக்கு 218 ஓட்டங்கள் தேவைப்படுகிறது. சிம்பாப்வே 7 விக்கெட்டுக்களை கைப்பற்ற வேண்டும்.

இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் போட்டி கொழும்பில் நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வென்ற சிம்பாப்வே அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. அதன்படி முதலில் களம் இறங்கிய சிம்பாப்வே அணி முதல் இன்னிங்சில் 356 ஓட்டங்கள் குவித்தது. பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய இலங்கை 346 ஓட்டங்கள் சேர்த்தது.

முதல் இன்னிங்சில் 10 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற சிம்பாப்வே 2-வது இன்னிங்சை தொடங்கியது. 3-வது நாள் ஆட்டத்தில் சிம்பாப்வே 6 விக்கெட் இழப்பிற்கு 252 எடுத்திருந்தது. நான்காவது நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. தொடர்ந்து விளையாடிய சிம்பாப்வே 377 ஓட்டங்கள் குவித்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

ஒட்டுமொத்தமாக இலங்கையை விட 387 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. பின்னர் 388 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன்இலங்கை அணி 2-வது இன்னிங்சை தொடங்கியது. தொடக்க வீரர்களாக குணரத்ன, உபுல் தரங்க ஆகியோர் களம் இறங்கினார்கள். தரங்க 27 ஓட்டங்களிலும், குணரத்ன 48 ஓட்டங்களிலும் ஆட்டம் இழந்தனர். அடுத்து வந்த குசல் மெண்டிஸ் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அணித் தலைவர் சண்டிமல் 15 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார்.

4-வது விக்கெட்டுக்கு மெண்டிஸ் உடன் மத்தியூஸ் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி 4-வது நாள் முடிவு வரை மேலும் விக்கெட் இழக்காமல் பார்த்துக் கொண்டது.

இலங்கை அணி 4-வது நாள் ஆட்ட முடிவில் 3 விக்கெட் இழப்பிற்கு 170 ஓட்டங்கள் குவித்துள்ளது. அந்த அணிக்கு இன்றைய கடைசி நாளில் 218 ஓட்டங்கள் தேவைப்படுகிறது. கைவசம் 7 விக்கெட்டுக்கள் மீதமுள்ளது. இன்று காலை உணவு இடைவேளைக்குள் சிம்பாப்வே அணி விரைவாக விக்கெட்டுக்கள் வீழ்த்தினால் மட்டுமே வெற்றி பெற முடியும். இல்லையெனில் இலங்கை அணி 388 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை எட்ட வாய்ப்புள்ளது.


பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes

திரு. தம்பிநாயகம் நாகநாதன்
(Dip.in.Physical Education,
SPC.Tri. Phy.Edu. B.A Jaffna)



இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழா இன்று கொழும்பு BMICH இல் நடைபெறுகின்றது. அந் நிகழ்வில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா - PGDE பட்டம் பெறும் எமது நண்பன் திரு. தம்பிநாயகம் நாகநாதன் அவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பட்டங்கள் பெற்று சீரும் சிறப்புடன் வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

3ஆம் அணியினர்,
விளையாட்டு விஞ்ஞான அலகு,
யாழ். பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்.

(C - 9097)



கந்த புராண வசனம்
நூல் வெளியீடு



நல்லை நகர் நாவலர் பெருமான்
படைத்தருளிய
"கந்தபுராண வசனம்"
என்னும் நூல்
சைவப்பிரகாச பதிப்பகத்தினரின்
முயற்சியில் இந்துசமய கலாசார
அலுவல்கள் திணைக்களத்தால்
வெளியீடு செய்யப்படும் நிகழ்வு.

தலைமை
கௌரவ டி.எம்.சுவாமிநாதன்
அமைச்சர், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம்,
புனர்நிர்மாணம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சு

இடம் : நல்லூர் கந்தசுவாமி ஆலயம்
காலம் : 19.07.2017 புதன் கிழமை, காலை 8.00 மணி


இவ் வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு
தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பணிப்பாளர்
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,
248-1/1, காலி வீதி, கொழும்பு -04.

(C - 9096)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் நீதிமன்றம் அழைப்பாணை!



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

போலி ஆவணம் தயாரித்தார் என்ற குற்றச்சாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு எதிரான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

முறைப்பாட்டில் முதலாம் இரண்டாம் சாட்சியாளர்களாக முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் பெயரிடப்பட்டிருந்தனர்.

இதற்கமைய இரண்டு சாட்சியாளர்களையும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்ட போதிலும் அரச பணிகள் காரணமாக அவர்களால் நேற்று நீதி மன்றத்தில் ஆஜராக முடியவில்லை என ஜனாதிபதி மற்றும் பிரதமர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இதற்காக வேறு ஒரு திகதியை வழங்குமாறும் அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கேட்டுக்கொண்டார்.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி விடுத்த கோரிக்கையை ஆராய்ந்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நிஷங்க நாணயக்கார, சாட்சியாளர்களுக்கு மீண்டும் அழைப்பாணை விடுக்குமாறு உத்தரவிட்டார்.

இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (இ-7)


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா:10
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: B/7572

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
உயரம்: 6"
தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்
தொ.இ: B/7574

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: செவ் 2 இல்
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/7575

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:BSc/தனியார் தொழில் இந்தியா
தொ.இ: B/7576

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மூலம்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/6644

பிறப்பு: 1989
இந்துநட்சத்திரம்: சுவாதி
கி.பா: செவ் 2 இல்
தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்
தொ.இ: G/6645

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: சுவாதி
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/6648

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: செவ் 8 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BA/அரசதொழில்
தொ.இ: G/6658

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை
கலைமாமணி
Dr.S.S.சர்மா குருஜீ
82/4 கலட்டி அம்மன் கோவிலடி, வண்ணார்பண்ணை.
077 784 1558 (சி. 8817)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி. வினோக்குமார் சோமகோஜனி (BFA)

திரு. சிவபாலன் கமலவேந்தன் SLPS-3 (NDT-Sci,BA, PGDE, Dip in Psy)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா கொழும்பு BMICHஇல் நடைபெறுகின்றது. அந்நிகழ்வில் 18.07.2017 இன்று பட்டப்பின் கல்வி டிப்ளோமா- PGDE பட்டம் பெறும் திரு. சிவபாலன் கமலவேந்தன் (SLPS-3)அவர்களையும் 19.07.2017 நாளை பட்டப்பின் கல்வி டிப்ளோமா- PGDE பட்டம் பெறும் திருமதி. வினோக்குமார் சோமகோஜன் (BFA) அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best WIshes

வாழ்த்துவோர்,
கல்லூரிச் சமூகம்
யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

(9826)


## இராசி பலன்

18.07.2017
(ஆடி 02, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
நவமி காலை 6.38 மணிவரை
தசமி பின்னிரவு 4.24 மணிவரை
பரணி முன்னிரவு 7.11 மணிரை
சுபநேரம் 10.30-12.00 மணிவரை
இராகுகாலம் 3.00-4.30 மணிவரை
முதலாம் ஆடிச் செவ்வாய் வளவன்

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | சந் | | சுக் |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சித்திரை,சுவாதி<br>இரவு 1.30 மணிக்கு<br>இடப- சந் | | சூரி செவ் புத |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**மேடம்:** திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள்,

**இடபம்:** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சயன சுகக் குறைவான நாள்.

**மிதுனம்:** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், போசன சுகமுண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள்.

**கடகம்:** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**சிம்மம்:** சாமர்த்தியமான பேச்சுக்களால் சாதனை படைக்கும் நாள், மறைமுகப் போட்டிகள் அகன்று வியாபார விருத்தியுண்டு, பயணங்கள் கைகூடும்.

**கன்னி:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், தொழிலில் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, பணவிரயம் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்

**துலாம்:** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்:** பணத்தேவைகள் பூர்த்தியாகும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பூர்வீக சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**தனுசு:** உறவுகளின் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், மனதில் உற்சாகமும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும்

**மகரம்:** உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்லயோசனை ஒன்றைக் கூறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பயணங்களால் பலனுண்டு

**கும்பம்:** சகோதர வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும்,பக்குவமாக பேசி காரியம் சாதிப்பீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு

**மீனம்:** பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும் வாக்கு மேன்மையுண்டு, முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





காரைநகர் யாழ்ரன் கல்லூரி கனிஷ்ட பாடசாலையின் புதிய கட்டடத்திறப்பு விழா அண்மையில் பாடசாலை அதிபர் வே.முருகமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நிறைஜா மயூரதாஸன் ஆகியோர் இணைந்து கட்டடத்தினை நாடாவெட்டி திறந்து வைப்பதைப் படங்களில் காணலாம். (படங்கள்:-காரைநகர் செய்தியாளர்)

# முன்பள்ளி ஆசிரியர் சங்க ஆட்சி மன்றக் கூட்டம்



வடமாகாண முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் மாகாண மட்ட ஆட்சி மன்றக் கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண முன்பள்ளி ஆசிரியர் சங்க யாப்பிற்கு அமைய இவ்வருடத்திற்கான நிர்வாகத் தெரிவு செய்யப்பட்டது. இதில் தலைவராக திருமதி யோ.கேம நளினி, செயலாளராக செல்வி ச.ஜெகதாரணி, நிதிச்செயலாளராக செல்வி நா.நிரஞ்சனா, உபதலைவராக திருமதி சி.அருள்வேல் நாயகி, உப செயலாளராக திருமதி சி.சிவகௌரி,உப நிதிச் செயலாளராக திருமதி பற்றிக் மேரி பவுலின் குரூஸ், நிர்வாக செயலாளராக திருமதி த.மரியதர்சினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் கிளை அலுவலர்களாக திருமதி. ஜெ.கௌசலா, செல்வி தி.ஜெகதீஸ்வரி, திருமதி த.கணேஸ்வரி, செல்வி.கா.விஜயகுமாரி, திருமதி.ஜி.எப்.பாரதி, கணக்காய்வாளராக திருமதி பா.கலைவாணி, திருமதி ஜெ.வடிவாம்பிகை, போஷகராக சுந்தரம் டிவகலாலா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## மும்மொழி தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.சென்.றொக்றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் மும்மொழி தின விழா இன்று முற்பகல் 10 மணிக்கு அதிபர் எ.சூசைநாதன் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எப். எஸ். அன்ரன் கலந்து கொள்வார். (இ-10-108)




# நூல் வெளியீட்டு விழா



(யாழ்ப்பாணம்)

யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் எழுத்தாளர் சி.ராஜினிதேவியின் ''தடம் மாறும் பாதைகள்'' சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா அதிபர் ச.வேலழகன் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (இ-10-106)

# பெண்களைப் படம் எடுக்கும் நபர்கள் குறித்து மக்கள் விசனம்

(கரணவாய்)

வடமராட்சி வதிரிப் பகுதியில் வீதியால்செல்லும் பெண்களை தொலைபேசியில் சிலர் படம் எடுப்பதாக பொது மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் முடிவடையும் நேரங்களில் வதிரி சந்தியினை அண்மித்த பகுதிகளில் சிலர் கூடுகின்றனர்.

அவ்வாறு கூடுவோர் வீதிகளால் செல்லும் பெண்களை தமது தொலைபேசியில் படம் எடுப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

எனவே இந்த விடயத்தில் நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி கவனம் செலுத்த வேண்டும் எனப் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-60)

# மயானங்களை அகற்றக் கோரி போராடும் மக்களுக்கு ஆதரவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையே! மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் உள்ள மயானங்களை அகற்று, மக்களின் வாழ்விடச் சூழலைப் பாதுகாத்து கிராமியக் கட்டமைப்பை வலுப்படுத்து என்ற கோரிக்கையை முன்வைத்து கடந்த 12.07. 2017 புதன்கிழமை மு.ப. 10 மணி தொடக்கம் தொடர்ந்து 6ஆவது நாளாகத் தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்தினை புத்தூர் மேற்கு கலைமதி கிராம மக்கள் மன்ற மண்டபத்திற்கு முன்னால் மேற்கொண்டு வருகின்ற மக்களுக்கு ஆதரவு வழங்குமாறு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு அனைத்து அரசியல் கட்சிகள், சமூக அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், வர்த்தக சங்கங்கள், இளைஞர் அமைப்புக்கள், விளையாட்டுக்கழகங்கள்,மாணவர் அமைப்புக்கள், சமூக ஆர்வலர்கள் ஆகியோரைக் கேட்டுக்கொள்கின்றது.

யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் மக்கள் குடியிருப்புக்களுக்கு மத்தியில் அமைந்துள்ள மயானங்களால் பல்வேறு சுற்றுச் சூழல், சுகாதாரம் மற்றும் உளவியற் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் மக்களும் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பும் ஏனைய அமைப்புக்களுடனும் இணைந்து முன்னெடுத்து வருகின்ற இக் கால வரையறையற்ற தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்தினை இதுவரை எந்தவொரு மக்கள் பிரதிநிதிகளோ, அதிகாரிகளோ கவனத்தில் எடுக்காமையை வன்மையாகக் கண்டிப்பதுடன் அனைத்து மக்களையும் இப்போராட்டத்திற்கு ஆதரவுதருமாறும் அந்த அமைப்பின் இணைச் செயலாளர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கோரியுள்ளார். (இ-3)

# நிறுவைகள் அளவைகள்,நிறுக்கும் கருவிகள் முத்திரையிடல் நிகழ்வு

யாழ். மாவட்ட செயலகத்தின் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவினால் 2017ஆம் ஆண்டுக்கான நிறுவைகள் அளவைகள், நிறுக்கும் கருவிகள் முத்திரையிடல் நிகழ்வு வலி.கிழக்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் எதிர்வரும் தினங்களில் இடம்பெறவுள்ளது.

எனவே வலி-கிழக்கு பிரதேசத்தை சேர்ந்த சகல வர்த்தகர்களும் (ப.நோ.கூ சங்கங்கள், சந்தை வியாபாரிகள் உட்பட) நிறுவைகள் அளவைகள், நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிட்டுக் கொள்ளுமாறு சபையின் செயலாளர் யுஜெலீபன் அறிவித்துள்ளார்.

20.07.2017 மற்றும் 21.07.2017 திகதிகளில் காலை 9 மணி தொடக்கும் மாலை 3 மணிவரையும் வலி. கிழக்கு பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலகத்திலும், 24.07.2017 மற்றும் 25.07.2017 திகதிகளில் காலை 9 மணி தொடக்கும் மாலை 3 மணிவரையும் வலி. கிழக்கு பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலகத்திலும், 27.07.2017 மற்றும் 28.07.2017 திகதிகளில் காலை 9 மணி தொடக்கும் மாலை 3 மணி வரையும் வலி.கிழக்கு பிரதேச சபையின் உரும்பிராய் உப அலுவலகத்திலும் இடம்பெறவுள்ளது. (இ

# வில்லூன்றி விநாயகர் ஆலய ஆடி அமாவாசை நிகழ்வுகள்

வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய ஆடி அமாவாசை நிகழ்வுகள் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது. காலை 7 மணிக்கு வசந்த மண்டப பூஜைகள் இடம்பெற்று காலை 8 மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்த வாரி இடம்பெறவுள்ளது.


அதன்பின் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# பரீட்சை அனுமதி அட்டை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். வரணி மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டை வழங்கல் இன்று காலை 9 மணிக்கு இடம்பெறும். உயர்தரப் பரீட்சையில் தோற்ற இருக்கும் அனைத்து மாணவர்களும் பாடசாலை அலுவலகத்தில் தமது பரீட்சை அனுமதி அட்டைகளை பெற்றுக் கொள்ளுமாறு பாடசாலை அதிபர் க.செல்வவிநாயகம் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-10-103)

# வல்லைப் பாலத்தடியில் 70 தோட்டாக்கள் மீட்பு!



வடமராட்சி வல்லைப் பாலத்திற்கு அருகாமையில் காணப்பட்ட ரி-56 ரக துப்பாக்கிக்குரிய தோட்டாக்கள் ஒரு தொகுதி நெல்லியடிப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. நேற்றுக் காலை மேற்படி பகுதியில் ஒரு தொகுதி தோட்டாக்கள் காணப்படுவதாக புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து நெல்லியடிப் பொலிஸார் அப்பகுதிக்குச் சென்றனர். அப்போது பாலத்திற்கு அருகாமையில் 70 வரையான ரி-56 துப்பாக்கிக்குப் பயன்படுத்தும் தோட்டாக்களை பொலிஸார் மீட்டுள்ளனர். (இ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

79

# நம்பிக்கையில்லாத் தீர்மானம் நடந்தது என்ன?

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு ஆதரவாக நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் கூடிய பல்லாயிரக்கணக்கானவர்கள் பேரணியாக முதலமைச்சரின் வாசஸ்தலத்தை நோக்கிச் சென்றனர்.

பதாகைகளைத் தாங்கிவாறு கோசங்கள் எழுப்பிய வண்ணம் பேரணி நகர்ந்தது. முன்பு ஒருபோதும் இப்படி நடந்ததில்லை என்று பிரமிக்க வைக்கும் அளவில் பல்லாயிரக்கணக்கானவர்கள் பேரணியில் பங்கு கொண்டனர். பேரணியில் வந்தவர்கள்,

"எங்கள் முதலமைச்சர் விக்னேஸ்வரன், எங்கள் தலைவர் விக்னேஸ்வரன், ஏக தலைவன் விக்னேஸ்வரன்"

எனக் கோசம் எழுப்பி ஆர்ப்பரித்தனர். கூடவே, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்களையும் கண்டித்து கோசம் எழுப்பப்பட்டது. நல்லூர் கோயில் வீதி வழியாக நல்லூர் கைலாச பிள்ளையார் கோயிலைக் கடந்து பேரணி சென்று கொண்டிருந்தது.

போக்குவரத்துப் பொலிஸார் வீதியில் இடையூறுகள் ஏற்படாத வண்ணம் தமது கடமையைச் செய்து கொண்டிருந்தனர்.

ஊடகவியலாளர்கள் ஓடித் திரிந்து பேரணியைப் பதிவு செய்வதில் அதி தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். முதலமைச்சர் விக்னேஸ்வரனின் வாசஸ்தலத்தை பேரணி வந்தடைந்த போது,

எங்கள் தலைவன் விக்னேஸ்வரன் என்ற கோசம் வானைப் பிளந்தது.

வாசஸ் தலத்தின் நுழைவாயிலில் மிகப் பெரும் நெருக்கடி ஏற்பட்டது. வாசஸ்தலத்திற்கு முன்பக்கமாக இருக்கக் கூடிய முற்றுப் பெறாத மாடி வீட்டின் மேற்தளத்தில் ஏகப்பட்டவர்கள் ஏறிக்கொண்டனர். அவர்களுடன் ஊடகவியலாளர்களும் இடம்பிடித்துக்கொள்ள, அனைவரையும் பார்த்துப் பேசுவதற்கு வசதியாக உயர்ந்த மேசையின் உதவியுடன் வாசஸ்தலத்தின் நுழைவாயிலில் அதிரடியாக மேடை அமைக்கப்பட்டது.

முதலமைச்சர் விக்னேஸ்வரனின் உரையை உரக்கச் சொல்வதற்கு ஒலிபெருக்கி தயாராயிற்று.

முதலமைச்சரின் மெய்ப்பாதுகாப்பாளர்கள் தமது கடமையைச் செம்மையாகச் செய்ய வேண்டும் என்பதில் மிகவும் விழிப்பாக இருந்தனர்.

பல்லாயிரக்கணக்கானவர்களின் கூட்டத்தால் நல்லூர்க் கோயில் வீதி திணறிக்கொண்டது.

வாசஸ் தலத்தில் இருந்து முதலமைச்சர் அழைத்து வரப்பட்டார். கூடியிருந்த பல்லாயிரக்கணக்கானவர்கள் ஐயா என்று எழுப்பிய ஒலி அங்கு நின்ற அத்தனை பேரையும் நெக்குருக வைத்தது.



## தமிழர் தலைவிதி எப்படியாகும்?

தன்மீது பாசம் கொண்ட தமிழ் உறவுகளைக் கூப்பிய கரத்துடன் முதலமைச்சர் சந்தித்தார். அவரின் இதயம் நெகிழ்ந்து போனது.

கண்கள் கண்ணீராய் சொரிய எண்ணிய போதிலும் தான் கண்ணீர் சிந்தினால் அங்கு கூடி நிற்கும் பல்லாயிரக் கணக்கானவர்களும் நிச்சயம் கண்ணீர் சிந்துவர் என்பதால் தெண்டித்து கண்ணீரைக் கட்டுப்படுத்த முதல்வரின் விழிகள் முயற்சித்தன. இருந்தும் அவரின் கண்களில் ஈரம் தெரிந்தது.

அவர் ஒலிவாங்கியை கையிலெடுத்து உரையாற்ற ஆரம்பித்தார்.

*அன்பார்ந்த தமிழ் மக்களே!*

இங்கு திரண்டிருக்கின்ற ஜனக்கூட்டத்தைப் பார்க்கும் போது, இதுவரை காலமும் நாங்கள் செய்ததற்கு ஒரு அர்த்தம் இருக்கின்றது என்பதை உணரக் கூடியதாக இருக்கின்றது. இந்தச் சேவையைத் தொடர்ந்தும் செய்து கொண்டே வருவேன். நாங்கள் எங்களுடைய கடமைகளைச் செய்து கொண்டு வரும் போது பலருக்கு பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

அதனால் தான் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா அண்மையில் இங்கு வந்து சென்ற போது விரைவில் விக்னேஸ்வரன் தன்னுடைய பதவியைப் பறிகொடுத்து விடுவார் என்று கூறியிருந்தார்.

அவர் அவ்வாறு கூறும் போது நான் நினைத்தேன் எனக்கும் அவருக்கும் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை, அவர் எதற்காக இவ்வாறு கூறுகின்றார் என்று. இந்த வேளையில் தான் இதன் பின்னணியில் எனக்கு எதிராக கொழும்பில் சதித் திட்டம் ஒன்று தீட்டப்பட்டிருப்பதை உணர முடிந்தது. அதனால் தான் அவர் அப்படி கூறியுள்ளார்.

அந்தச் சதி எவ்வாறு தீட்டப்பட்டது என்றால், சதியில் ஈடுபட்டவர்களைப் பற்றி எனக்குக் கவலையில்லை. அதாவது எமது அமைச்சர்களுக்கெதிரான குற்றச்சாட்டுகள் குறித்து அறிக்கைகள் வெளிவரவிருக்கின்றன. அது தொடர்பில் முதலமைச்சர் இரண்டு வழிகளில் முடிவெடுத்தாக வேண்டும்.

அமைச்சர்களைக் காப்பாற்றுவதற்காக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இல்லையென்றால் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். அதில் எது நடந்தாலும் அதைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வது என்று அவர்கள் நினைத்திருந்தார்கள்.

அதாவது அவர்களைக் காப்பாற்றினால் குற்றம் செய்தவர்களை இவர் காப்பாற்றி விட்டார் என்று அதை ஒரு காரணமாகக் காட்டி முன்னோக்கியிருப்பார்கள். இப்போது அவர்களைத் தண்டிக்கப் போய், அவர்களைத் தண்டித்தால் அது ஒரு பிழை என்ற முறையிலே இப்பொழுது ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஆகவே இதில் எது நடந்திருந்தாலும் என்னை வெளியேற்றி விட வேண்டும் என்ற எண்ணத்திலே தான் அவர்களுடைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. அவர்களுடைய எண்ணத்துக்கான பதிலை நீங்கள் கூறிவிட்டீர்கள்.

மக்களுடைய பிரச்சினைகள் பல இருக்கின்றன. அவற்றை நாங்கள் தீர்க்க முனைகின்ற போது எமது வடமாகாண சபையிலும் வேறு இடங்களிலும் தேவையில்லாத விடயங்களைப் பேசிப் பேசிக் காலத்தை வீணடித்து விட்டோம். அந்த அடிப்படையிலே தான் என் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது என்ன நடக்கிறது? எவ்வாறு போகப் போகிறது? என்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை.

ஒன்றே ஒன்றை மட்டும் நான் உங்களுக்குக் கூறுவேன். நாங்கள் தொடர்ந்தும் எங்களுடைய கடமைகளைக் கட்டாயம் செய்வோம். கடமையைச் செய்யும் ஒருவனுக்குத் தோல்வியும் இல்லை. வெற்றியும் இல்லை. அந்த நிலையில் இருந்து நாங்கள் எங்களுடைய கடமைகளைச் செய்ய வேண்டும் என்று தான் விரும்புகிறோம்.

ஒருசில விடயங்களை நான் இந்த இடத்திலே குறிப்பிட விரும்புகிறேன். இவ்வாறான விசாரணைகள் இடம்பெற வேண்டும் என்ற கோரிக்கைகளை விடுத்ததும் எங்களுடைய உறுப்பினர்கள்தான். தவறுகள் நடைபெறுவதாக எனக்கு நேரடியாக சொல்லியிருந்தால் கட்டாயம் நடவடிக்கை எடுத்திருப்பேன்.

அதைவிட்டுத் தங்கள் பெயர் பத்திரிகைகளில் வரவேண்டும் என்பதற்காக வட மாகாண சபையை நாறடித்து இயக்கியதனால் தான் நாங்கள் இந்த விசாரணைக்குழுவை அமைத்தோம்.

விசாரணைக்குழு இரண்டு பேரைக் குற்றவாளிகள் என்று தீர்த்தது. மற்றைய இரண்டு பேர் மீதான குற்றச்சாட்டுக்களும் நிரூபிக்க முடியாமல் போய் விட்டது. அவர்கள் மீதான முறைப்பாட்டாளர்கள் விசாரணைகளுக்கு வரவில்லை. அதனால் அவர்கள் விடுவிக்கப்பட்டதால், அவர்கள் குற்றவாளிகள் இல்லை என கூறித்திரிகிறார்கள் என்றும் அவர்கள் குற்றவாளிகள் அல்ல என்றும் அர்த்தம் இல்லை. அதைவிட அவர்கள் சம்பந்தமாக வேறு வேறு குற்றங்களும் அவர்கள் மீது இப்போது கிடைத்திருக்கின்றன. இது சம்பந்தமாக மேலும் ஒரு விசாரணை நடைபெறும்.

இது வட மாகாணத்தின் முதலாவது மாகாண சபை. இந்த சபையிலே ஊழல் சம்பந்தமாக நாங்கள் நடவடிக்கை எடுக்காமல் விட்டால் தொடர்ந்தும் இதைத்தான் நாங்கள் சந்திக்க வேண்டிவரும். இதற்குரிய நடவடிக்கைகளை நாங்கள் எடுத்துக் கொண்டு வருகிறோம். இவ்வாறான சனக்கூட்டம் எங்களுக்குச் சார்பாக நடக்கும் போது, எங்களுடைய பாதை சரியென்று எனக்குப்படுகிறது.

*அன்பார்ந்த தமிழ் மக்களே!* உங்களுடைய நலன் சார்ந்த சகல நடவடிக்கைகளையும் நான் எடுப்பேன் என்று உங்களுக்கு உறுதிமொழி அளிக்கின்றேன் என தெரிவித்தார்.

(வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலத்திற்கான அரசியல் யாப்பை உருவாக்குவதற்கு முயற்சித்து வருகின்றோம்

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

நிம்மதியான எதிர்காலத்திற்கான அரசியல் யாப்பை உருவாக்க கூட்டமைப்பும் நாமும் முயற்சித்து வருகின்றோம் என நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் வடிகால் அமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிதுள்ளார்.

வவுனியா முஸலிம் மகா வித்தியாலயத்தில் அண்மையில் நீர் சுத்திகரிப்பு தொகுதியை கையளித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர்,

இந்த அரசின் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை காணுதலாகும். அதில் வடக்கு மாகாணம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வழங்குவதில் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது மிக பின் தங்கிய நிலையில் இருந்ததை அவதானித்து இவ்வாறான வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

யாழ்.மாவட்டத்திற்கும் புதிய நீர் விநியோகத்திட்டங்களை அறிமுகப்படுத்தும் அதேநேரம் நாட்டில் முதன் முதலாக கடல் நீரை சுத்திகரித்து வழங்குகின்ற செயற்றிட்டத்தை சுமார் 250 மில்லியன் டொலர் செலவு செய்து அமுல்படுத்த தயாராகிக் கொண்டிருக்கின்றோம்.

அதேபோல் தீவுப்பகுதிகளுக்கும் வேறு வேறான திட்டங்களை அறிமுகப்படுத்தும் செயற்பாடுகளும் நடை பெற்றுக்கொண்டிருக்கின்றது. ஆனையிறவு கடல் நீர் ஏரியில் இருந்தும் கடல் நீரை சுத்திகரித்து வழங்கும் செயற்றிட்ட அறிக்கையும் தற்போது தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இவ்வாறு பல செயற்பாடுகளை முன்னெடுத்து வடமாகாணத்தின் குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை காண்பதிலேயே நாம் மிக முனைப்புடன் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம்.

அத்துடன் ஏனைய அபிவிருத்தி வேலைத் திட டங்களில் எனது அமைச்சு செயற்பட்டு வருகின்றது. பாதை அபிவிருத்தி நகர அபிவிருத்தி திட்டங்களிலும் எங்களால் இயன்றளவு செயற்படுத்தி வருகின்றோம். அதற்கு ஒத்துழைப்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் மாகாணசபை உறுப்பினர்கள் உட்பட வட மாகாணசபையும் ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது.

முதலமைச்சர் செயலகமும் சில செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. கேள்விப்பத்திரம் கோரி ஒரு வருடத்திற்குள் செய்து முடிக்க வேண்டிய நெருக்கடிகளை எல்லாம் தீர்த்து வைக்கும் முயற்சியில் வடமாகாண முதலமைச்சரின் செயலகத்தின் அனுசரணை தேவைப்படுகின்றது. ஆகவே அதற்கான செயற்பாடுகளையும் நாம் சேர்த்து செய்து கொண்டு போகின்றோம்.

இந்த அரசாங்கத்தின் பங்காளிகள் என்ற அடிப்படையில் தமிழ்தேசியக் கூட்டமைப்பினரும் நாங்களும் இந்த நாட்டிற்கு நிரந்தரமான நிம்மதியான எதிர்காலத்தை நாடிய அரசியல் யாப்பு எங்களுடைய அபிலாசைகளையும் தீர்த்து வைக்கும் வகையில் அமைப்பதற்கான முயற்சிகளில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றோம் என்றார்.(2-250)

# சுயதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்க இரு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் பாரதிநகர் கிராமத்தில் வதியும் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் சுயதொழில் முயற்சி மேற்கொள்வோரை ஊக்குவிப்பதற்காக கனடா கல்வி அறக்கட்டளை நிலையத்தால் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஶ்ரீஸ்காந்தராசாவினால் மூன்று இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இப்பணமானது கிராமத்தின் கிராம அபிவிருத்தி அமைப்பின் ஊடாக இலங்கை வங்கி கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான அங்குரார்ப்பண கூட்டம் அண்மையில் கிராம சேவகர் அலுவலகத்தில் நடைபெற்றது. முதல்படியாக இரு வேலைத்திட்டங்கள் அடையாளப்படுத்தப்பட்டு ஏற்கனவே தையல் வேலையில் ஈடுபட்டுள்ள 7 பெண்கள் முதலாவது திட்டத்திற்கு அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தைப்பதற்கான மூலப் பொருட்களை மொத்தமாக கொள்வனவு செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்படும். இரண்டாவது திட்டமாக கிராமத்தில் வாழும் ஒரு குடும்பம் ஒவ்வொரு நாளும் 25 லீற்றர் பாலினை காய்ச்சி அதிலிருந்து பெறப்படும் ஆடையில் இருந்து நெய் தயாரிப்பதோடு பாலினை தயிராக்கி விற்பனை செய்கின்றனர். இவர்களுக்கு நெய் பிரித்தெடுக்கும் இயந்திரத்தை கொள்வனவு செய்து வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது .

இதன் ஊடாக பதனிடும் பாலின் அளவு அதிகரிப்பதோடு மேலும் இருபிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கவும் வெண்ணெயை வேறாக்கி பாலில் இருந்து யூஸ், ஐஸ்கிறீம், டொபி என்பன உற்பத்தி செய்வது எனவும் திட்டமிட ப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான நிதி நடவடிக்கைகள் யாவற்றுக்கும் பிரதேச செயலாளரே பொறுப்பாக இருப்பார். பரீட்சாத்தமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் ஏனைய கிராமங்களின் முயற்சியாளர்களுக்கும் இவ்வாறான திட்டங்களுக்கும் நிதியுதவி வழங்கப்படும் என நிதி வழங்குநர்கள் உறுதியளித்துள்ளனர். (2)




# பெரியகட்டு அந்தோனியார் ஆலயத்திருவிழா 28ம் திகதி

மன்னார் மறை மாவட்டத்தின் புனித ஸ்தலங்களில் ஒன்றான பெரியகட்டு தூய அந்தோனியார் ஆலய திருவிழாவிற்கான முன்னேற்பாடுகள் குறித்து ஆராயும் விசேட கலந்துரையாடல் கடந்த 14 ஆம் திகதி நடைபெற்றது.

உதவி பிரதேச செயலாளர் கே.முகுந்தன் தலைமையில் வெண்கல செட்டிக் குளம் பிரதேச செயலகத்தில் குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது.

எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள திருவிழா ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி திருவிழா திருப்பலியுடன் நிறைவடையவுள்ளது.

குறித்த திருவிழாவிற்கு வரும் பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு ஆலயப் பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டங்கள் குறித்து இந்தக் கலந்துரையாடலின்போது ஆராயப்பட்டுள்ளது.


மேலும் குடிநீர், சுகாதாரம், பாதுகாப்பு, போக்குவரத்து உள்ளிட்ட அவசர தேவைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

இதேவேளை குறித்த கலந்துரையாடலின்போது மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அன்ரனி விக்டர் சோசை, செட்டிக் குளம் பங்குத்தந்தை ஜெயபாலன் குரூஸ், வெண்கள பிரதேச செயலக அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், பொலிஸ் அதிகாரிகள், உட்பட பலர்கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# குளங்களின் நீர்மட்டம் குறைவடைவதால் நீர்த் தேவைகளை பூர்த்தி செய்வதில் சிரமம்

(பரந்தன்)

முல்லைத்தீவில் குளங்களின் நீர் மட்டம் வெகுவாக குறைவடைந்து செல்வதனால் விவசாயம், நன்னீர் மீன்பிடி, நிலத்தடி நீர், விலங்குகளுக்கான குடிநீர் உள்ளிட்ட நீர்த்தேவைகளை பூர்த்தி செய்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.



முல்லைத்தீவின் முக்கிய குளங்களான முத்தையன் கட்டுக் குளம், வவுனிக்குளம் என்பவற்றின் நீர் மட்டம் அடிநிலையைச் சென்றடைந்துள்ளதன் காரணமாக இக்குளங்களின் கீழான விவசாயச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

அத்தோடு இக்குளங்களை நம்பியுள்ள ஆயிரத்துக்கும் மேலான நன்னீர் மீன்பிடி குடும்பங்கள் வறுமை நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்திலே தொடர்கின்ற வரட்சி காரணமாக பல குளங்களின் நீர் மட்டம் கீழ் நிலையைச் சென்றடைந்திருப்பதன் காரணமாக நன்னீர் மீன்பிடி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதுடன் கால்நடைகளும் குடிநீருக்கு அலைகின்ற அவலம் காணப்படுகின்றது.

இந்நிலையில் இக்குளங்களில் பிடிக்கின்ற மீன்களை நம்பி பல குடும்பங்கள் வாழ்கின்ற நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக குளங்களில் இருந்து மீன்களை பிடிக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. சிறுபோக நெற்செய்கையும், கைவிடப்பட்டுள்ளது.

நன்னீர் மீன்பிடி பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பல குடும்பங்கள் வறுமை நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளதன் காரணமாக வரட்சி நிவாரணத்தினை வழங்குவதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பல பொது அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன. (2-312)

# ஒட்டுசுட்டானில் யானைகள் அட்டகாசம்; 2019ல் மின்சாரவேலி அமைக்கப்படும்



முல்லைத்தீவு- ஒட்டுசுட்டான் தட்டார்மலை, பெரிய சாளம் பன் ,முத்தையன் கட்டு ஆகிய கிராமங்களில் உள்ள மக்கள் தொடர்ச்சியாக யானைகளின் தொல்லையை எதிர்கொண்டு வருவதாக தெரிவிக்கின்றனர்.

கடந்த மூன்றாண்டுகளாக குறித்த பகுதிகளில் யானைகளின் தொல்லையைக் கட்டுப்படு த்துவதற்கு மின் சாரவேலி அமைப்பதாக முடிவு எடுக்கப்பட்ட போதிலும் 2019 ஆம் ஆண்டில்தான் மின்சார வேலி அமைக்கப்படும் என அதிகாரிகளினால் தெரிவிக்கப்படு கின்றது.

பயன்தரு தென்னை, பலா, மா ஆகிய மரங்கள் உட்பட அனைத்து மரங்களையும் யானைகள் கிராமங்களுக்குள் புகுந்து அழித்து வருவதாகவும் ஒட்டு சுட்டான் பிரதேச செய லகத்தில் நடைபெற்ற கூட் டங்களில் இது தொடர்பாக பொதுமக்களினால் முறைப் பாடுகள் முன்வைக்கப்பட்டன. எனினும் யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள்எடுக்கப்படவில்லைஎன தெரி விக்கப்படுகின்றது.

இதேவேளை ஒட்டுசுட்டான்-மாங்குளம் வீதியில் யானைகளின்நடமாட்டம்காரணமாக பிற்பகல் 4 மணிக்கு மேல்மக்கள்பயணிப்பதில்அச்சம் கொண்டு ள்ளனர். மேழிவனம், கரிப் பட்டமுறிப்பு, ஒலுமடு, அம்ப காமம் ஆகிய கிராமங்களில் தொடர்ச்சியாக யானைகளின் தொல்லை காணப்படுவதாகவும் இதனைக் கட்டுப்ப டுத்துவதற்கு வன ஜீவராசிகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் பொது மக்களினால் தெரிவிக்கப் படுகின்றது. (2-250-281)



பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழகமும் சமூக ஆர்வலர்கள் ஆகியோர் இணைந்து வவுனியாவில் சிரமதானப் பணியை முன்னெடுத்தனர். வவுனியாவில் அண்மைக்காலமாக அதிகளவான டெங்கு நோயாளர்கள் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வரும் நிலையில் வவுனியாவில் இந்த சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது. நாட்டில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் மரணமடைந்தும் வைத்தியசாலையில் [illegible] மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கோடு முழுநாள் சிரமதான[illegible] பிரண்ட்ஸ் விளையாட்டுக்கழகமானது குட்செட்வீதி, புகையிரத நிலைய வீதி என்பவற்றில் இச்சிரமதானத்தில் ஈடுபட்டிருந்தனர். (2-250)

# சமுதாயம் சார் சீர்திருத்த கட்டளையின் கீழ் 30 பேர்

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற கட்டளைக்கு அமைவாக சமுதாயம் சார் சீர்திருத்தக் கட்டளைக்கு 30 பேர் உட்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுபோதையில் வாகனம் செலுத்தியமை, கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனைகள் தொடர்பில் கைது செய்யப்பட்டமை தொடர்பான வழக்குகளுடன் தொடர்புபட்டவர்களே. இவ்வாறு சமுதாயம் சார் சீர்திருத்த கட்டளைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கட்டளைக்கு உட்படுத்தப்பட்டுள்ளவர்கள், எதிர்காலத்தில் குற்றங்களிலிருந்து விடுபடும் பொருட்டு, தனிநபர் ஆலோசனைகள், உளவளத்துறை தொடர்பான கருத்தரங்குகள், சமய ஆலோசனைகள், சிரமதானப் பணிகள், நன்னடத்தை தொடர்பான பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என நீதிமன்ற வளாகத்தில் இயங்கி வரும் சமுதாயம் சார் சீர்திருத்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்கான ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று நடைபெற்றது



கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்கான ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகியது

இக்கூட்டத்திற்கு இணைத் தலைவர்களான இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் தலைமை யில் இடம்பெற்றது.

ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் மக்கள் பிரதிநிதிகளாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்கான ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான சித்தாத்தன், டக்ளஸ் தேவனந்தா, எம்.ஏ.சுமந்திரன் மற்றும் மாகாண சபை அமைச் சர்களில் கல்வி, சுகாதாரம், கடற்தொழில் ஆகியவற்றிற்கான அமைச்சர்கள் மூவர் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் பலர் கலந்து கொள்ளாமல் அவர்களுக்கான ஆசனங்கள் வெறுமனையே கிடந்தது.

தொடர்ந்து இக் கூட்டத்தில் இவ்வாண்டு முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைகளுக்கு ஒருங்கிணைப்பு குழுவின் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் வேலைத் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன் ஜனாதிபதியின் நிலமெகவர என்ற நடமாடும் சேவையில் மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு 2380 பேர் வருகை தந்தபோது 2 ஆயிரத்து 308 பேர் சேவைகளை நிவர்த்தி செய்து சென்றிருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (2-312)




# கரைச்சி பிரதேச சமுர்த்தி பயனாளிகள் கவனயீர்ப்பு

## தெரிவு செய்யப்பட்டு நிராகரிக்கப்பட்டமை குறித்து

(பரந்தன்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சமுர்த்தி பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்டு பாதிக்கப்பட்டவர்கள் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.



குறித்த போராட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் கரைச்சிப் பிரதேச செயலகம் முன்பாக நடைபெற்றது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்திப் பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்டு பின்னர் பல்வேறு காரணங்களால் தாம் நிராகரிக்கப்பட்டமை தொடர்பில் பாதிக் கப்பட்டுள்ளதாக தெரிவித்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கரைச்சி பிரதேச செயலாளர் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் கலந்துரையாடியதுடன் இம் முடிவுகள் தம்மால் எடுக்கப்பட்டவை அல்ல. இதில் உள்ள குறைபாடுகளை மீள் பரிசீலனை செய்வதற்கு குழு ஒன்று உள்ளது. அக் குழு உங்கள் கிராமத்துக்கு வருகைதரும் போது நீங்கள் தெரிவிக்கலாம். அதன் பின்னர் அதனை நாம் பார்வையிட்டு குறைகளை நிவர்த்தி செய்யலாம் என தெரிவித்ததை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. (2-312)

# இளைஞன் தாக்குதல்; வயோதிபர் மரணம்

(குருமன்காடு)

வவுனியாவில் நேற்று முன்தினம் இரவு 9.45 மணியளவில் இளைஞர் ஒருவர் வயோதிபர் மீது தாக்குதல் நடத்தியதில் வயோதிபர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

வவுனியா நேரியகுளம் பகுதியில் வயோதிபருக்கும் இளைஞர் ஒருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு இறுதியில் கைகலப்பாக மாறியுள்ளது. இதன்போது இளைஞன் தனது கையிலிருந்த தலைக்கவசத்தினால் வயோதிபர் மீது தாக்கியதில் தலையில் பலத்த காயம் அடைந்த வயோதிபர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில், நேரியகுளம் பகுதியைச் சேர்ந்த சிமைல் தாம்டீன் (வயது-64) என்ற வயோதிபரே உயிரிழந்துள்ளார். தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் 18 வயதுடைய இளைஞன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் நேரியகுளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக செட்டிகுளம் பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (2-250)

# வவுனிக்குளத்தின் நீர் மட்டம் குறைவடைகின்றது பல இலட்சம் மீன்கள் இறக்கும் அபாயநிலை

## 100 இற்கு மேற்பட்ட மீனவ குடும்பங்கள் பாதிப்பு



வவுனிக்குளம் நீர்ப்பாசனக் திணைக்களத்திற்குட்பட்ட வவுனிக் குளத்தின் நீர் மட்டம் தற்போது நிலவி வரும் கடும் வரட்சி காரணமாக, சடுதியாக குறைவடைந்து வருவதனால் பல இலட்சம் மீன்கள் இறக்கும் அபாய நிலையை எட்டியுள்ளதுடன் இக் குளத்தை நம்பியுள்ள 100 மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் தமது வாழ்வாதாரத் தொழில் வாய்ப்புக்களை இழந்து வறுமையுடன் போராடி வாழும் அவலநிலை ஏற்பட்டுள்ளதாக துணுக்காய், பாண்டியன்குளம் மக்கள், அபிவிருத்தி ஒன்றியத்தின் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனிக் குளமானது துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய இரண்டு பிரதேச செயலக பிரிவுகளிலும் வாழும் சுமார் 4 ஆயிரம் விவசாயக் குடும் பங்களினது 6 ஆயிரத்து 500 ஏக்கர் விவசாய நடவடிக்கைகளுக்கு நீரை வழங்கி வருகின்றது. அத்துடன் 100 இற்கு மேற்பட்ட மீனவக் குடும்பங்களின் வாழ் வாதாரத்தையும் வளப்படுத்தி வருகின்றது.

இந் நிலையில், கடந்த 2016/2017 கால போக நெற்செய்கையின் போது, ஏற்பட்ட வரட்சி நிலை காரணமாக குளத்தின் நீர் மட்டம் வற்றிப் போனதால் பயிரழிவு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், நடப்பாண்டுக்குரிய சிறுபோக நெற்செய்கையும் குளத்தில் நீர் இல்லாமையால் செய்கையினை மேற்கொள்ள முடியாது போய்யுள்ளது.

இந் நிலையில், தற்போது 26 அடி நீர் கொள்ளளவுடைய வவுனிக் குளத்தின் நீர் மட்டம் தற்போது 05 அடி 05 அங்குலமாக உள்ள நிலையில், நீர் மட்டம் சடுதியாக குறைவடைந்து வருவதால் வடக்கு மாகாண கடற்றொழில் அமைச்சினால் குளத்தில் விடப்பட்ட பல ஆயிரக்கணக்கான மீன் குஞ்சுகள் உட்பட குளத்தில் உள்ள மீன் இனங்களும் நீர் வெப்பம் காரணமாக இறக்கும் அபாயகரமான நிலைமையை எதிர்கொண்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இதேவேளை, இந் நிலைமை எதிர்வரும் மாதங்களில் தொடருமாக இருந்தால் வவுனிக் குளத்தினை அண்டிய மிகப் பெரிய அடர் காட்டில் வாழும் பல தரப்பட்ட பாதுகாக்கப்பட்ட காட்டு விலங்குகளும் குடிநீர் இன்றி இறக்கும் அபாய நிலை தோன்றியுள்ளதாக அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எனவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் மீனவர்களுக்கும் வரட்சி நிவாரணக் கொடுப்பனவுகளை வழங்குவதுடன், நீரைத் தேடி அலைந்து திரியும் காட்டு விலங்குகளை இறைச்சிக்காக வேட்டையாடும் சமூக விரோதிகளிடம் இருந்து பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையையும் துணுக்காய், பாண்டியன் குளம் மக்கள் அபிவிருத்தி ஒன்றியத்தின் பிரதிநிதிகள் விடுத்துள்ளனர். (2-15)

# ஆவணங்களின்றி சட்டவிரோதமாக கடத்தப்பட்ட மாடுகள் சிக்கின

## நெளுக்குளம் பொலிஸாரின் நடவடிக்கையையடுத்து



செட்டிகுளத்தில் இருந்து வவுனியாவிற்கு கடத்துவதற்கு கொண்டு செல்லப்பட்ட மாடுகள் ஏற்றப்பட்ட வாகனம் நெளுக்குளம் பொலிஸார்மறித்து சோதனைசெய்த போது சிக்கியது.

இச் சம்பவம் நேற்றுக் காலை 6.30 மணியளவில் நடைபெற்றது.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

நெளுக்குளம் பாடசாலைக்கு முன்பாக நேற்றுக் காலை மகேந்திரா வாகனத்தை மறித்து சோதனையிட்ட போது சட்ட விரோதமான முறையில் மாடுகள் கொண்டு செல்லப்பட்டதை அறிந்து கொண்ட பொலிஸார் பரிசோதித்த போது ஆவணங்கள், போக்குவரத்து ஆவணங்கள், மாடுகள் பெறப்பட்ட உரிமையாளர்களின் ஆவணங்கள் ஏதும் இன்றி சட்டவிரோதமான முறையில் வவுனியாவிற்கு மாடுகள் கொண்டு செல்வது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

மாடுகள், மகேந்திரா வாகனம் என்பன கைப்பற்றப்பட்டதுடன் வாகனச் சாரதியையும், உதவியாளரையும் கைது செய்தனா். விசாரணைகளின் பின்னர் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்த நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நெளுக்குள பொலிஸார் தெரிவித்தனர்.(2-250)

# வவுனியாவில் ஆடிப்பிறப்பு நிகழ்வுகள்



வவுனியா - தர்மலிங்கம் வீதியிலுள்ள சோமசுந்தரப்புலவர் நினைவுச் சிலையடியில் ஆடிப் பிறப்பு நிகழ்வு நடைபெற்றது.

குறித்த நிகழ்வு நேற்று காலை 8.30 மணியளவில் நடைபெற்றதுடன், வட மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் திணைக் களத்தினால் வவுனியா மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டுள் ளது.

இந்த நிகழ்வில் சோமசுந்தரப் புலவரின் நினைவு உரையை தமிழ் மணி அகளங்கன் நிகழ்த்தியுள்ளாா். வவுனியா விபுலானந்தக் கல்லூரி மாணவர்கள் ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை என்ற பாடலை பாடியதுடன், சோமசுந்தரப் புலவரின் திருவுருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத் தப்பட்டுள்ளது.

ஆடிப்பிறப்பை முன்னிட்டு ஆடிக் கூழ், கொளுக் கட்டை பரிமாறப்பட்டன. இந்த நிகழ்விற்கு பிரதான அனுசரணையினை ஆட்டோ உரிமையாளர் சங்கத்தின் தலைவர் எஸ். ரவீந்திரன், நகரவரியிறுப்பாளர் சங்கத் தலை வா் எஸ். சந்திரகுமார் கண்ணன், செயலாளர் மாணிக்கம் ஜெகன். ஆர் கதிர்காமராஜர் ஆகியோரால் ஏற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை வவுனியா பிரதேச செயலகத்தின் ஆடிப்பிறப்பு நிகழ்வு பிரதேச கலாசார உத்தியோகத்தர் வீ. பிரதீபன் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் த.திரேஸ்குமார், வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராஜா, நகர வரியிறுப்பாளர் சங்கத் தலைவர் எஸ். சந்திரகுமார், செயலாளர் மாணிக்கம் ஜெகன், சமூக ஆர்வலர்கள், பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும் அன்பக மாணவிகளின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதோடு சோமசுந்தரப்புலவரின் புகைபடத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத் தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(2-112-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வல்லிபுர குருக்கட்டுச் சித்திவிநாயகர் மீது பாடப்பட்ட அருட்பேழை இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும் வடமாகாண சபை உறுப்பினருமான அகிலதாஸ் சிவக்கொழுந்து கலந்து கொண்டார். இந் நிகழ்வில் விருந்தினர்களாக ஓய்வு நிலை நீதிபதி இ.வசந்தசேனன். செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் கலந்துகொண்டனர். இறுவெட்டின் முதல் பிரதியை வடமாகாண சபை உறுப்பினர் அகிலதாஸ் சிவக்கொழுந்து பெற்றுக் கொண்டார். (படங்கள்:- மகாலிங்கம்)

# அதிகாரப் பகிர்வு கிடைத்தால் சுகாதாரத்துறை மேம்படும்

## கிழக்கு சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியலமைப்பில் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை மத்திய அரசு முறையாக நடைமுறைப்படுத்தினால் மாகாண சுகாதாரத்துறை அபிவிருத்தியடையும் என கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.முஹம்மத் நஸீர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் சுகாதாரத்துறை எதிர்நோக்கும் சவால்கள் குறித்து, அவர் நேற்று திங்கட்கிழமை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தில், மாகாண நிர்வாகத்தின் கீழ் 13 ஆதார வைத்தியசாலைகளும், மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் நான்கு வைத்தியசாலைகளும் என மொத்தமாக 17 ஆதார வைத்திய சாலைகள் உள்ளன. இந்த விடயத்தை மத்திய அரசும் ஆச்சரியமாக நோக்குகின்றது.

எனினும், வைத்தியர், தாதியர், ஊழியர்கள் போன்ற ஆளணிப் பிரச்சினைகளை கிழக்கு மாகாண சுகாதாரத்துறை எதிர்நோக்கி வருகின்றது.

இப்பிரச்சினைகள் முழு இலங்கையிலும் காணப்பட்டாலும், அரசியலமைப்பில் உள்ளவாறு அதிகாரத்தை மத்திய அரசு வழங்கினால், இவ்வாறான பிரச்சினைகளை மாகாண மட்டத்திலேயே தீர்த்துக்கொள்ள முடியும்.

மேலும், மூவின மக்களும் வாழும் கிழக்கு மாகாணத்தில் இன விகிதாசாரத்திற்கேற்ப வளப்பங்கீடுகள் இடம்பெற்றேயாக வேண்டும் எனக் தெரிவித்தார். (இ-7)

# ஆறாம் ஆண்டுக்கான மாணவர் அனுமதி குறித்து வட மாகாண பாடசாலைகளில் கலந்துரையாடல்

## கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் தெரிவிப்பு

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையினை ஆறாம் ஆண்டு அனுமதிக்கான ஒரு கல்வித் தகைமையாக வைத்திருக்க வேண்டுமா? வேண்டாமா? தடை செய்வது பயனுள்ளதா? இல்லையா? என்ற கேள்வியை எமது அமைச்சின் ஊடாக கருத்தாடலுக்கு விடவுள்ளோம். பாடசாலை மட்டங்களில் இதன் முடிபுகள் என்னவாக இருக்குமோ அது குறித்து எமது அடுத்தகட்ட நகர்வு இருக்கும் என வட மாகாண கல்வியமைச்சர் க.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 30 ஆண்டுகாலத்திலே பல தடைகள், இடையூறுகள், அழுத்தங்கள் இருந்தன. அதிலிருந்து தற்போது மீண்டுள்ளோம். நாம் சுற்றறிக்கையின் அடிப்படையிலேயே செயற்பட்டு வருகின்றோம்.

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு திறம்பட கற்பிப்பதற்கு ஆசிரியர்களிடம் உள்ள சுமைகளைக் குறைக்க வேண்டும். கல்வி அமைச்சின் உயிர் நாடியே மாணவர்கள்தான்.

வேலைகேட்டு பட்டதாரிகள் போராட்டம் நடத்துகிறார்கள். வேலை வந்ததும் தமது வீட்டிற்கு கிட்டவாகவுள்ள இடத்தில் பெற்றுத் தரும் படி மாகாண சபை உறுப்பினர்களிடம் செல்கிறார்கள். இது துரதிஷ்டவசமானது.

இங்கு 17,000 ஆசிரியர்கள் உள்ளார்கள். இரண்டரை இலட்சம் மாணவர்கள் உள்ளனர். இது 16 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற வீதத்தில் காணப்படுகிறது.

ஐரோப்பிய நாடுகளிலேயே 30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற அடிப்படையிலேயே காணப்படுகின்றது.

அண்மையில் விஞ்ஞான ஆசிரியர்களுக்கு கோரியிருந்தோம். இதில் சிலர் இன்னும் இணையவில்லை. இடமாற்றம் கோரி அங்கும் இங்கும் அலைந்து திரிகின்றனர். ஒரு புறம் வேலை கேட்டு போராட்டம். மறுபுறம் வேலை கிடைத்தும் வீட்டிற்கு பக்கத்தில் இருக்க வேண்டும் என்ற நிலைப்பாடு. இதுமாற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)

# அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்தில் இரண்டு மாடிக் கட்டடத்திற்கு அடிக்கல்






அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையில் புதிதாக அமைக்கப்படவிருக்கும் இரண்டு மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த 15 ஆம் திகதி சனிக்கிழமை அதிபர் ஸ்ரீரதி முருகசோதி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொண்டார். வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) சு.முரளிதரன், வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா, வண தா.மகாதேவக் குருக்கள் உள்ளிட்ட விருந்தினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தினால் (ONUR - Office for National Unity and Reconciliation) வழங்கப்படும் நிதியுதவியில் 70 அடி நீளம் கொண்டதாகவும் 25 அடி அகலமுடையதாகவும் இரண்டு மாடிகள் கொண்டதாக இந்தக் கட்டடம் அமைக்கப்படவிருக்கின்றது. (இ-3)

# 100 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கல்

யாழ். நுழைவாயில் லயன்ஸ் கழகத்தினரால் நாவற்குழி பிரதேசத்தில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள 100 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.நுழைவாயில் லயன்ஸ் கழகத் தலைவர் கலாநிதி லயன் நா.தனேந்திரன் தலைமையில் நாவற்குழி லயன்ஸ் கழக அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது.

இலவச மூக்குக் கண்ணாடிகள் பெற விரும்புவோர் நாவற்குழி லயன்ஸ் கழக அலுவலத்தில் கிழமை நாட்களில் தமது பெயர்களைப் பதிவு செய்யுமாறு தனேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-10-134)

# வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்ல கடற்றொழில் உபகரணங்கள் வேண்டும்

## அமைச்சர் அமரவீரவிடம் கோரிக்கை

தொண்டைமானாறு கடல் நீரேரியில் இறால் பிடித்து தமதுவாழ்வாதாரத்தைகொண்டு செல்லும் கடற்றொழிலாளர்கள் தமக்கு மாற்றுத் தொழில் செய்வதற்கான உபகரணங்களை தந்துதவுமாறு கடற்றொழில் நீரியல் வளத் துறை அமைச்சர் மகிந்த அமரவீரவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தொண்டைமானாறு கிராம சேவையாளர் பிரிவின் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் அமைச்சருக்கு எழுதியுள்ள மகஜரில் எமது மீனவ மக்கள் காலம்காலமாக தொண்டைமானாறு நீரேரியில் இறால் பிடித்து தமது வாழ்வாதாரத்தை நடத்தி வந்தார்கள். தற்போது தொண்டைமானாறு நீரேரி நன்னீர்த் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் எமது சங்கத்தைச் சேர்ந்த 115 குடும்பங்களும் பெண் தலைமைத்துவத்தைக்கொண்ட 30 குடும்பங்களும் மிகவும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. அவர்களின் வாழ்வாதாரத்தினை முன்கொண்டு செல்வதற்கு மாற்றுத் தொழில் செய்வதற்கான உபகரணங்கள் தந்துதவுமாறு தங்களை வேண்டிக் கொள்கிறோம்என கடற்றொழிலாளர் சங்கம் அமைச்சருக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## திருமதி. ரவீந்திரன் ரஞ்சினிதேவி

தோற்றம் 03.05.1969 மறைவு : 17.07.2017

எமது
நிறுவனத்தில் பணிபுரியும்
**ரவீந்திரன் தினேஷின்** அன்புத்
தாயார் **ரஞ்சினிதேவி**
அவர்களின் பிரிவினால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதோடு அவரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கிறோம்.



கருவில் சுமந்து - எமக்கு
நல் உருவம் தந்து
எண்ணம் செயல் அத்தனையிலும்
தியாகம் எனும் பெருமையோடு
உலகில் நாம் வாழ
ஏணியாய் ஏற்றிவிட்டு
வெற்றி வந்தால் தோளும்
தோல்வி காண மடியும் தந்து
வாழ்வைப் புரியவைத்த
அம்மாவின் பிரிவை எப்படித் தாங்குவது?
பிறப்பு உண்டேல்
இறப்பு நியதி...
இது ஒன்றைத்தான் -எம்
தோழனுக்கு சொல்கிறோம்
நம் அம்மா இறக்கவில்லை
எம் மனங்களில் வாழ்ந்து
கொண்டிருக்கிறார்.

பிரிவால் துயருறும்

**உதயா ஜுவல்லர்ஸ்**
**UTHAYAA JEWELLERS**
இல.79,81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4434, 021 221 6877

**நியூ உதயா ஜுவல்லர்ஸ்**
**NEW UTHAYAA JEWELLERS**
இல.91, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2031

(C-9093)

உரிமையாளர்களும், பணியாளர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## தொடரும் அத்துமீறல் - துப்பாக்கிச்சூடு பாகிஸ்தான் வீரர்கள் 4 பேர் பலி



(ஸ்ரீநகர்)

ஜம்மு-காஷ்மீர் எல்லை பகுதியில் அத்துமீற முயன்ற பாகிஸ்தான் வீரர்கள் மீது இந்திய இராணுவ வீரர்கள் நடத்திய துப்பாக்கி சூட்டில் பாகிஸ்தான் இராணுவ வாகனம் அருகில் இருந்த ஆற்றில் விழுந்து 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு பகுதியில் உள்ள நீலும் ஏரி பகுதியில் பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் சென்று கொண்டிருந்தனர்.

முசாஃபர்பாத் நகரில் இருந்து 73 கி.மீ. தொலைவில் உள்ள அத்முகம் டவுன் பகுதியில் சென்று கொண்டிருந்த பாகிஸ்தான் வாகனம் மீது குறி வைக்கப்பட்டது.

அத்துமீறல் உறுதி செய்யப்பட்டதும் பாகிஸ்தான் வாகனத்தை குறி வைத்து இந்திய இராணுவ வீரர்கள் துப்பாக்கி சூடு நடத்தினர்.

இந்திய வீரர்களின் துப்பாக்கி சூட்டில் கட்டுப்பாட்டை இழந்த பாகிஸ்தான் வீரர்கள் சென்ற வாகனம் ஏரியில் விழுந்தது.

இதையடுத்து அதில் இருந்த பாகிஸ்தான்இராணுவ வீரர்கள் 4 பேர் உயிரிழந்ததாக அந்நாட்டு இராணுவம் தெரிவித்துள் ளது.

ஏரியில் மூழ்கி உயிரிழந்தவர்களில் ஒரு வீரரின் உடல் மட்டும் கண்டெடுக்கப்பட்டுள்ள நிலையில், மற்ற வீரர்களின் உடல்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எல்லையின் அருகே பாகிஸ்தான் வீரர்கள் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த போது இந்திய இராணுவத்தினர் அத்துமீறி பாகிஸ்தான் வீரர்கள் மீது துப்பாக்கி சுடு நடத்தியதால் தான் அவர்கள் உயிரிழந்ததாக பாகிஸ்தான் இராணுவம் குற்றம் சாட்டியுள்ளது. (3-8)

## டி.ஐ.ஜி ரூபா அதிரடி மாற்றம்

### போக்குவரத்து ஆணையராக நியமனம்

(பெங்களூர்)

சசிகலா சலுகை பற்றிய புகார் கூறிய டி.ஐ.ஜி ரூபாவை போக்குவரத்து பிரிவு ஆணையராக மாற்றி கர்நாடக அரசு உத்தரவிட்டுள்ளது.

பெங்களூர் சிறையில் சசிகலாவுக்கு சிறப்பு சலுகைகள் வழங்குவதற்காக ரூ. 2 கோடி இலஞ்சம் கொடுக்கப்பட்டுள்ளதாக டி.ஐ.ஜி. ரூபா கூறிய குற்றச்சாட்டுகள்பரபரப்பை ஏற்படுத்தின.

இந்த விவகாரம் தமிழக மற்றும் கர்நாடக மாநிலங்களில் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கும் நிலையில் அது தொடர்பான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் டி.ஐ.ஜி. ரூபா சிறைத்துறையில் இருந்து அதிரடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பெங்களூர் நகர போக்குவரத்து பிரிவு ஆணையராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவு நேற்று பிறப்பிக்கப்பட்டது. இது பெங்களூர் சிறை துறை வட்டாரத்தில் கூடுதல் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (7-8)

## இந்திய எல்லை அருகே சீனா திடீர் போர் பயிற்சி

(டில்லி)

அருணாசல பிரதேசம் எல்லை அருகில் சீன இராணுவம் திடீரென போர் பயிற்சியில் ஈடுபட்டது. அப்போது விமானத்தை சுட்டு வீழ்த்தியது போன்ற பயிற்சிகளை சீனா மேற்கொண்டது.

இந்திய இராணுவத்துக்கும் சீன இராணுவத்துக்கும் இடையே பூட்டான் எல்லை பகுதியில் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக சர்ச்சை நீடித்து வருகிறது.

இந்திய எல்லையை நோக்கி சீன இராணுவம் பூட்டானில் சாலை அமைத்ததால் சர்ச்சையும் பதட்டமும் அதிகரித்துள்ளது. அங்கு இந்திய இராணுவம் அதிக அளவில் குவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அருணாசல பிரதேசம் எல்லை அருகில் சீன இராணுவம் திடீரென போர் பயிற்சியில் ஈடுபட்டது. அருணாசல பிரதேசத்தை திபெத்தின் தென் பகுதி என்று கூறிவரும் சீனா, அதை ஆக்கிரமிக்க போவதாக மிரட்டல் விடுத்தப்படி உள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் சீனா நடத்திய போர் பயிற்சி மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக கூறப்படுகிறது. இந்த போர் பயிற்சி சுமார் 11 மணி நேரம் நீடித்தது.

போர் பயிற்சியின் போது விமானத்தை சுட்டு வீழ்த்தியது போன்ற பயிற்சிகளை சீனா மேற் கொண்டது. இது இந்தியாவுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாக கருதப்படுகிறது. (3-8)

## வெனிசுலா... வாக்கெ...

### பெண்ணொ...



(கராகஸ்)

வெனிசுலாவில் ஜனாதிபதிக் எதிரான வாக்கெடுப்பின் போது மர்ம நபர்கள் தீடீர் தாக்குதலில் ஈடுபட்டனர். இந்த தாக்குதலில் பெண் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

தென் அமெரிக்க நாடான வெனிசுலாவில் ஜனாதிபதி நிகோலஸ் மதுரோவுக்கு எதிராக பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

## பாக். - ஈரான் எல்லையில் துப்பாக்கிச் சூடு

### இருவர் பலி

(பலுசிஸ்தான்)

ஈரான் எல்லைப்பகுதியில் அத்துமீறி நுழைந்து பாகிஸ்தான் திவிரவாதிகள் நடத்திய துப்பாக்கி சூட்டில் ஈரான் நாட்டை சேர்ந்த இருவர் கொல்லப்பட்டனர்.

ஈரான் - பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் தொடர்ந்து பாகிஸ்தானை சேர்ந்த திவிரவாதிகள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். கடந்த ஏப்ரல் மாதம்நடத்தப்பட்ட தாக்குதலில் ஈரான் எல்லை பாதுகாப்பு படையை சேர்ந்த பத்து பேர் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்தில் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுத்து ஊடுருவலை தடுக்குமாறு பாகிஸ்தான் பிரதமருக்கு ஈரான் ஜனாதிபதி கடிதம் எழுதியிருந்தார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் எல்லைப்பகுதியில் ஆயுதங்களுடன் அத்துமீறி நுழைந்த திவிரவாதிகள் அப்பகுதியில் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்த தாக்குதலில் அப்பகுதியில் வேலை செய்து கொண்டிருந்த இரண்டு அப்பாவி ஈரானியர்கள் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவத்தை பற்றி தகவல் கிடைத்ததும் அப்பகுதிக்கு விரைந்த ஈரான் இராணுவத்தினர் நடத்திய பதில் தாக்குதலில் திவிரவாதி ஒருவன் கொல்லப்பட்டான். இருவர் காயமடைந்தனர். மற்றவர்கள் பாகிஸ்தான் எல்லைக்குள் தப்பியோடி விட்டதாக ஈரான் இராணுவம் தெரிவித்துள்ளது. (3-8)

## வாக்குப் பதிவுகள் நிறைவடைந்தன முடிவுகள் 20ஆம் திகதி வெளியாகும்



(டில்லி)

ஜனாதிபதி தேர்தலில் வாக்குப்பதிவு தொடங்கியது. பா.ஜனதா வேட்பாளராக ராம்நாத் கோவிந்த், காங்கிரஸ் சார்பில் மீராகுமார் போட்டியிடுகின்றனர்.

நேற்று காலை 10 மணிக்கு ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்குப்பதிவு தொடங்கியது. டில்லியில் பாராளுமன்ற வளாகம், தமிழ் நாட்டில் சென்னையில் அமைந்துள்ள சட்டசபை வளாகம், இதேபோல் பிற மாநிலங்களில் உள்ள சட்ட சபை வளாகங்கள் என மொத்தம் 32 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டு வாக்குப்பதிவு இடம்பெற்று இதனை தேர்தல் ஆணையகம் 33 பார்வையாளர்கள் மேற்பார்வையிட்டனர். மாலை 5 மணியுடன் வாக்குப்பதிவு முடிவடைந்தது.

பிரதமர் நரேந்திர மோடி, காங்கிரஸ்தலைவர் சோனியா காந்தி மற்றும் வாக்குரிமை பெற்றுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும் பாராளுமன்றத்துக்கு வருவதாலும், மழைக் கால கூட்டத்தொடர் தொடங்குவதாலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

எம்.பி.க்களுக்கான வாக்குச்சீட்டுகள் பச்சை நிறத்திலும், எம்.எல்.ஏ.க்களின் வாக்குச்சீட்டுகள் இளஞ்சிவப்பு நிறத்திலும் இருக்குமாறு வடிவமைக்கப்பட்டிருந்தன.

வாக்குச்சாவடியில் வாக்காளர்களான எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள் என்னவெல்லாம்செய்ய வேண்டும், என்னவெல்லாம் செய்யக்கூடாது என்ற குறிப்புக்களை கொண்ட சிறப்பு 'போஸ்டர்' களையும் தேர்தல் ஆணையகம் இந்த தேர்தலில் முதல் முறையாக அறிமுகம் செய்திருந்தது.

பாராளுமன்ற வளாக வாக்குச்சாவடியில் வைக்கப்படுகிற வாக்குபெட்டிகள், வாக்குப்பதிவு முடிந்தவுடன் 'சீல்' வைக்கப்பட்டு அங்குள்ள அறையில் [illegible] பொலிஸார் பாதுகாப்பில் வைக்கப்பட்டன.

இதேபோல், மாநில சட்ட சபைகளில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளில் பயன்படுத்தப்படுகிற வாக்குப் பெட்டிகளும்வாக்குப்பதிவு முடிந்து 'சீல்' வைத்து டில்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் வரும் 20 ஆம் தேதி வெளியாகும். வெற்றி பெறும் வேட்பாளர் புதிய ஜனாதிபதியாக 25 ஆம் திகதி பதவி ஏற்பார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழக தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான வாக்குப்பதிவில் தி.மு.க தலைவர் கருணாநிதி உடல்நிலைக் குறைவு காரணமாக வாக்களிக்க வரவில்லை.

எனவும் மதியம் 12 மணியளவில் வாக்குப்பதிவு நிறைவடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-8)

## அமெரிக்க குடியுரிமை பெற்றவருக்கு ஈரானில் பத்து ஆண்டுகள் சிறை

(தெஹ்ரான்)

ஈரான் நாட்டில் உளவு பார்த்ததாக அமெரிக்க குடியுரிமை பெற்றுள்ள நபருக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஈரான் நாட்டில் கடந்த சில வருடமாக அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, கனடா மற்றும் பிரான்ஸ் நாடுகளில் இரட்டை குடியுரிமை பெற்று வசித்துவரும் நபர்களை உளவு பார்த்ததாகவும், அரசுக்கு எதிராக செயற்பட்டதாகவும் கூறி ஈரான் அரசு கைது செய்து வருகிறது.

இந்நிலையில், உளவு பார்த்ததாக ஈரான் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அமெரிக்க குடியுரிமை பெற்றுள்ள நபருக்கு பத்து ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து ஈரான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அந்த நபர் குறித்த விவரங்கள் எவையும் வெளியிடப்படவில்லை. (3-8)

## பயங்கர பனிப்பொழிவு

### ஒருவர் பலி


(சாண்டியாகோ)

தென் அமெரிக்காவில் உள்ள சிலி நாட்டின் தலை நகர்சாண்டியாகோவில்நேற்று முன்தினம் இரவு திடீரென ஏற்பட்ட பனிப்பொழிவில் ஒருவர் பலியானர்.

தென் அமெரிக்காவில் உள்ள சிலி நாட்டின் தலை நகர் சாண்டியாகோவில் நேற்று முன்தினம் இரவு திடீரென கடும் பனிப் பொழிவு ஏற்பட்டது. இதனால் வானத்தில் இருந்து பனி பெருமளவில் கொட்டியது. வீட்டின் கூரைகள் மற்றும் மரங்களில் பனி உறைந்தது.

பனிப்பொழிவு ஏற்பட்ட நேரத்தில் திடீரென மின்சாரம் தடைபட்டது. இதனால் வெப்ப சாதனங்களைப் பயன்படுத்த முடியாமல் குளிரில் பொது மக்கள் தவித்தனர். 2 லட்சத்துக்கும் மேற்பட்டோர் கடும் குளிரால் பாதிக்கப்பட்டனர்.

அப்போது கொட்டிய பனி மற்றும் ஐஸ்கட்டியை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த ஒருவர் மின்கம்பியில் விழுந்து உயிரிழந்தார். 2 பேர் காயம் அடைந்தனர். குளிரில் இருந்து தப்பிக்க ஆயிரக்கணக்கானோர் சான்டியாகோவிலில் இருந்து வெளியேறி பக்கத்து நகரங்களுக்கு சென்று விட்டனர்.



இதற்கு முன்பு இது போன்ற கடுமையான பனிப்பொழிவு கடந்த 2007ஆம் ஆண்டில் ஏற்பட்டிருந்து. (7-8)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வில் ஜனாதிபதிக்கு எதிரான ப்பில் துப்பாக்கிச் சூடு

## ாருவர் பலி மூவர் படுகாயம்



நின்று கொண்டிருந்தனர். அப்போது மோட்டார் சைக்கிளில் சிலர் கும்பலாக வந்து திடீரென வாக்கு போட வரிசையில் நின்று கொண்டிருந்த பொதுமக்கள் மீது சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர். இதனால் கூட்டத்தினர் சிதறி ஓடி உயிர் பிழைக்க அருகேயுள்ள கிறிஸ்தவ தேவாலயத்துக்குள் பதுங்கி கொண்டனர்.

இதற்கிடையே, மர்ம நபர்கள் சுட்டதில் 4 பேர் படுகாயம் அடைந்து இரத்த வெள்ளத்தில் மயங்கி கிடந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு சிசிச்சை பலனின்றி ஒரு பெண் பரிதாபமாக உயிரிழந்தார்.

ஏனைய 3 பேருக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இத்தாக்குதலை ஜனாதிபதி மதுரோவின் இராணுவம் நடத்தியதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளனர். (3-8)

அவர் பதவி விலக வலியுறுத்தி போராட்டம் கடந்த ஏப்ரல் முதல் நடைற்று வருகிறது.

அதில் ஏற்பட்ட வன்முறை சம் வங்கள் மற்றும் பொலிஸ் - இராணு ம் நடத்திய தாக்குதல்களில் இது ரை 100இற்கும் மேற்பட்டோர் பலி ாகியுள்ளனர். இருந்தும் போராட்டம் பவில்லை. பலவிதங்களில் தொடர்ந்து டந்து வருகிறது.

இந்த நிலையில் ஜனாதிபதிக்கு எதிராக நேற்று எதிர்கட்சிகள் பொது வான வாக்கெடுப்பு நடத்தினார்கள். அதற்காக தலைநகர் கராகஸில் வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன.

அங்கு ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வாக்கு போட நீண்ட வரிசையில்

# வடகொரியாவுடன் இராணுவ பேச்சுவார்த்தை

## தென்கொரியா முன்மொழிவு

(பியொங்யாங்)

வடகொரியாவுடன் இராணுவ பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பது தொடர்பிலான முன்மொழிவொன்றை தென்கொரியா முன்வைத்துள்ளது.

வடகொரியாவின் அணுவாயுத ஏவுகணை சோதனையால் ஏற்பட்ட பெரும் பதற்றத்தை தொடர்ந்து, தமது எல்லைகளுக்கு அருகே விரோத நடவடிக்கைகளை நிறுத்துவதே இப்பேச்சுவார்த்தையின் நோக்கம் என சிரேஷ்ட அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

இப் பேச்சுவார்த்தை முன்னெடுத்துச் செல்லப்படுமாயின், 2015ஆம் ஆண்டின் பின்னர் நடைபெறும் உயர் மட்ட பேச்சுவார்த்தையாக இது அமையும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்குடன் நெருக்கமான உறவை ஏற்படுத்துவது தொடர்பில் தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே-இன் மிக நீண்ட காலமாக முயற்சித்து வருகின்ற நிலையிலேயே இப்பேச்சுவார்த்தை தொடர்பில் முன்மொழியப்பட்டுள்ளது.


இதேவேளை, வடகொரியாவிற்கு அழுத்தம் கொடுப்பதற்கு அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது அவசியம் என்றும், வடகொரியாவுடன் சமாதான உடன்படிக்கையொன்றை கையெழுத்திடுவதற்கும் அண்மையில் பெர்லினில் நிகழ்வொன்றில் உரையாற்றிய தென்கொரிய ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (3-8)

# அரிசோனா ஆற்றில் மூழ்கி ஒன்பது பேர் உயிரிழப்பு

(வோஷிங்கடன்)

கடும் மழையினால் ஏற்பட்ட கொடிய வெள்ளத்தினால் நீச்சலில் ஈடுபட்டிருந்த ஒன்பது பேர் அமெரிக்காவின் அரிசோனா ஆற்றில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

கடும் வரட்சியினால் பாதிக்கப்பட்டிருந்த குறித்த பிராந்தியத்தில் தற்போது கன மழை பெய்து வருகின்ற நிலையிலேயே இவ் அனர்த்தம் ஏற்பட்டதாக அதிகாரிகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளனர்.



இதேவேளை, குறித்த அனர்த்தத்தின் போது ஒருவர் காணாமல் போன நிலையில் பொது பாதுகாப்புத் துறையின் உலங்கு வானூர்தியின் உதவியுடன் தேடுதல் பணிகள் தொடர்ந்து வருவதாகவும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களுள் இரு சிறுவர்களும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் உயிரிழந்தவர்கள் மற்றும் காணாமல் போனவர் தொடர்பான மேலதிக விபரங்களை அதிகாரிகள் வெளியிடவில்லை.

எதிர்வரும் நாட்களிலும் மழை வெள்ளம் நீடிக்கும் என எச்சரிக்கப்பட்டுள்ள நிலையில், தொடர்ந்து அவதானத்துடன் செயற்பட்டு வருவதாக தேசிய வானிலை மையம் அறிவித்துள்ளது. (3-8)

# கடும் வரட்சியால் பரவும் காட்டுத் தீ



(உரோம்)

இத்தாலியின் எல்லை பகுதிகளில் டந்த சில மாதங்களாக குறைவான ழைவீழ்ச்சி பதிவாகியுள்ள நிலை ல், பல்வேறு பகுதிகளிலும் காட்டுத்தீ வி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

காட்டுத் தீ மிக வேகமாக பரவி நகின்ற நிலையில் உலங்குவானூர்திகளின் உதவியுடன் தீயணைப்பு வீரர்கள் தீயை கட்டுப்படுத்த போராடிவருகின்றனர்.


இதேவேளை, கடந்த 10 ஆண்டுகளில் இம்முறையே தீயணைப்பு பணிக்கான விமானங்களுக்கான கோரிக்கை அதிகமாகக் காணப்படுவதாக இத்தாலி சிவில் பாதுகாப்பு நிறுவனமொன்றின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாலியின் தென் பிராந்தியங்களில் வெப்பநிலை 40 பாகை செல்சியஸாக அதிகரித்துள்ள அதேவேளை, இத்தாலியின் பெரும்துறைமுக நகரங்களில் ஒன்றான நேப்பிள்ஸ், கடும் புகை மூட்டத்துடன் காட்சியளிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வட பிராந்தியங்களான பர்மா மற்றும் பியாசெனா ஆகிய பகுதிகள் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளமையால் அங்கு அவசரகால நிலைமையை பிரகடனப்படுத்தவும் அரசாங்கம் தூண்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (3-8)

# சீனாவில் பெரும் வெள்ளம்

## 18 பேர் பலி!, 18 பேர் மாயம்! இலட்சக்கணக்கானோர் வெளியேற்றம்



(பீஜிங்)

வட கிழக்கு சீனாவின் ஜிலின் மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 18 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட 18 பேரை தேடும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

சீனாவில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருவதால் ஜிலின் மாகாணத்தின் மத்திய மற்றும் கிழக்கு பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின.

அப்பகுதியில் உள்ள வீடுகள் மற்றும் சாலைகள் பெருமளவில் சேதமடைந்துள்ளது. கரை புரண்டோடிய வெள்ளத்தில் சிக்கி 18 பேர் பரிதாபமாக உயிர் இழந்ததாகவும், 18 பேரை காணவில்லை என்றும் அதிகாரிகள் நேற்று தெரிவித்துள்ளனர்.

மேலும் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தங்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக வெள்ள கட்டுப்பாடு மற்றும் வரட்சி நிவாரணக் குழு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜிலின் மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை சீரமைக்கும் பணிகளில் சுமார் 30 ஆயிரத்திற்கு அதிகமான மீட்பு படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

வெள்ளத்தில் சிக்கி மாயமான 18 பேரை தேடும் பணிகளும் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன என அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-8)

# மொசூல் நகரை கட்டியெழுப்புவதில் பெரும் சவாலை எதிர்நோக்கும் ஈராக்

(மொசூல்)

ஐ.எஸ். பயங்கரவாதிகளின் கட்டுப் ட்டிலிருந்த ஈராக்கின் மொசூல் நகர் ற்போது படையினரால் மீட்கப்பட் ள்ள நிலையில், நகரை மீண்டும் டியெழுப்புவதில் அரசாங்கம் பெரும் வாலை எதிர்நோக்கி வருகிறது.

போரினால் பேரழிவை எதிர்நோக் ப பகுதிகளில் மக்களை மீளக் குடி மர்த்துவதற்கான நடவடிக்கைகள் மற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலை ல், பாதுகாப்பை உறுதிபடுத்துவதே



மிகப்பெரிய சவாலாக காணப்படுகிறது.

நகரை சீரமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், குடிநீர் மற்றும் சுத்திகரிப்பு குழாய்களை புனரமைக்கும் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது.

மொசூலை கட்டியெழுப்பும் இராணுவத்தின் முயற்சிக்கு ஷியா போராளிகள் தங்கள் ஆதரவை வழங்கி வருகின்றனர். இந்நிலையில், இது நகரை கட்டியெழுப்புவதற்கான ஆதரவே தவிர இராணுவத்திற்கான ஆதரவல்ல என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபை தேர்தல் சட்டத்தைத் திருத்த சட்டமூலம் சமர்ப்பிப்பு



1988ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டமூலமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் அமைச்சர் பைஸர் முஸ்தபாவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேற்படி சட்டமூலமானது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

மாகாணசபைகளுக்கான வேட்புமனுப் பத்திரங்களில், பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ளும் வகையிலேயே இந்தச் சட்டம் திருத்தப்படவுள்ளது. அதனடிப்படையில், நியமனப்பத்திரம் ஒன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை உள்ளடக்கப்பட வேண்டும்.

நியமனப்பத்திரம் ஒன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய மொத்த எண்ணிக்கையினரான வேட்பாளர்களில் 30சதவீதத்துக்கும்குறைவான பெண் வேட்பாளர்களை உள்ளடக்குதல் வேண்டும்.

பெண் வேட்பாளர்களைக் கொண்டிராத நியமனப்பத்திரத்தை நிராகரித்தல் ஆகிய திருத்தங்களை மேற்கொள்ளும் வகையிலேயே சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டு, வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

மாகாணசபைகள் தேர்தல்கள் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டமூலம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு, அது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளமையால், செப்டெம்பர் மாதத்துடன் பதவிக்காலம் நிறைவடையவுள்ள வடமத்திய, சப்ரகமுவ மற்றும் கிழக்கு ஆகிய மாகாண சபைகளுக்கான தேர்தல்கள், திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (இ-7)

# கர்ப்பிணித்தாய்மார்களின் சுகாதாரத்தை மேம்படுத்த விசேட நிகழ்ச்சித்திட்டம்

மத்திய மாகாணத்தில் கர்ப்பிணித்தாய்மார்களின் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் மத்திய மாகாண ஆளுநர் அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கான உலர் உணவு கூப்பன் வழங்கும் விசேட நிகழ்ச்சித்திட்டம் நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

மத்திய மாகாணத்தில் உள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இந்த உலர் உணவு கூப்பன் மற்றும் போசனைப் பொதி வழங்கி வைக்கப்பட்டது. இந்த நிகழ்வை அடையாளப்படுத்தும் வகையில் சில கர்ப்பிணித் தாய்மார்களுக்கான பொதிகள் ஜனாதிபதியினால் வழங்கி வைக்கப்பட்டன.

கண்டி ஜனாதிபதி மாளிகையில் கர்ப்பிணித் தாய்மார்களுக்காக தயார் செய்யப்பட்டிருந்த பகல் போசன விருந்திலும் ஜனாதிபதி கலந்து கொண்டார்.

திடீர் விபத்தில் உயிரிழந்த தனது மகனின் இதயத்தை இருதய சத்திர சிகிச்சைக்காக அன்பளிப்புச் செய்த உடுநுவரவைச் சேர்ந்த ஐ.பி.நந்தசேன மற்றும் இந்திரா கல்யாணி ஆகியோர் ஜனாதிபதியை சந்தித்தனர். அவர்களின் சுகதுக்கங்களை விசாரித்த ஜனாதிபதி , இந்த அன்பளிப்புக்காக அவர்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநர் நிலூக்கா ஏக்கநாயக்க, சப்ரகமுவ மாகாண ஆளுநர் மார்சல் பெரேரா, வடமத்திய மாகாண ஆளுநர் பி.பீ.திசாநாயக்க, தென்மாகாண ஆளுநர் ஹேமக்குமார நாணயக்கார, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, பிரதி அமைச்சர் அநுராத ஜயரத்ன, மத்திய மாகாண மகளிர் விவகார அமைச்சர் திலின பண்டார தென்னகோன் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-7)



# ஆட்சியை தக்க வைக்க சந்திரிகாவும் களத்தில்

(கொழும்பு)

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களில் சிலர், அரசாங்கத்திலிருந்து விலகுவதற்கு தயாராகி வருவதாக வெளியான தகவலையடுத்து, ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளதாக அறிய முடிகின்றது.

இந்தச் சந்திப்பின்போது, அரசாங்கத்திலிருந்து விலகுவதற்கு தயாராகியுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களை, அரசாங்கத்துக்குள்ளே வைத்து கொள்ளும் முயற்சியில் ஈடுபடுமாறும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர கள், சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

அதனடிப்படையில், அரசாங்கத்திலிருந்து விலகுவதற்கு தீர்மானித்துள்ள உறுப்பினர்கள் குழுவுடன் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கடந்த வாரம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க எடுத்துள்ள முயற்சி தொடரும் என்றும் அரசாங்கத்தைக் கவிழ்க்க விடாது, தொடர்ந்து முன்கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் தெரிவித்துள்ளனர். (இ-7)

# 23 நாய்கள் நஞ்சு வைத்து கொலை! விலங்கு நல ஆர்வலர்கள் கண்டனம்

(கொழும்பு)

மொறட்டுவை பல்கலைக் கழக வளாகத்துக்குள் 23 தெரு நாய்களுக்கு நஞ்சு கொடுத்து கொன்றமை தொடர்பான காணொலி வெளியாகியுள்ள நிலையில், விலங்கு நல ஆர்வலர்கள் இது குறித்துக் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

மொறட்டுவை பல்கலைக் கழக மாணவர்களே கடந்த சனிக்கிழமை இந்தக் காணொலியை வெளியிட்டுள்ளதோடு, இதற்குக் கண்டனம் தெரிவித்து, ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளதாகவும் கூறியுள்ளனர்.

மொறட்டுவை பல்கலைக் கழக அதிகாரிகளும் வேறு சிலரும் சேர்ந்து நாய்களுக்கு அதிக போதை அடங்கிய மருந்துகளைக் கொடுத்து சித்திரவதை செய்து கொல்லுவதாக அமைந்துள்ள அந்தக் காணொலி வெளியிடப்பட்ட பின்னர் அதை அகற்றுமாறு அழுத்தங்கள் ஏற்பட்டதாகவும் மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், இது தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள விலங்குநல ஆர்வலர் ஒட்டாரா குணவர்த்தன விலங்குகளைப் பிடிப்பதற்காக பயன்படுத்தப்படும் முறை ஏற்றுக்கொள்ள முடியாதது என்று கூறினார்.

மேலும், இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த விலங்குநல ஆர்வலர் [illegible] லஹினி பெரேரா, "தெரு நாய்களைக் கொல்லும் கொள்கை இனி இல்லை என்று கடந்த 2006ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார்.

அப்படியிருக்கையில், நாய்களைக் கொன்ற சம்பவத்துக்கு நாம் கண்டனம் தெரிவிக்கின்றோம். இதற்கு, சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதையே நாம் எதிர்பார்க்கின்றோம்.

முன்னாள் ஜனாதிபதியிடமிருந்த கொள்கையை தற்போதும் நடைமுறைப் படுத்துமாறே நாம் கோருகின்றோம்" என்று அவர் தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### சொல் பொறுக்கமாட்டீர்களா?

யார் என்ன சொல்வார்களோ! அவர் திட்டுவாரே அவருக்குப் பதில் சொல்ல முடியுமா? என்றெல்லாம் மனிதன் அஞ்சுவதால்தானோ என்னவோ உலகம் இன்னமும் கொஞ்சமாவது நியாயத்தின் கரைகளில் நடை பயின்று கொண்டிருக்கிறது.

நம்மைத் தீய செயலிலிருந்து தடுக்கும் மாபெரும் சுவராக மனச்சாட்சிக்கு அடுத்தபடியாக மற்றவர்களின் அவச் சொல்தான் நிற்கிறது.

குறை சொல்பவர்களையும் குற்றம் கண்டுபிடிப்பவர்களையும் பெரும்பாலானவர்கள் வெறுக்கத்தான் கற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னும் ஒரு படி மேலே போய் என்னையா சொன்னாய்! உன்னை என்ன செய்கிறேன் பார்! என்று பழிவாங்குவதில் இறங்கி விடுபவர்களையும் நாம் பார்க்கத்தான் செய்கிறோம்.

இந்த இரு எல்லைகளையும் நாம் தொடுவதைத் தவிர்த்துவிட்டு அவர் சொல்லுக்கு அஞ்சும் நம் மனத்தை நாம் எப்படி நம் வளர்ச்சிக்கு பயன்படுத்துவது என்று சிந்திக்கப் பார்ப்போம்.

பிறரது கடுமையான விமர்சனங்களுக்கு அஞ்சும் நம் மனத்தின் சுபாவத்தை ஓர் ஆக்க சக்தியாக கருதி நம் மனத்தை நாம் நெறிப்படுத்திக் கொள்ள முடியும்.

எப்படி?

முதற்கட்டமாக, எவர் வாயிலும் நம் பெயர் புகுந்து புறப்படக் கூடாது என்னும் நம் நினைப்பை முன்னைவிடக் கவனப்படுத்திக் கொண்டுவிட வேண்டும். இதைச் செய்துவிட்டால் போதுமா?

போதாது இதுவரை கால்வாசி வேலை தான் முடிந்திருக்கிறது.

யாரும் நம்மை எதுவும் பேசிவிடக் கூடாது அல்லவா? அப்படியானால் இனி மிகக் கவனமாக இருக்க வேண்டும். எந்த ஒரு வேலையையும் நாம் மிக ஒழுங்காகக் செய்ய வேண்டும். நமக்குள்ள கடமைகளை மிகச் சரியாக முடிக்க வேண்டும். மற்றவர்களோடு சம்பந்தப்பட்ட விடயங்கள் அனைத்திலும் விழிப்போடு இருக்க வேண்டும். சொன்ன வார்த்தையைக் காப்பாற்ற வேண்டும். மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். எங்கெல்லாம் ஓட்டை விழும் என எதிர்பார்த்தும் கணக்கிட்டும் அது நிகழாதபடி பார்த்துக் கொள்ள வேண்டியதும் அவசியம். இதையும் மீறி நடக்கும் விமர்சனங்களை நம் குறைகளை நாமே உணர்ந்து திருந்த வேண்டிய வாய்ப்பாக எடுத்துக் கொண்டு நம்மைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

இதையெல்லாம் விட்டுவிட்டு.

நான் எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்வேன்: எவ்வளவு தவறு வேண்டுமானாலும் செய்வேன். சுற்றியிருப்பவர்களுக்கெல்லாம் நட்டத்தையும் கஷ்டத்தையும் தருவேன்.

ஆனால், என்னை மட்டும் யாரும் எதுவும் சொல்லிவிடக் கூடாது என்று எண்ணுவதும் விரும்புவதும் அசட்டுத் தனத்தின் உச்சமாகவே இருக்க முடியும்.

லேனா தமிழ்வாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவைக்கந்தனின் ஆடிக்கார்த்திகை தரிசனம்

ஈழ அன்னையின் சிவதர்ம பூமியாம் இலங்கை இங்கு வடபால்தனை பண்டைத்தமிழர்கள் சமய மரவு, கலாசாரம், பண்பாடுகள் போன்றவற்றில் ஊறித் தெளிந்தவர்கள். இவர்கள் கட்டம் கட்டமாக வளர்ச்சியைக் கண்டு இறை வழி பாட்டினை கடைபிடிக்கத் தொடங்கினர். அக் காலத்திலேயே முருகனுக்குரிய நிலம் "குறிஞ்சி" என்று வரலாறுகள் கூறுகின்றன.

வரலாற்றுச் சிறப்பு மிக்கவையாக அலங்காரக் கந்தனாக நல்லூரானும், அன்னதானக் கந்தனாக சந்நிதி முருகனும் அபிஷேகக் கந்தனாக மாவைக் கந்தனும் வரலாற்றைச் சிறப்பிக்கின்றன.

என்னை "நம்பிக்கையுடன் துதிப்பவரை கைவிடேன்" என்று மாவைப் பதிதனில் குடிகொண்டு அருள் பாலிக்கின்றான். இவ் ஆலயமானது இயக்கர், நாகர், ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் தோற்றம் பெற்றது எனவும் கி.பி.7ஆம் நூற்றாண்டில் இந்திய சோழ இளவரசியான மாருதப்புரவீகவள்ளியின் குதிரை முகத்தை மாற்ற வேண்டிய சூழ்நிலையில் சாந்தலிங்க முனிவரின் உதவியுடன் தீர்த்த யாத்திரை செல்வதற்கு கேட்டு மாவைப் பதிக்கு வந்து வேல் வடிவான வேலனை மனமுருகி ஆதரித்தனையாலே அப்பிணி மறைந்தது. இக் காரணத்தினாலேயே மாமுகம் நீங்கிய தலம் மாவிட்டபுரம் எனப் பெயர் பெற்றது.

இவ்விதம் ஆகம விதிக்குட்பட்ட கோயிலுக்கு உரிய சிலையாகிய "காங்கேயன்" விக்கிரகத்தை எடுத்து வந்தார். இவ் விக்கிரகத்தை கொண்டு வந்து இறங்கிய இடத்தையே "காங்கேசன்துறை" என்று இன்றும் அழைக்கப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இவ்விதம் அழைக்கப்பட்ட இம் முருகன் ஆலயமானது வேதாகம முறைப்படி கிரியைகன்ள சிதம்பர வம்சாவளி தீட்சகர் பெரியமனத்துள்ளார் என்பவரே ஆரம்ப பூஜைகள், கிரியைகளை முறைப்படி நடத்தி வந்தாரென்பது வரலாறு குறிப்பிடுகின்றது.

இவ்வாறு சிறப்பாக தொன்று தொட்டு வரும் வருடாந்த மஹோற்சவமானது ஆனி மாத பூர்வ பட்ச சஷ்டியில் துவஜாரோஹணத்துடன் (கொடியேற்றத்துடன்) ஆரம்பமாகி இருபத்தைந்து நாட்களை சிறப்பாகக் கொண்டு ஆடி மாத அமாவாசை தினத்தன்று தீர்த்தத்துடன் முடிவடையும். ஆனால் சிறப்பாக 5 ஆம் திருவிழா அன்று சண்முகப் பெருமான் சமேத வள்ளி தெய்வானையுடன் திரு நடனக்காட்சியையும் 10 ஆம் திருவிழா அன்று திருமஞ்சக் காட்சியையும் காண்பது மிகமிக பிரமிக்க வைப்பதாகும்.

ஆனால் ஆடிக் கார்த்திகை அன்று கார்த்திகை குமரனாகவும் மறு தினத்தில் மிருக யாத்திரையும் (வேட்டைத்திருவிழாவும்), 23 ஆம் திருவிழா சப்பரத் திருவிழாவும் அழித்தல் தொழிலை





முதன்மையாகக் கொண்டு மும்மலங்களை அகற்ற பஞ்சரத பவனி அமைகின்றது. இரதோற்சவத்திற்கு மறுநாள் அதிகாலை எம்பொருமான் கீரிமலை சாகர சங்கமத்தை நோக்கி செல்லும் காட்சி மிகையற்றது.

ஆனாலும் ஆடிக் கார்த்திகைத் திருவிழா என்பது மக்கள் மனதில் இடம் பிடித்த திருவிழா ஆகும். கார்த்திகை நட்சத்திரத்தன்று முருகன் சரவணப் பொய்கையில் உதித்தான் என்பது புராணங்கள் கூறும் கதையாகும். இவ்வாறு சரவணப் பொய்கையில் மலர்ந்த தாமரை மலர்கள் மீது சிவனின் நெற்றி ஒளி தந்த ஆறு தீப்பொறிகளும் ஆறு குழந்தைகளாக உருவெடுத்தன. இவ்விதம் உதித்த ஆறு குழந்தைகளையும் பராசரமுனிவரின் சாபத்திற்குள்ளான அவர்தம் ஆறு மக்களும் கார்த்திகைப் பெண்களாகத் தோன்றி இவ்வாறு ஆறு குழந்தைகளையும் சீராட்டி வளர்த்தனர். கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டமையால் கார்த்திகேயன் எனப் பெயர் பெற்றான்.

மாவைக் கந்தனின் அடியவர்கள், அந்தணர்கள் எல்லோரும் ஆசார சீலர்களாக வருகை தந்து எம் பெருமானின் நிகழ்வுகளில் ஒன்றான அபிஷேகத்தை பஞ்சகௌவியங்களுடன் (பால், தயிர், நெய், பஞ்சா மிர்தம், இளநீர்) போன்றவற்றால் அவனை அபிஷேகப் பிரியனாகவும் அபிஷேகக் கந்தனாகவும் எம்பெருமானைக் குளிர்விப்பர். சண்முகப் பெருமானுக்கு மாவைப்பதியில் ஓர் விசேசமாக சண்முக அர்ச்சனை இடம்பெறும்.

ஆறு அந்தணர்கள் சுற்றிவர நின்று ஆறுமுகனுக்கு தீபாரா தனைகள் மங்கள வாத்தியங்கள் இசைக்கப்பட்ட ஆறு அந்த ணர்கள் ஆறுவகைத் தட்டு நைவேத்தியங்களை சமர்ப்பித்து வேதாகம நாம அர்ச்சனை வீணை நாகத்தால் இசைக் கப்படும்.

தேவர் தம் துயர் தீர்த்த செல்வனை கார்த்திகை நன்னாளில் நினைந்து விரதத்தினை நோற்பர். ஆகவே இன்றைய தினம் நாமும் இவ் விரதத்தினை மாவைக் கார்த்திகைக் குமரனைப் பணிந்து அருள் பெறுவோமாக.

ஜெ.ஜெயவினோதனன், மாணவன்
யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி (தரம்-10)

# 2020 வரை அரசு வலுவாக முன்நகரும்

(கொழும்பு)

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு வரையில் இந்த அரசாங்கம் வலு வாக முன் நகரும் என இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

யார் என்ன சொன் னாலும் இந்த அரசாங்கம்வலு வாகமுன்னோக்கி நகரும் என குருநாகல் பிரதேசத்திற்கு நேற்று முன்தினம் மேற் கொண் டிருந்த பயணமொன்றின் போது அவர் தெரிவித்துள்ளார்.

சிலர் சத்தமிட்டு அரசாங்கத்தை அச்சுறுத்துகின்றனர் எனவும் சிலர் அரசாங்கத்தை விட்டுப் போவதாக சத்தமிட்டு அச்சுறுத்தகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார். இவ்வாறு எச்சரிக்கை விடுப்போர் விலகிச் செல்லப் போவதில்லை எனவும் அவ்வாறு சென்றாலும் அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கம் பாரியளவில் கடன் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் இதனால் மக்கள் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகவும் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார். (இ-7)



தென்மராட்சி கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட செயற்பட்டு மகிழ்வோம் போட்டி நிகழ்வில் வரணி கரம்பைக் குறிச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் தரம் 4 மாணவர்கள் அணி இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளது.

# கொழும்பில் கோவணத்துடன் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

எதிர்வரும் 26ஆம் திகதியன்று, கொழும்பில் கோவணத்துடன் ஆர்ப்பாட்டமொன்றை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக தேசிய விவசாயிகள் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

விவசாயிகளுக்கான மானியம் மற்றும் இழப்பீடுகள் இல்லாமல் செய்தல், உரமானியத்தை உரிய முறையில் வழங்காமை, அறுவடைக்கு உரிய விலையைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்தே, இந்தக் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக தேசிய விவசாயிகள் கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

இந்தக் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடங்கிய நாடளாவிய ரீதியில் உள்ள சகல பிரதேசங்களையும் சேர்ந்த விவசாயிகளும் பங்கேற்பர் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

கொழும்பு, கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக முன்னெடுக்கவுள்ள இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் பின்னர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து, மகஜரொன்றையும் கையளிப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளதாக, அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு உரிய முறையில் பதிலளிப்பதற்கு அரசாங்கம் தவறும் பட்சத்தில், மாவட்டரீதியில் தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்கும் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளதாக, அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சிக்கு நீண்ட ஆயுள்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சி எதிர்வரும் 2025ஆம் ஆண்டு வரையில் முன்னெடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஆளும் கட்சியின் 18 அமைச்சர்கள் விலகப் போவதாக வெளியான தகவல்கள் குறித்து எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நல்லாட்சி அரசாங்கம் எதிர்வரும் 2020ஆம் ஆண்டு வரையில் ஆட்சியை முன்னெடுக்கும். அதன் பின்னர் மீளவும் 2025ஆம் ஆண்டு வரையில் ஆட்சியைத் தொடரும்.

படையினரை அரசாங்கம் வேட்டையாடுவதாக கூட்டு எதிர்க்கட்சி சுமத்தி வரும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை. மனிதப் படுகொலைகள், ஆட்கடத்தல்கள், கப்பம் கோரல்கள் போன்றவற்றில் ஈடுபடுமாறு படைவீரர்களை கடந்த காலங்களில் சில அரசியல் வாதிகள் பிழையாக வழிநடத்தியுள்ளனர்.

கடந்த காலங்களில் நாடு முழுவதிலும் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் படைவீரர்கள் கைது செய்யப்பட்டனர். சில படைவீரர்கள் போதைப் பொருள் கடத்தியிருந்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் படைவீரர்கள் இல்லையா?

யாரேனும் ஓர் உயர் பாதுகாப்பு அதிகாரி கைது செய்யப்பட்டவுடன் அவரை படை வீரராக்கி அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தப்படுகின்றது. சிங்கள, தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டதாக கடற்படையின் முன்னாள் பேச்சாளருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கப்பம் செலுத்த முடியாத பெற்றோரின் பிள்ளைகள் கொல்லப்பட்டனர். படைவீரர் என்ற பதாகைகளை மாட்டிக் கொண்டு இனவாதத்தை தூண்டுவதற்கு இடமளிக்கப்படாது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கம்பஹா மாவட்டத்தில் மட்டும் 12 ஆயிரம் டெங்கு நோயாளர்கள்

(கொழும்பு)

கம்பஹா மாவட்ட சுகாதார அதிகாரப் பிரிவில், இதுவரை 12 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ள நிலையில், நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் மாத்திரம் இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் இருப்பது பதிவாகியுள்ளதாக, கம்பஹா மாவட்ட சுகாதார சேவைகள் பணியகம் தகவல் வெளியிட்டுள்ளது.

தற்போது நாட்டின் பல பகுதிகளிலும் இடையிடையே மழை பெய்வதாலும், பொதுமக்களின் போதிய ஒத்துழைப்பு இன்னும் சரியான முறையில் கிடைக்காததும், டெங்கு நோய் தொற்று பரவுவதற்கு ஏதுவாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா சுகாதார சேவைகள் பணியகத்தின் பிரதிப் பணிப்பாளர், தொற்று நோய் விசேட வைத்திய நிபுணர் டாக்டர் ரொஹான் ரணசிங்க இந்த விடயங்களை சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது விசேடமாக, நீர்கொழும்பு பிரதேசத்தில் டெங்கு நோய் தொற்று மிகவும் உக்கிரம் அடைந்துள்ளது.

இந்த நிலையில், கடந்த ஆறு மாத காலப் பகுதிக்குள், நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையில் மாத்திரம், டெங்கு தொடர்பாக சிகிச்சை பெற்று வந்த எட்டுப் பேர் இதுவரை மரணமாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வைத்தியசாலை சுற்றுச் சூழலை எப்பொழுதும் சுத்தமாக வைத்திருப்பதுடன், நமது வீடு மற்றும் தோட்ட சுற்றுச் சூழல்களையும் எந்நேரமும் தூய்மையாக வைத்துக் கொள்வதற்கு, "நாம்" என்ற நோக்கில் அனைவரும் இத்தருணத்தில் ஒன்றுபடுமாறும், இதற்காக வாரத்தில் 10 அல்லது 15 நிமிடங்களை ஒதுக்கி டெங்கு நோய் தொற்றை முற்றிலும் இல்லாதொழிக்க முன்வருமாறும், வைத்தியர் பொதும்க்களிடம் கோரியுள்ளார். (இ-7)

# வீடுகள் அமைக்க அடிக்கல் நாட்டல்



வடமாகாண சபையின் நிதியொதுக்கீட்டில் வீடுகள் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

வடமாகாண சபையின் உறுப்பினர் சி.அகிலதாஸின் பன்முகப்படுத்தப்பட்ட இரண்டு மில்லியன் ரூபா நிதியில் வடமராட்சிப் பகுதியில் மூன்று வீடுகள் அமைப்பதற்கு சிபார்சு செய்யப்பட்டது.

கரணவாய் பகுதியில் வீடு அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா அப்பகுதி கிராம அலுவலர் திருமதி தனுசா தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண சபை உறுப்பினர் சி.அகிலதாஸ் அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

இந் நிகழ்வில் குடும்ப உறுப்பினர்களும் அயலவர்களும் கலந்து கொண்டிருந்தனர். (இ-60)



மண்டான் உப்புவெளிப் பகுதியில் சிரமதானப் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இச் சிரமதானப் பணியில் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி சுதேஸ்குமார், மத்தெணி கிராம முன்னேற்ற சங்கத்தினர், கரவெட்டி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை ஊழியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-மகாலிங்கம்)

# குப்பை மேட்டில் பாரிய மோசடி

கொழும்பு மாநகர எல்லையில் குப்பை முகாமைத்துவம் தொடர்பில் இடம்பெற்றுள்ள மோசடி தொடர்பில் கொழும்பு மாநகர ஆணையாளர் உட்பட உயரதிகாரிகளுக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளதாக கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் மகிந்த ஹந்தகம தெரிவித்தார். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு மாநகர எல்லையில் குப்பை முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்படும் நிதியில் ஏராளமான மோசடிகள் இடம்பெறுகின்றன. மாநகர ஆணையாளர் உட்பட உயரதிகாரிகளும் குறித்த மோசடியில் தொடர்புபட்டிருக்கின்றனர். எனவே குறித்த மோசடிகள் தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவில் கடந்த 7 ஆம் திகதி ஒரு முறைபாடு செய்துள்ளேன். மேலும் மூன்று முறைப்பாடுகள் செய்யவுள்ளேன்.

அத்துடன் மீதொட்டமுல்லை குப்பைமேட்டு விவகாரத்தில் உள்ளக ரீதியில் பாரிய நிதி மோசடி இடம்பெற்றுள்ளது. அதனாலேயே குப்பைமேடு சரிந்து வீழ்ந்ததில் ஏராளமான உயிர்களை பலிகொடுக்க வேண்டியிருந்தது.

ஏனெனில் மீதொட்டமுல்லை குப்பைமேட்டை அழுத்தி மட்டப்படுத்துவதற்கு தனியார் நிறுவனம் ஒன்றுக்கு [illegible] ளன. அதற்கிணங்க 2010 ஆம் ஆண்டு குப்பைமேட்டை அழுத்தி மட்டப் படுத்துவதற்கு 39 மில்லியன் ரூபாவும் 2011 ஆம் ஆண்டு 49 மிலலியன் ரூபாவும், 2012 ஆம் ஆண்டு 56 மில்லியன் ரூபாவும், 2013 ஆம் ஆண்டு 37 மில்லியன் ரூபாவும், 2014 ஆம் ஆண்டு 43 மில்லியன் ரூபாவும், 2015 ஆம் ஆண்டு 182 மில்லியன் ரூபாவும். 2016 ஆம் ஆண்டு 232 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டபோதிலும் அதற்கான பணிகள் இடம்பெற்றிருக்கவில்லை. அப்பணிகள் இடம் [illegible] முடியு [illegible] சேதங்களைத் தவிர்த்திருக்கலாம். ஆகவே அந்நிதியை அதிகாரிகள் மோசடியான முறையில் தமக்குள் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

அத்துடன் மீதொட்டமுல்லையில் இரு வருடங்கள் மாத்திரம் குப்பை கொட்டுவதற்கு 2009 ஆம் ஆண்டில் நீதிமன்றம் அனுமதி வழங்கியது. எனவே 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையில் நீதிமன்றின் அனுமதியின்றி அங்கு குப்பை கொட்டப்பட்டுள்ளது. எனவே நீதிமன்றின் தீர்மானத்திற்கு எதிராக குப்பை கொட்டப்பட்டிருப்பதனால் அங்கு இடம்பெற்ற உயிரிழப்புகளை கொலையாக கருத வேண்டியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# துப்பாக்கி வைத்திருந்த இருவர் கைது

மீரிகம, கிதலவலான பகுதியில் டி-56 ரக துப்பாக்கி மற்றும் 25 ரவைகளை வைத்திருந்த சந்தேகநபர்கள் இருவரை, கம்பஹா பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இந்த சந்தேகநபர்கள் இருவரும் கிதலவலான பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என பொலிஸாரின் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில், கம்பஹா பொலிஸார் மேலதிக விசாரணையை முன்னெடுத்துள்ளனர். அண்மைக்காலமாக ஆயுத மீட்பு நடவடிக்கைகள் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் அமெ.வழங்கிய நிதி தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும்

## மொஹான் சமரநாயக்க வலியுறுத்து

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக அமெரிக்க நிதி வழங்கப்பட்டமை குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் அமைப்பின் முன்னாள் பணியாளரும், சிரேஷ்ட அரசியல் ஆய்வாளருமான மொஹான் சமரநாயக்க கோரியுள்ளார்.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களின் போது அமெரிக்காவிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டவர்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டுமென கோரியுள்ளார்.

அமெரிக்க முன்னாள் இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரி, ஆற்றிய உரையொன்றில் இலங்கை விவகாரம் குறித்து குறிப்பிடப்பட்டிருந்தது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மியன்மார், இலங்கை மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளில் ஜனநாயகத்தை மீள நிலைநாட்டுவதற்கு 600 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டதாக ஜோன் கெரி கூறியிருந்தார் என மொஹான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

அப்போதைய அரசாங்கம் மேற்குலக நாடுகளின் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளத் தவறியதனால் ஆட்சி மாற்றம் செய்ய மேற்குலக நாடுகள் விரும்பியதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும்

(யாழ்ப்பாணம்)

புலோலி வட மேற்கு அறிவகம் சனசமூக நிலையத்தின் 62 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியளவில் புலோலி வட மேற்கு முருகன் கோவிலடியில் இடம்பெறவுள்ளது. (இ-3-60)

# ஆடிக் கார்த்திகை பெருவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவிலின் ஆடிக் கார்த்திகைப் பெருவிழா இன்று அதிகாலை 5 மணிக்கு பூசையுடன் ஆரம்பமாகி இரவு 10.30 மணிக்கு அர்த்தயாம பூசையுடன் நிறைவுபெறும். (இ-10-105)





பருத்தித்துறை இளம்தளிர்கள் விளையாட்டுக் கழகத்தால் வரணி கரம்பை அ.மி.த.க.பாடசாலையில் கல்வி கற்கும் 45 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

(படங்கள்:- மகாலிங்கம்)


## விண்ணக வாழ்வின் 31 ஆம் நாள் நினைவுகள்

பிறப்பு 09 - 08 - 1948

இறப்பு 18 - 06 - 2017



அமரர்.

**கோவிந்தசாமி செல்வமாணிக்கம் (உருத்திரா)**

கடவுளே நீரே என் இறைவன்
உம்மையே நான் நாடுகிறேன்
என் உயிர் உம்மீது
தாகம் கொண்டுள்ளது
நீரின்றி வறண்ட தரிசு நிலம் போல
என் உடல் உமக்காக ஏங்குகின்றது
உம் ஆற்றலையும் மாட்சியையும்
காண விழைந்து உம் தூயகம் வந்து
உம்மை நோக்குகிறேன்
ஏனெனில் உமது பேரன்பு
உயிரினும் மேலானது
என் இதழ்கள் உம்மைப் புகழ்கின்றன.(தி.பா.63)

987, வளன்புரம்,
கொழும்புத்துறை.

(9821)

என்றும் நினைவுடன்
குடும்பத்தினர்.


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1135

Search for people, places and things Nagendram Home

### வவி




### கவிதா

ஜவுளிக்கடையில்
நாம் எடுக்கும்
துணிமணிகள் ஏதோ
சந்தர்ப்பத்தில் யாரோ
நிராகரிக்கப்பட்டது தான்...
ஒவ்வொரு மனுஷனுக்கும்
ஒவ்வொரு பீலிங்!

### தாசன்

என்ன ஒன்னும்
செஞ்சுடாதீங்க டாக்டர்




### ஆர்த்தி

ஒரு சொல்
போதுமென்றால்
இரு சொற்களை
செலவு செய்யாதே....
எவ்வளவு சொல்லியும்
பயன் இல்லையென்றால்
ஒரு சொல்லையும்
விரயமாக்காதே..........

### மிதுலன்




### காயத்திரி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்

## 17.07.2017-16.08.2017



பொதுத் தொண்டில் ஆர்வம் கொண்ட மிதுன இராசி அன்பர்களே!

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவர் சகாய ஸ்தானாதிபதி சூரியனுடனும், 6,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாயுடனும் சேர்ந்திருக்கிறார். எனவே பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும். புதிய திருப்பங்கள் பலவும் காணப் போகிறீர்கள்.

புத ஆதித்ய யோகம் செயற்படும் இந்த மாதத்தில் உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கலாம். உடனிருக்கும் பணியாளர்களில் ஒரு சிலரை மாற்றுவதற்கான முயற்சியில் ஈடுபடுவீர்கள். கடன் சுமை குறைய புதிய வழி உருவாகும். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்களை அகற்றிக் கொள்ள நல்ல முடிவெடுப்பீர்கள். நினைத்த காரியம் நல்லவிதமாக நடந்தேறும். அரசியல் செல்வாக்கு மிக்க ஒருவரின் ஆதரவு கிடைத்து, அதன் மூலமாக வரும் சந்தர்ப்பங்களை பயன்படுத்திக் கொள்வீர்கள். மாமன், மைத்துனர் வழியில் நடைபெறும் சுபநிகழ்ச்சிகளை முன்னின்று நடத்தி நல்ல பெயர் எடுத்துக் கொள்வீர்கள்.

குரு 4இல் பலம் பெற்றிருப்பதால் ஆரோக்கியத்தில் அடிக்கடி அச்சுறுத்தல் ஏற்படும். உடலில் ஏதேனும் நலக்குறைவு ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. பொதுவாக 4ஆம் இடத்தில் வரும் குருவை, அர்த்தாஷ்டம குரு என்று சொல்வது வழக்கம். இந்த காலங்களில் வீண் விரயம் உருவாகலாம். அதைச் சுப விரயமாக மாற்றிக் கொள்வது உங்கள் புத்திசாலித்தனம். வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இது ஒரு பொற்காலமாக அமையும்.

6இற்கு அதிபதியான செவ்வாய் இப்பொழுது வலிமை இழந்திருப்பதால் நிலம், பூமி சம்பந்தமான தொழில் செய்பவர்களுக்கு கூட இலாபம் எதிர்பார்த்தபடியே கிடைக்கும்.

இராகு கேதுக்களின் பெயர்ச்சியும் இம்மாதம் நிகழவிருக்கிறது. 2இல் வரப்போகும் இராகுவால் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும் என்றாலும், 8இல் வரும் கேதுவால் இடர்பாடுகள் கொஞ்சம் உருவாகலாம். எனவே தொல்லையில் இருந்து மீளவும், தொழில் வளம் கூடவும் நாகசாந்திப் பரிகாரங்களை யோக பலம் பெற்ற நாளில் செய்து கொள்வது நல்லது.

## பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும்

சிம்ம புதனும், வக்ர புதனும்!

ஜூலை 22ஆம் திகதி சிம்ம இராசிக்குப் புதன் செல்கிறார். இராசிநாதன் சகாய ஸ்தானத்திற்கு செல்லும் பொழுது, கொடுக்கல்-வாங்கலில் இருந்த மந்த நிலை மாறும். தேங்கியிருந்த காரியங்கள் சிறப்பாக நடைபெறும். உறவினர்கள் தேடி வந்து உதவுவார்கள். வெளிவட்டாரத்தில் மதிப் பும், மரியாதையும் உயரும். ஜூலை 30 ஆம் திகதி சிம்ம இராசியிலும், ஓகஸ்ட் 6ஆம் திகதி கடக இராசியிலும் புதன் வக்ரம் பெறுகிறார். வக்ர காலத்தில் வளர்ச்சியில் தளர்ச்சி உருவாகலாம். உறவினர் பகை ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது. பத்திரப் பதிவுகளில் தாமதம் ஏற்படும். வீடுகட்டும் பணி பாதியிலேயே நிற்கலாம்.




இராகு கேது பெயர்ச்சி!

ஜூலை 27ஆம் திகதி கடகத்தில் இராகுவும், மகரத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போகின்றனர். தன ஸ்தானத்தில் ராகு வரும் பொழுது பணப்புழக்கம் அதிகரிக்கும். பாக்கிகள் வசூலாகும். மனக் குழப்பங்கள் அகலும். மாறுபட்ட கருத்து கொண்டவர்களும் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். தொழில் வளர்ச்சி கூடும். அதேநேரம் அஷ்டமத்தில் கேது சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. அலைச்சல் கூடுதலாக இருக்கும். எந்த ஒரு காரியத்தையும் ஒரு முறை க்கு இருமுறை செய்யும் சூழ் நிலை உருவாகலா ம். உத்தியோகத்தில் உள்ள வர்கள் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

சனியின் வக்ர நிவர்த்திக் காலம்!

ஓகஸ்ட் 4ஆம் திகதி சனி வக்ர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு 8,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. அவர் வக்ர நிவர்த்தியாகும் பொழுது உத்தியோகம், தொழிலில் நல்ல மாற்றங்களைக் கொடுப்பார். பெற்றோர் வழியில் பிரியம் குறையக்கூடும். குடும்ப பிரச்சினைகளை மூன்றாம் நபரிடம் சொல்ல வேண்டாம். 'வேலையில் உள்ளவர்கள் விருப்ப ஓய்வு பெறலாமா?' என்று சிந்திக்கும் நேரமிது.

பெண்களுக்கான . சிறப்பு பலன்கள்

மாத தொடக்கத்தில் நினைத்த காரியத்தை நினைத்தபடி செயற்படுத்த முடியும். அதிகம் செலவாகும் என்று நினைத்த காரியம் கூட குறைந்த செலவில் முடிவடையும். கணவன்- மனைவி அந்நியோன்னியம் அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்வி முயற்சியும், கடல் தாண்டும் முயற்சியும் கைகூட வழிகாட்டு வீர்கள். உடன்பிறப்புகளின் பிரியம் கூடும். தாய் வழி ஆதரவு ஓரளவே கிடைக்கலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மகர கேதுவின் ஆதிக்கத்தால் நீண்ட தூரத்திற்கான மாறுதல் கிடைக்கும்.

மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது. இராகு கேதுக்களின் பெயர்ச்சி காலத்தில் அதற்குரிய வழிபாடுகளை வைத்துக் கொள்வது நல்லது. புதன் தோறும் பெருமாள் வழிபாடு பெருமை சேர்க்கும்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



சந்தர்ப்பங்களை சரியாக பயன்படுத்தும் கடக இராசி அன்பர்களே

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசியிலேயே தனாதிபதி சூரியன் சகாய ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானத்திற்கு அதிபதியான புதன், யோகாதிபதியான செவ்வாய் ஆகிய மூன்றும் ஒன்று கூடிச் சஞ்சரிக்கிறது. எனவே வரவு திருப்தி தரும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். இரவு- பகலாகப் பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்கும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர்.

சூரியன், புதனோடு இணைந்திருக்கும் நேரத்தில் காரியங்களில் வெற்றி கிடைக்கும். புதஆதித்ய யோகம் எனப்படும் பொன்னான யோகம் உங்கள் இராசியிலேயே நடைபெறும் பொழுது அரசியல் மற்றும் பொதுநலத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். ஏதேனும் புதிய பொறுப்புகள் கிடைக்குமா? என்று ஏங்கியவர்களுக்கு இப்பொழுது பொறுப்புகள் கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். குறைந்த விலையில் என்றைக்கோ வாங்கிப்போட்ட சொத்து இப்பொழுது அதிக இலாபம் தரலாம்.

வரும் தொகையைக் கொண்டு வளர்ச்சிப் பாதையை நோக்கி செல்ல வழிவகுத்துக் கொள்வீர்கள்.

மாதத் தொடக்கத்தில் 2இல் இராகுவும், 8இல் கேதுவும் இருக்கிறார்கள். இதனால் ஓய்வின்றி உழைக்க வேண்டியதிருக்கும். இந்த மாதத்தில் இராகுவும், கேதுவும் மாற்றமடையப் போகின்றனர். அதன்படி ராகு உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கப் போகிறார். அதனால் சிறு சஞ்சலங்கள் ஏற்படுமே தவிர, சந்தோசம் குறையாது. அதேநேரம் 7ஆம் இடத்திற்கு வரும் கேது மனக் கவலையை உருவாக்கலாம். களஸ்திர ஸ்தானமாக மகரம் அமைவதால், வாழ்க்கைத் துணையோடு விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. ராகு கேதுக்களின் ஆதிக்கம் ஜென்மத்திலும், 7ஆம் இடத்திலும் வரும் பொழுது சர்ப்ப தோஷம் பற்றிக் கொள்கிறது. எனவே சர்ப்ப தோஷத்திலிருந்து விடுபட அற்புதப் பலன் தரும் ஆலயங்களைத் தேர்ந்தெடுத்து, உங்கள் ஜாதகத்திற்கு உகந்த நேரத்தில் பரிகாரங்களை செய்து கொள்ளுங்கள்.

## தனவரவு வந்து கொண்டேயிருக்கும்

சிம்ம புதனும் வக்ர புதனும்!

ஜூலை 22ஆம் திகதி சிம்ம இராசிக்கு புதன் செல்கிறார். விரயாதிபதி தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் விரயத்திற்கேற்ற தனவரவு வந்து கொண்டேயிருக்கும். எதையும் திட்டமிட்டு செய்ய இயலாது. பணத்தை வைத்துக்கொண்டு காரியங்களை நடத்த முடியாது. காரியத்தை தொடங்கி விட்டால் பணம் கைக்கு வந்து சேரும்.

ஜூலை 30ஆம் திகதி சிம்மத்திலும், ஓகஸ்ட் 6ஆம் திகதி கடகத்திலும் புதன் வக்ரம் பெறுகிறார். புதன் 3,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். 12ஆம் இடத்திற்கு அதிபதியானவர் வக்ரம் பெறுவது நன்மை தான் என்றாலும், 3ஆம் இடத்திற்கும் புதன் அதிபதியாக அல்லவா ஆகிறார். இதனால் சகோதரர்களிடையே சர்ச்சைகள் ஏற்படும்.




ராகு கேதுக்களின் பெயர்ச்சி!

ஜூலை 27ஆம் திகதியன்று கடகத்திற்கு ராகுவும், மகரத்திற்கு கேதுவும் செல்கிறார்கள். பின்னோக்கிச் செல்லும் கிரகங்களான இராகுவும், கேதுவும் இனி ஒன்றரை ஆண்டு காலம் உங்கள் இராசியிலும், சப்தம ஸ்தானத்திலும் பிரவேசிக்கப் போகிறார்கள். சர்ப்ப தோஷப் பின்னணியில் இருந்தாலும், தசாபுத்தி சுய ஜாதகத்தில் பலம் பெற்றவர்களுக்கு ஓரளவு நற்பலன் வந்து சேரும். மற்ற அமைப்பில் உள்ளவர்கள் வழிபாட்டின் மூலமாக வளர்ச்சியைக் கூட்டிக் கொள்ளலாம். இடமாற்றம், ஊர்மாற்றம், உத்தியோகமாற்றம் மற்றும் இலாகா மாற்றங்கள் ஒருசிலருக்கு வந்து சேரும். குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்க மூத்தவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது.

சனியின் வக்ர நிவர்த்திக் காலம்!

ஓகஸ்ட் 4ஆம் திகதி சனி வக்ர நிவர்த்தியாவதால் பிள்ளைகள் வழியில் உள்ள பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரலாம். அவற்றின் கல்யாண வாய்ப்புகள் கைகூடுவதற்கான அறிகுறிகள் தென்படும். பூர்வீக சொத்துகளில் விவகாரங்கள் விலக, புதிய நண்பர்களின் ஆலோசனை கைகொடுக்கும். சப்தம சனி வலிமையடைவதால் வெளிநாட்டு முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.

பெண்களுக்கான சிறப்பு பலன்கள்

மாத தொடக்கத்தில் நன்மைகள் பலவும் நடைபெறும். இராகுகேது பெயர்ச்சி வரை வருமானப் பெருக்கமும், வசதி வாய்ப்புகளும் அதிகரிக்கும். அதன்பிறகு கொஞ்சம் முன் யோசனையுடன் செயற்படுவது நல்லது. ஜென்ம இராகுவும், 7இல் கேதுவும் வரப் போவதால் குடும்பப் பெரியவர்களை ஆலோசித்து எந்தக் காரியத்தையும் செய்யுங்கள்.

கணவன்மனைவிக்குள் ஒற்றுமை சிறப்பாக இருக்கும். குரு பார்வை சப்தம ஸ்தானத்தில் பதிவதால் உங்கள் குணமறிந்து வாழ்க்கைத் துணை நடந்து கொள்வர். உங்கள் பெயரிலேயே வீடு அல்லது இடம் வாங்கும் யோகம் உண்டு. தாய்வழி ஆதரவு ஏற்படும். உத்தியோக முயற்சியில் அனுகூலம் கிடைக்கும். இராகுகேதுக்களின் வழிபாடு நன்மையை வழங்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலை அரசிடம்



மாலபே நெவில் பெர்னாண்டோ போதனா வைத்தியசாலையை அரசாங்கம் உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றுக்கொண்டது.

இதற்கான உடன்படிக்கை கையெழுத்திடும் நிகழ்வு நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நெவில் பெர்னாண்டோ போதனா வைத்தியசாலை வளாகத்தில் நடைபெற்றது.

இதனடிப்படையில், இந்தப் போதனா வைத்தியசாலை ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து சுயாதீன வைத்தியசாலையாகச் செயற்படும் எனச் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும்வங்கிகளின்மூலம் பெற்றுக்கொண்ட அனைத்துக் கடனையும் செலுத்துவதாக நெவில் பெர்னாண்டோ கூறியுள்ளார் எனவும் அதன் அடிப்படையிலேயே இந்த வைத்தியசாலையை அரசாங்கம் பெற்றுக் கொள்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)




கேலிச்சித்திரம்

# காணாமற்போனோர் பயங்கரவாதிகள் அல்லர்

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

காணாமற் போனவர்கள் பயங்கரவாதிகள் அல்லர் எனவும் சட்டத்தின் முன் முப்படையினர், பொலிஸார் என வேறுபாடு கிடையாது. விசாரணை நடத்தாது எவரும் கைது செய்யப்படவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

இளைஞர்கள் கடத்தப்பட்டமை தொடர்பாக அண்மையில் கடற்படையின் முன்னாள் பேச்சாளர் டி.கே.பி. தசநாயக்க கைது செய்யப்பட்டார். குறித்த கைது நடவடிக்கையின் பின் ஊடகங்களில் பலவாறான தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில் அது குறித்து விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

குறித்த ஊடக சந்திப்பில் விளக்கமளித்தபோதேபொலிஸ் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-3)

# டெங்கு நுளம்பை ஒழிக்க உள்ளூராட்சித் தேர்தலை உடன் நடத்த வேண்டும்

## அமைச்சர் சம்பிக்க வலியுறுத்து

(கொழும்பு)

"குப்பை மற்றும் டெங்குவுக்கு எதிராகப் போராடக் கூடிய அடிமட்ட அரசியல் தலைவர் ஒருவர் தற்போது தேவை. அதனால், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டியது அவசியமாகும்" என மாநகர மற்றும்மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துமாறு கோரி பலர் பேரணியை முன்னெடுக்கின்றனர். இன்னும் சிலர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். பழைய முறைப்படி தேர்தலை நடத்த முடியாது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் முன்னாள் தலைவர் ஆகியோர் கூறியுள்ளனர்.

மேலும், நீதியை மாற்றியமைக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர். இதனால், 55 சதவீதம் நீதியை மாற்றியமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இது குறித்து தற்போது கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

"இவ்வகையான பிரச்சினைகளுக்கு மத்தியில் ஜனாதிபதியும் பிரதமரும் உள்ளனர். இதுபோன்ற சிக்கலான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதன் காரணமாகவே, இத்தேர்தலை பிற்போட்டுள்ளார்களே தவிர வேறு எந்த காரணங்களுக்காகவும் அல்ல. அவர்களுக்குத் தேர்தலைப் பிற்போடுவதற்கு எந்தத் தேவையும் இல்லை.

இருப்பினும், மக்களைத் திருப்திப்படுத்தும் வகையிலாவது பழைய முறைப்படி தேர்தலை நடத்தி ஜனநாயகத்தை நிலை நாட்டுமாறு அமைச்சர்கள் பலர் ஜனாதிபதியிடம் கோரியுள்ளனர்.

"டெங்குக்கு எதிராகப் போராடவும் குப்பைப் பிரச்சினைக்குத் தீர்வு காணவும் அவசியம் ஏற்பட்டுள்ளது. இவை இரண்டுக்கும் தீர்வு காண அடிமட்ட அரசியல் தலைவர் ஒருவர் எமக்குத் தேவை.

எனவே, அரசாங்கத்தில் உள்ள அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் இவ்விவகாரத்தில் கயிறு இழுக்காமல், குழப்பங்களை விளைவிக்காமல் இந்த வருட முடிவுக்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தி, உள்ளூராட்சிப் பிரதிநிதிகளை நியமிக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என்றார். (இ-7)

# பாரிய ஆழ்கடல் ரோந்துக் கப்பல் 22ம் திகதி இலங்கையிடம் கையளிப்பு



(கொழும்பு)

இந்தியாவின் கோவா கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்ட ஆழ்கடல் ரோந்துக் கப்பல் எதிர்வரும் 22ஆம் திகதி இலங்கை கடற்படையிடம் கையளிக்கப் படவுள்ளது.

இலங்கை கடற்படைக்கு மிகப்பெரிய இரண்டு ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களை 1000 கோடி ரூபா செலவில் கட்டுவதற்கான உடன்பாடு நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் கையெழுத்திடப்பட்டது.

இதற்கமைய கோவா கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்ட முதலாவது கப்பல் ஜூலை 22ஆம் திகதி இலங்கை கடற்படையிடம் அதிகாரபூர்வமாக கையளிக்கப் படவுள்ளது.

105 மீற்றர் நீளமான-2400 எடை கொண்ட இந்தப் போர்க்கப்பல், இலங்கை கடற்படையினால் எதிர்வரும் ஓகஸ்ட் 2ஆம் திகதி சேவையில் ஈடுபடுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை கடற்படையினால் பயன்படுத்தப்படும் மிகப் பெரிய போர்க்கப்பலாக இது இருக்கும். இந்திய கப்பல் கட்டும் தளத்தினால் ஏற்றுமதி செய்யப்படும் மிகப் பெரிய போர்க்கப்பலாகவும் இது இருக்கும்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான கடற்படை உறவுகளை இது மேலும் ஆழமாக்கும்' என்று றியல் அட்மிரல் சேகர் மிட்டல் தெரிவித்தார்.

திட்டமிடப்பட்டதை விட மூன்று மாதங்கள் முன்னதாகவே, இந்தக் கப்பல் இலங்கை கடற்படையிடம் கையளிக்கப்படவுள்ளது.

இரண்டாவது கப்பல் 2018 பெப்ரவரியில் - திட்டமிடப்பட்டதற்கு 3 மாதங்கள் முன்கூட்டியே ஒப்படைக்கப்படும்.

இந்த ஆழ்கடல் ரோந்துக் கப்பல்கள், கப்பல்களுக்கு ஆதரவளிக்கும் நடவடிக்கைகள், கடல்சார் கண்காணிப்பு, ஆழ்கடல் நிலைகளின் பாதுகாப்பு மற்றும் அதிக பெறுமானம் கொண்ட கப்பல்களின் பாதுகாப்பு என பல்வேறு பங்குகளை ஆற்றக் கூடியவை.

25 கடல் மைல் வேகத்தில் பயணிக்கக் கூடிய இந்தக் கப்பல்களில், உலங்குவானூர்தி தரித்திருப்பதற்கான வசதிகளும் உள்ளன. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## குரு சிஷ்யன்

ஒரு குருவும் அவருடைய சீடர்களுடம் ஆற்றங்கரை யோரம் கலகலப்பாகப் பேசிக் கொண்டே சென்றனர்.

ஒரு சீடன் கேட்டான், 'குருவே, பூர்வாசிரமத்தில் நீங்கள் ஒரு பெரிய போர் வீரராக இருந்ததாகவும், பல நாடுகளுக்குப் பயணம் செய்து வெற்றிமேல் வெற்றிகளைக் குவித்ததாகவும் மூத்த சீடர் கள் பேசிக் கொண்டிருந்தார்கள் நிஜம்தானா?'

'நிஜம்தான் ஆனால் அதெல்லாம் அந்தக் காலம். இப் போது நான் ஆயுதங் களைக் கை விட்டு விட்டேன்!' என்றார் குரு.

'ஏன் குருவே? போர் தவறா ஆயுதங்களே வேண் டாமா?'

'சரி தவறு என்பதல்ல என் வாதம் ஒரு கட்டத்துக்குமேல் புத்திக் கூர்மையும் அமை தியையும் விட சிறந்த ஆயு தம் எதுவும் இல்லை என்று புரிந்துவிட்டது எனக்கு!'

குருவின் வார்த்தைகளில் சீடர்களுக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. அவரை சோதித்துப் பார்த்துவிட முடிவு செய்து, ஒரு திட்டம் போட்டனர்.

'நாளை குரு தியானத்தில் இருக்கும்போது, நாம் இரு வரும் மறைந்திருந்து அவ ரைத் தாக்குவோம். அப்போது அவர் ஆயுதங்களை எடுக்காமல் நம்மை எப்ப டிச் சமாளிக்கிறார் என்று பார்ப் போம்,' என்று முடிவு செய்தனர்.

மறுநாள் வகுப்புகள் முடிந்ததும், குரு வழக்கம்போல தியானத்தில் ஆழ்ந்துவிட, இந்த இரு சீடர்கள் மட்டும் ஓலை தட்டிகளுக்கு அப்பால் மறைந்து கொண்டனர்.

சில நிமிடங்கள் கழித்து இருவரும் மெல்ல வெளியில் வந்தனர். பேசி வைத்தபடி இருவரும் குருவின் மீது ஏக காலத்தில் இரு பக்கமிருந்தும் பாய்ந்தனர்.

குரு முகத்தில் எந்த சலனமும் இல்லை. அவர்கள் பக்கத்தில் நெருங்கும்வரை கண் மூடி அமைதியாக இருந்த குரு, கடைசி விநாடியில் சற்று முன்னே வந்து குனிந்து கொண்டார். சீடர்கள் இரு வரும் மடேர் என்று மோதிக் கொண்டு தரையில் விழுந்து உருண்டனர்.

எதுவும் நடக்காததுபோல் தியானத்தைத் தொடர்ந்தார் குரு! குழப்பம் குருவே குழப்பம்! புகழ் பெற்ற துறவி அவர்.

அவருக்கு ஏராளமான மாண வர்கள். ஒருநாள், அந்த துறவியின் பழைய மாணவர் ஒருவர் அவரைப் பார்க்க வந்தார்.

பரஸ்பர விசாரிப்புகளுக்குப்பிறகு, 'குருவே, எனக்கு ஒரு குழ ப்பம்,' என்று ஆரம்பித்தார் மாணவர்.

'என்ன?' 'நான் உங்களிடம் படித்த தியானத்தை முறையாகத்தான் பின்பற்றுகிறேன். கவனமாகத்தான் செய்கிறேன். அவை எனக்கு மிகுந்த மன அமைதியையும் புத்திக்கூர் மையையும் தருகின்றன. அதை அனுப வபூர்வமாக உணர்கிறேன்!'

'மகிழ்ச்சி. மகிழ்ச்சி இதில் என்ன குழப்பம்?'

'நான் தியானத்தில் இல் லாத வேளைகளில் முழுமை யான நல்லவனாக இருக்கி றேனா என்ற சந்தேகம் இருக் கிறது. அது எனக்கே சில நேரங்களில் தெரிகிறது. சில நாள்களில் நானும் ஒன்றி ர ண்டு தவறுகளைச் செய்கி றேன். தியானம் பழகிய ஒரு வன் இப்படிச் செய்வது சரிதானா? இதை யோசிக்கும்போது என் உள்ளம் குன்றிச் சிறுத்து விடுகிறது!'

குருநாதர் சிரித்தார். 'ஆக நீ தியானமும் செய்கிறாய், தவறுகளும் செய்கிறாய், அப்ப டித்தானே?'

'ஆமாம் குருவே. அது தவறில்லையா?'

'இல்லை. நீ தினமும் தியானம் செய், தினமும் தவறு செய், தினமும் தியானம் செய், தினமும் தவறு செய், கொஞ்ச நாளில் இதில் ஏதேனும் ஒன்று நின்று விடும்!'

'அய்யோ.. ஒருவேளை தவறு நிற்பதற்குப் பதில் தியானம் நின்று விட்டால்?'

'அதுவும் நல்லதுதான். உன்னுடைய இயல்பு எது என்று புரிந்துவிடும் இல்லையா?!'



## 07.2017 18 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1545 - இங்கிலாந்தின் "மேரி றோஸ்" என்ற போர்க்கப்பல் போர்ட்ஸ்மவுத்" என்ற இடத்தில் மூழ்கியதில் 35 பேர் மட்டும் தப்பினர்.
- 1553 - 9 நாட்களே இங்கிலாந்தின் அரசியாக இருந்த ஜேன் கிறே பதவியிழந்தாள். முதலாம் மேரி அரசியாக முடி சூடினாள்.
- 1870-பிரான்ஸ் புருசியா மீது போரை ஆரம்பித்தது.
- 1900-பாரிசில் முதலாவது சுரங்கத் தொடருந்து சேவை ஆரம்பமாயிற்று.
- 1912-அரிசோனா மாநிலத்தில் 190 கிகி எடையுள்ள விண்கல் ஒன்று வீழ்ந்து கிட்டத்தட்ட 16,000 துகள்களாகச் சிதறுண் டது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலியப் போர்க்கப்பல் ஒன்று மூழ்கியதில் 121 பேர் கொல்லப்பட்டனர்.
- 1947 - பர்மிய தேசியவாதியான ஓங் சான் மற்றும் அவரது 6 அமைச்சர்கள் கொல்லப்பட்டனர்.
- 1967 - வட கரோலினாவில் போயிங் 727 மற்றும் செஸ்னா 310 விமானங்கள் நடுவானில் மோதியதில் 82 பேர் கொல்லப்பட்டனர்.
- 1979 - நிக்கராகுவாவில் அமெரிக்க சார்பு சமோசா அரசு சண்டினீஸ்டா கிளர்ச்சிவாதிகளால் கவிழ்க்கப்பட்டது.
- 1980 - ஒலிம்பிக் விளையாட்டுக்கள் மொஸ்கோவில் ஆரம்பமாயின.
- 1985 - இத்தாலியில் அணைக்கட்டு ஒன்று இடிந்ததில் 268 பேர் கொல்லப்பட்டனர்.
- 1996-ஒலிம்பிக் விளையாட்டுக்கள் அட்லாண்டாவில் ஆரம்பமாயின.
- 1996 - ஓயாத அலைகள் ஒன்று: முல்லைத்தீவில் இலங்கைக் கடற்படையின் ரணவிரு பீரங்கிப் படகு விடுதலைப் புலிகளால் மூழ்கடிக்கப்பட்டது. ஏழு கடற்கரும்புலிகள் வீரச்சாவடைந்தனர்.

பிறப்புகள்

- 810 - முகம்மது அல்-புகாரி, பாரசீகக் கல்வியாளர் (இ. 870)
- 1827-மங்கள் பாண்டே,இந்திய சிப்பாய் (இ. 1857)
- 1894 - கவாஜா நசிமுத்தீன், 2வது பாக்கித்தான் பிரதமர் (இ. 1965)
- 1921 - ரோசலின் யாலோ, நோபல் பரிசு பெற்ற அமெரிக்க மருத்துவர் (இ. 2011)
- 1938 - ஜயந்த் நாரளீக்கர், இந்திய வானியலாளர், வானியற்பியலாளர்
- 1948 - ஒக்ரம் இபோபி சிங், மணிப்பூர் அரசியல்வாதி
- 1948-அல்தமஸ் கபீர், இந்திய உச்ச நீதிமன்றத் தின் தலைமை நீதிபதி
- 1955 - ரோஜர் பின்னி, இந்தியத் துடுப்பாளர்
- 1961 - காம்ப்பெல் ஸ்காட், அமெரிக்க நடிகர், இயக்குநர்
- 1979 - மாளவிகா, இந்தியத் திரைப்பட நடிகை
- 1979 - தில்லாரா பர்னான்டோ, இலங்கைத் துடுப்பாளர்

இறப்புகள்

- 1814 -மேத்தியூ பிலிண்டர்சு, ஆங்கிலேய மாலுமி (பி. 1774)
- 1947 - ஆங் சான், பர்மிய அரசியல்வாதி (பி. 1915)
- 1947-சுவாமி விபுலாநந்தர், தமிழிசை ஆய்வாளர் (பி. 1892)
- 1987-ஆதவன், தமிழக எழுத்தாளர் (பி. 1942)
- 2010-டேவிட் வாரன், ஆஸ்திரேலிய அறிவியலாளர் (பி. 1925)
- 2013 - சைமன் பிமேந்தா, கர்தினால் (பி. 1920)

சிறப்பு நாள்

- மியான்மார் - பர்மிய மாவீரர் நாள்
- நிக்கராகுவா - தேசிய விடுதலை நாள் (1979)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 150 | 170 | 100 | 120 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 100 | 80 | 120 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 300 | 250 | 250 | 400 | 250 | 160 |
| தக்காளி | 140 | 200 | 160 | 110 | 160 | 150 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 100 | 80 | 60 | 80 | 70 | 80 |
| கோவா | 120 | 160 | 160 | 80 | 120 | 140 | 130 |
| கரட் | 150 | 400 | 250 | 200 | 240 | 200 | 240 |
| பூசணி | 100 | 100 | 120 | 100 | 120 | 90 | 120 |
| புடோல் | 80 | 100 | 60 | 60 | 120 | 80 | 60 |
| வாழைக்காய் | 60 | 100 | 60 | 60 | 80 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 180 | 100 | 250 | 250 | 200 | 250 | 200 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 100 | 90 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 160 | 200 | 200 | 140 | 160 | 120 | 160 |
| வெண்டிக்காய் | 50 | 100 | 120 | 100 | 120 | 100 | 60 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 | 50 | 140 | 140 | 120 |
| பயற்றங்காய் | 120 | 40 | 100 | 60 | 80 | 120 | 120 |
| லீக்ஸ் | 100 | 140 | 120 | 80 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 50 | 50 | 60 | 60 | 80 | 80 | 80 |
| கறிமிளகாய் | 150 | 200 | — | 200 | 240 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 240 | 200 | 200 | 220 | 200 |
| போஞ்சி | 200 | 200 | 160 | 100 | 160 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 120 | 100 | 120 | 100 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 30 | 20 | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 50 | 30 | 60 | 50 | 120 | 70 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 55 | 60 | 40-60 | 70 | 70 |
| இராசவள்ளி | 200 | 300 | — | 200 | 300 | — | 300 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 200 | 150 | 200 | 200 | 160 |
| முள்ளங்கி | 80 | 100 | 60 | 80 | 80 | 60 | 140 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 10 | 40 | 25 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 10 | 20 | 20 | 10 |
| ஈரப்பலா | 80 | 150 | — | — | 120 | — | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் கைகளோடு உங்கள் மனமும் பரிசுத்தமாக இருக்க வேண்டும்.

– கிறீஸ் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் - முஸ்லிம் உறவை வெட்டிச்சரிக்க முயலாதீர்

இலங்கைத் தீவில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் சிறுபான்மை இனம் என்பதற்கு அப்பால், இரண்டு இன மக்களும் சகோதரர்களாக தங்களைக் கருதிக் கொள்பவர்கள்.

முஸ்லிம் மக்கள் தமிழைத் தாய்மொழியாக கொண்டதால் அவர்கள் நம் சகோதரர்கள் என்பது மேலும் வலுப்பெறலாயிற்று.

தமிழ் மொழியில் மிகப்பெரும் விற்பன்னர்களாக முஸ்லிம் அறிஞர்கள் இருந்துள்ளனர்.

தமிழ் அறிஞர் ஏ.எம்.ஏ.அஸீஸ் அவர்கள் யாழ்ப்பாண மண்ணில் கல்வி கற்றவர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கற்ற முதலாவது முஸ்லிம் மாணவர் என்ற பெருமையும் அவரையே சாரும்.

இதுதவிர, மிகச்சிறந்த தமிழ்க் கவிஞர்களாக, எழுத்தாளர்களாக முஸ்லிம் அறிஞர்கள் இருக்கின்றனர்.

எனினும் தமிழ் – முஸ்லிம் சகோதரத்துவத்தை உடைத்து சுயலாபம் தேடுவதில் முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலர் திட்டமிட்டுச் செயற்படுவதைக் காண முடிகின்றது.

இந்நிலைமை பேராபத்தை தரும் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

குறிப்பாக தமிழ் மக்களுக்கும் சிங்கள ஆட்சியாளர்களுக்கும் இடையே இருக்கக் கூடிய பிரச்சினைகளைச் சாட்டாக வைத்து முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலர் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொண்டு, ஆட்சியாளர்களுக்கு முண்டு கொடுப்பது போல காட்டிக் கொள்கின்றனர்.

சிறுபான்மைத் தமிழ் மக்களைப் பேரினவாதம் வஞ்சிக்கின்ற வேளையில் அதனைத் தமக்குச் சாதகமாக்கி தமிழ் மக்களின் நிலங்களை; அவர்களின் மரபுரிமைகளைக் கபளீகரம் செய்வதில் முஸ்லிம் அமைச்சர்கள் சிலர் திட்டமிட்டுச் செயற்படுவது தமிழ் – முஸ்லிம் மக்களிடையே வக்கிர உணர்வை ஏற்படுத்தக்கூடியது.

உண்மையில் முஸ்லிம் சகோதரர்கள் தமிழ் மக்களுக்கு என்றும் பக்கபலமாக இருக்க வேண்டியவர்கள். தாய்மொழியாம் தமிழை வளர்ப்பதற்கும் இலங்கையில் சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் இந்த ஒற்றுமை மிகவும் அவசியமானது.

எனினும் யுத்தத்தால் நொந்து கெட்டுப் போயுள்ள தமிழ் மக்களை வஞ்சிப்பது போல அவர்களின் காணிகளை, அவர்களின் பூர்வீகச் சொத்தாக இருக்கக்கூடிய காடுகளை அபகரித்த சட்டவிரோதக் குடியேற்றங்களை மேற்கொள்ள முஸ்லிம் அமைச்சர் ஒருவர் எடுக்கும் முயற்சி இந்த நாட்டில் மீண்டுமொரு அழிவை ஏற்படுத்த வல்லது.

ஆட்சியாளர்களுடன் முஸ்லிம் அரசியல்வாதிகளின் இணக்கப்பாடு என்பது சிங்கள பேரினவாதத்தை தமிழ் மக்கள் எதிர்க்கும் வரை என்பதை முஸ்லிம் அரசியல்வாதிகள் உணர்ந்திருப்பர்.

தமிழ் – சிங்கள உறவு வலுப்படுமாக இருந்தால், சிங்கள ஆட்சியாளர்கள் முஸ்லிம் அரசியல்வாதிகளை தூக்கி வீசுவதற்கு அதிக நேரம் ஆகாது.

ஆகையால் தமிழர்கள் வீழ்ந்திருக்கும் போது அவர்களை ஏறிமிதிக்கும் கொடுஞ் செயலை முஸ்லிம் அமைச்சர்கள் சிலர் செய்வது அவ்வளவு நல்லதல்ல.

## மூவர் குழுவால் பணம் அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

முச்சக்கரவண்டியில் வந்த இனந்தெரியாத மூவர் வீதியில் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவரை தள்ளி விழுத்திவிட்டு அவர் வசமிருந்த ஒரு தொகைப் பணத்தை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று இரவு 8.45 மணியளவில் யாழ்ப்பாணம் பிறவுண் வீதி, நீராவியடி கோயிலுக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடைபாதை வியாபாரம் செய்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த வியாபாரி ஒருவருடைய பணமே அபகரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸில் முறையிடப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதியில் உள்ள சி.சி.ரீவி கமராவின் உதவியுடன் அவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. (செ-11)

## உள்ளூராட்சி ஆணையாளர்களின் சேவைக்காலம் நீடிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மற்றும் பெப்ரவரி மாதம் வரை உள்ளூராட்சி சபைகளின் நகராதிபதிகள், பிரதேச சபை தலைவர்கள் நியமிக்கப்படவுள்ளதால் அதுவரை உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகங்களை கவனிப்பதற்கு ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்களுக்கு மேலும் 6 மாதம் சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி நிறுவனங்களின் செயலாளர்களின் சேவை தொடர்பாக எதிர் வரும் மாதங்களில் நிரந்தரமாக்கும் வேலைத்திட்டம் செய்யப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற உள்ளூராட்சி நிறுவனங்களின் ஆணையாளர்கள், செயலாளர்கள் சந்திப்பின்போதே இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார். (செ)

## சிங்கள மக்களை நெகிழவைத்த புலம்பெயர் தமிழ் வைத்தியர்கள்

அண்மையில் இலங்கையின் தென் மாகாணத்தில் ஏற்பட்ட பாரிய இயற்கை அனர்த்தம் காரணமாக பல பாதிப்புகள் ஏற்பட்டன.

இந்நிலையில் அப் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வைத்திய உதவிகளை வழங்கும் நோக்கில் புலம்பெயர் தமிழர்கள் குழுவொன்று விஜயம் செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பிரித்தானியா, கனடா, நோர்வே, அமெரிக்கா, பிரான்ஸ், பஹ்ரேன் மற்றும் ஜேர்மன் ஆகிய நாடுகளில் வாழும் தமிழ் வைத்தியர்கள் இந்த நடவடிக்கையில் இணைந்துள்ளனர்.

இந்த நடவடிக்கையின் ஊடாக இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வாய்ப்பாக அமையும் என புலம்பெயர் தமிழ் அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

தென் மாகாணத்தில் ஏற்பட்ட பாரிய அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டமை குறித்து வேதனை அடைந்த தமது அமைப்புகளின் உறுப்பினர்கள் அவர்களுக்கு உதவ முன்வந்துள்ளதாக புலம்பெயர் அமைப்புகள் குறிப்பிட்டுள்ளன.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் அனைவரும் விடுதலைப் புலிகள் என இலங்கையின் தென் மாகாணத்தில் கடும்போக்குவாதிகள் பிரசாரங்களை முன்னெடுத்து வரும் இந்நிலையில் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை காப்பாற்றும் நோக்கில் புலம்பெயர் தமிழர்கள், சிங்கள கிராமங்களுக்கு வருகை தந்திருப்பதானது மிகுந்த மகிழ்ச்சி தருகின்றது என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (8)




### திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

மதுசூதனா, நீ சொல்வதெல்லாம் சரிதான். இருப்பதற்கு இடம் கேட்கிறாய். இருந்து கொள்... ஆனால் இலவசமாக அல்ல.. வாடகை என்று ஏதாவது கொடு. வாழ்நாள் முழுக்க இங்கேயே இரு. அதில் எனக்கு எதுவித மறுப்பும் இல்லை. கோவிந்தனின் முகம் கூம்பியது.

வராஹமூர்த்தியை வாட்டமுடன் பார்த்து வராஹமூர்த்தி கைத்தலம் பற்றிய காரிகை கழந்து கொண்டு பிரிந்து சென்றதால் நான் ஏழையாகிவிட்டேன். தரித்திர நாராயணனாகத் தவிக்கிறேன். கையில் ஒரு காசும் இல்லை. இந்த நிலையில் எப்படி நான் உங்களுக்குப் பணம் கொடுக்க முடியும். தயவு செய்து எனக்கு இடம் அளியுங்கள். (தொடரும்)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**12 லக்கினத்தில் பிறந்தவர்களுக்கும் திருமணம் செய்யக்கூடிய மாதம் எது?**

மேட லக்கினம்- வைகாசி, ஆவணி, மாசி, ரிஷப லக்கினம்- வைகாசி, ஆனி, கார்த்திகை, பங்குனி, மிதுன லக்கினம்- சித்திரை, ஆனி, ஆவணி, தை, கடக லக்கினம்- வைகாசி, ஆவணி, மாசி, சிம்ம லக்கினம்- வைகாசி, ஆனி, ஆவணி, மாசி, பங்குனி, கன்னி- ஐப்பசி, கார்த்திகை, தை, பங்குனி, துலா லக்கினம் - வைகாசி, ஆனி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை,விருச்சிக லக்கினம்- வைகாசி, ஆனி, பங்குனி,கார்த்திகை, தனுசு லக்கினம்- ஆனி,ஐப்பசி, மாசி, கார்த்திகை, மகர லக்கினம்- ஐப்பசி, கார்த்திகை.தை, மாசி, கும்ப லக்கினம்- ஆனி, ஆவணி,மாசி, மீன லக்கினம்- வைகாசி, ஐப்பசி, தை, பங்குனி. (தொடரும்)

## உடற்பருமன் சுட்டெண் (BMI)

BMI- நிறை/ உயரம் (மீற்றர் X மீற்றர்)
BMI- உடற்பருமன் சுட்டெண்
18.5 இற்கு குறைவாக இருப்பின்- உயரத்திற்கு ஏற்ற நிறையில்லை.
18.5-24.9- உயரத்திற்கு ஏற்ற நிறை சரியாக உள்ளது.
-5-29.9- உயரத்திற்கு ஏற்ற நிறையை விட அதிகம்.
30 இற்கு மேல்- அதிகூடிய நிறை.

அதிகூடிய நிறை உள்ளவர்களை தொற்றா நோய்கள் தாக்கும் அபாய நிலை அதிகம்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகரசபை.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வவுனியா பிரதேசத்தில் தெற்கிலுப்பைக்குளம் பிரதேசத்திலும் மன்னார் பிரதேசத்தில் அத்திமோட்டை, கூராய், விடத்தல்தீவு கிராமம், தேவன்பிட்டி, வெள்ளாங்குளம், கள்ளியடி, இலுப்பைக்கடவை, மூன்றாம் பிட்டி, கணேசபுரம், வெள்ளாங்குளம் நீர்ப்பாசனத் திணைக்களம், விடத்தற்தீவு வைத்தியசாலை, கணேசபுரம் இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும் (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ உன்னை ஏழையாகவும் நண்பரில்லாதவனாகவும் நினைக்காதே. பணம் மனிதனைப் படைத்ததை யாராவது கண்டதுண்டா? எப்போதும் மனிதனே பணத்தைப் படைப்பவன். உலகம் முழுவதும் ஆக்கப்பட்டது மனிதனது ஆற்றலாலும் ஊக்கத்தின் சக்தியாலும் நம்பிக்கையின் வலிமையாலுமே.

❖ மதவெறி கொண்டவனின் மன ஊக்கத்துடன் சடப்பொருள் நம்புபவனின் விரிவும் எனக்கு வேண்டும். கடல் போன்ற ஆழமும் எல்லையற்ற வானமும் போன்ற அகலமும் இம்மாதிரியான நெஞ்சமே நமக்குத் தேவை.

❖ அந்தப் பழைய வாதங்கள் அனைத்தையும் பொருளற்ற காரியங்களுக்காகப் புரியும் போராட்டத்தையும் ஒழித்துவிடுங்கள். கழிந்த அறுநூறு எழுநூறு ஆண்டுகளாக இழிநிலையடைந்து வந்ததை நினையுங்கள். அக்காலத்தில் நூற்றுக்கணக்கான வயது முதிர்ந்தவர்கள் பல ஆண்டுகளாக ஆராய்ந்து வந்தவை எவை? ஒரு பாத்திரத்திலுள்ள நீரைக்குடிப்பது வலது கையிலா? இடது கையிலா? கையைக் கழுவ வேண்டியது மூன்று முறையா, நான்கு முறையா? வாயைக் கொப்பளித்தல் ஐந்து தடவையா, ஆறு தடவையா? இவை போன்ற முக்கியமான கேள்விகளைப் பற்றி ஆராய்வதிலும் அவற்றை பற்றிப் புலமை மிக்க [illegible] கழிக்கும் மக்களிடமிருந்து நாம் எதிர்பார்க்கக் கூடியது என்ன? நமது மதம் சமையலறைக்குள் புகுந்துவிடுமோ என்னும் ஆபத்து உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓல்கோட்ஸ் அணியை வீழ்த்தி இறுதிப் போட்டியில் சென்றலைட்ஸ்



சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III ற்கான போட்டியில் சென்றலைட்ஸ் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. அரையிறுதி போட்டியில் ஓல்கோட்ஸ் அணியினை எதிர் கொண்ட சென்ற லைட்ஸ் ஒரு இலக்குகளால் வெற்றி பெற்று இறுதி போட்டிக்கு தெரிவாகியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஓல்கோட்ஸ் அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 202 ஓட்டங்களை பெற்றது. அவ் அணி சார்பாக பிரியலக்சன் 75, நிரோசன் 30, ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் கிருபா 3, அலன்ராஜ் 3, இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் 41.4 பந்து பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கினை அடைந்தது. அவ் அணி சார்பாக ஜேம்ஸ் 52, எடின் 27 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் ஜிந்துசன் 3 நிரோசன் 2 இலக்கினை கைப்பற்றினர். இறுதி போட்டியில் பல்கலைக்கழக அணியை எதிர்த்து சென்ற லைட்ஸ் அணி மோதவுள்ளது. (க)



# சூரியகுமாரன் ஞாபகார்த்த மாவட்ட ரீதியிலான கபடி போட்டி

## துள்ளுமீன் வெற்றி



பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமராட்சி கபடிச் சங்கத்தின் அனுமதியுடன் அமரர் ம.சூரியகுமாரன ஞாபகார்த்த 20வயதுக்கு உட்பட்டோர்கான யாழ். மாவட்ட ரீதியிலான கழகங்களுக்கு இடையிலான மாபெரும் கபடிச்சுற்றுப் போட்டியில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஆட்டத்தில் சித்தி விநாயகர் விளையாட்டுக்கழகத்தை எதிர் கொண்ட துள்ளுமின் வி.கழக கபடி அணி 47:61 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக துள்ளுமீன் விளையாட்டுக்கழக வீரர் ஜிம்சன் தெரிவு செய்யப்பட்டார். இவருக்கான விருதினை வடமராட்சி கபடிச்சங்க உறுப்பினர் பிரான்சிஸ் அண்ணா வழங்கி கௌரவித்தார். (க)

# சென் மைக்கல் வி.க.நடத்தும் மின்னொளியிலான உதைபந்தாட்டம்

## ஐயனார் வெற்றி



உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட தொடரில் 16.07.2017 அன்று மின்னொளியில் நடைபெற்ற போட்டியில் குருநகர் பாடும்மீன் கழகத்தினை எதிர்த்து துறையூர் ஐயனார் அணி மோதியது.

இதில் துறையூர் ஐயனார் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஐயனார் அணி சார்பாக அகீபன், சுபிதன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களை போட்டனர்.

கடந்த இரு போட்டிகளில் பாடும்மீன் அணியினை ஐயனார் அணி வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# சைனிங்ஸ் வைரவிழா கரப்பந்தாட்டம் இறுதிப் போட்டியில் நேதாஜி அணி



காத்தாமுத்து சக்திவேல் (துரைமணியண்ணா) ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினர் அனுசரணையில் நடை பெற்ற சைனிங்ஸ் வைரவிழா கரப்பந்தாட்டத் தொடரில் நடை பெற்ற போட்டியில் உதய சூரியன் அணியை 25:22, 25:18 என்ற நேர்செட் கணக்கில் றெயின்போ அணி வெற்றி கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற 2ஆவது ஆட்டத்தில் நேதாஜி அணி ரேவடியுடனான ஆட்டத்தில் வெற்றி பெற்றது. (க)

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

அரியாலை திருமகள் சன சமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு அமரர் கந்தையா அரியரட்ணம் ஞாபகார்த்த அணிக்கு 6 பேர் கொண்ட 5 ஓவர் மென் பந்துச் சுற்றுப் போட்டியில் பங்கு பெற்ற 20.07.2017 ற்கு முன் 077 645 0755 (பா. பதுமமுரளி), 077 843 5234 (ப.லோகநாதி) ஆகியோரிடம் பதிவுகளை மேற்கொள்ளவும். முதலாம் இடம் பெறும்அணிக்குரூபா15,000 பணப்பரிசும் வெற்றிக் கேடயமும்2ஆம்இடம்பெறும்அணிக்கு ரூபா 10,000 பணப்பரிசும் வெற்றி கேடயமும் வழங்கப்படும் என போட்டி ஒருங்கிணைப்புக் குழு அறிவித்துள்ளது. (க)

# சைனிங்ஸ் வைரவிழா உதைபந்தாட்டம் இறுதிப் போட்டியில் நேதாஜி அணி




வல்வை சைனிங்ஸ் வி.கழகம் வைரவிழாவை முன்னிட்டு நடத்தும் வல்வைக்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட தொடரின் அரையிறுதி போட்டியில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் நேதாஜி அணியை எதிர்த்து றெயின்போ அணி மோதியது.

இப் போட்டியில்.1.0 என்ற கோல் கணக்கில் நேதாஜி அணி வெற்றி பெற்று இறுதிபோட்டிக்கு தகுதி பெற்றது.

மற்றைய ரேவடி அணியுடனான அரையிறுதி ஆட்டத்தில் தீருவில் அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

ஆட்டநாயகனாக நேதாஜி விளையாட்டு கழகத்தைச் சேர்ந்த தர்சன் தெரிவுசெய்யப்பட்டார். (க)

# இறுதிப் போட்டிக்கு ஊரெழு றோயல் தெரிவு



வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவிண்டில் கலைமதி வி.க.யாழ்.மாவட்ட ரீதியில் நடத்தி வருகின்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் முதலாவது அரையிறுதியாட்டம் 2017.07.16 அன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சஸ் வி.கழகத்தை 4:0 என்ற கோல்கணக்கில் தோற்கடித்து இறுதிப்போட்டிக்கு ஊரெழு றோயல் வி.கழகம் தெரிவாகியுள்ளது. றோயல் அணி சார்பாக எடிசன்-02, கோபன்-01.கபில்-01 கோல் போட்டனர். போட்டியின் ஆட்ட நாயகனாக றோயல் வி.கழகத்தின் வீரன் எடிசன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## குடும்பஸ்தர்...

னந்தம் ஜெனார்த்தன் (வயது 41) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குடும்பஸ்தரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டு பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. உயிரிழப்பு சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (செ-30)

## இந்த வருடத்தில்...

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து, மீன்பிடியில் ஈடுபட்டு வரும் இந்திய மீனவர்களை கைது செய்யும் நடவடிக்கை தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது.

கடந்த வருடம் இறுதிப்பகுதியில் இந்திய மீனவரின் அத்துமீறல் குறைந்திருந்த போதிலும், அண்மையில் அதிகரித்துள்ளது. இந்த நிலையில் வடபகுதியில் மன்னார் மற்றும் யாழ்.மாவட்ட கடற்பரப்பு எல்லையில் மீன் பிடியில் ஈடுபட்டதாக இந்தியாவின் தமிழகத்தை சேர்ந்த மீனவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து நேற்று வரை யாழ் மாவட்டத்தில் உள்ள நெடுந்தீவு மற்றும் காங்கேசன்துறை கடற்பரப்பில் 70 இந்திய மீனவர்களும் மன்னார் கடற்பரப்பில் 11 இந்திய மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் கடந்த 2016 மற்றும் நடப்பாண்டில் கைது செய்யப்பட்ட மீனவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட 101 படகுகள் தற்போது நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளது. இதில் கடந்த 2016ஆம் அண்டு கைப்பற்றிய 27 படகுகளை நல்லெண்ணத்தில் விடுவிக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (செ-9)

## ஜனாதிபதி-பிரதம...

ஆஜராகுமாறு கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி திகும் கலுஆராச்சி நேற்று அறிவிப்பு விடுத்தார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளரான மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க இருவருக்குமிடையில் ஒப்பந்தம் உள்ளதாக கூறி தயாரிக்கப்பட்ட கடிதம் ஒன்று ஊடகவியலாளர்களுக்கு முன்னிலைப்படுத்தப்பட்டது சம்பந்தமாக வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக முன்னாள ஐ.தே.க பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு சம்பந்தமாக சாட்சியம் அளிக்க அழைக்கப்பட்டது.

இதன்போது ஐ.தே.க முன்னாள் பொது செயலாளருக்கு எதிரான வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு வேலைப்பளு காரணமாக இன்று (நேற்று) நீதிமன்றத்திற்கு சமுகம் அளிக்க முடியவில்லை என ஜனாதிபதியும் பிரதமரும் சட்டத்தரணி ஊடாக கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி திகும் கலு ஆராச்சி அவர்களுககு அறிவிக்கப்பட்டது. அதன்படி இந்த வழக்கை தொடர்ந்து விசாரிப்பதற்கு எதிர்வரும் டிசம்பர் 04ஆம் திகதி ஆஜராகுமாறு ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அவர்களின் சட்டத்தரணி ஊடாக அறிவிக்கப்பட்டது. இந்த வழக்கு அழைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் பிரதிநிதியான ஐ.தே.க முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மன்றில் ஆஜராகியிருந்தார்.(செ)

## 13 மாவட்டங்களில்...

கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

கிளிநொச்சி மலையாளபுரம் புது ஐயங்குளம் வற்றியமையால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குளத்து நீரை நம்பி 40 ஏக்கர் சிறுதானிய செய்கையும், 20 ஏக்கர் நெற்செய்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நீர் பம்பிகளை பயன்படுத்தியே சிறு தானிய செய்கைகளுக்கு தேவையான நீரை மிகுந்த சிரமத்துடன் பெறுவதாக விவசாயிகள பலரும் கவலையுடன் தெரிவித்திருந்தனர் என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (செ-11)

## வித்தியா படுகொலை...

மாணிக்கவாசகர் இளஞ்செழியன், அன்னலிங்கம் பிறேம்சங்கர் ஆகியோருடன் பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் கடந்த மாதம் 28ஆம் திகதி முதல் 6 நாட்கள் தொடர் விசாரணை நடத்தப்பட்டிருந்தது.

இந்த வழக்கு விசாரணைகளின் போது கொலை சம்பவத்தின் முக்கிய சூத்திரதாரி சுவிஸ்குமார் என்ற ஒன்பதாம் இலக்க சந்தேக நபர் என்பதை பதில் சட்டமா அதிபர் நீதிமன்றத்தில் அறிவித்திருந்தார்.

அத்தோடு இந்த சந்தேகநபர் யாழ். பொலிஸ் நிலையத்திலிருந்து விடுவிக்கப்பட்டு பின்னர் வெள்ளவத்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாகவும் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

இதற்கமைய மேற்படி சந்தேக நபர் யாழ். பொலிஸ் நிலையத்திலிருந்து தப்பிச் செல்வதற்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் வட மாகாணத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபரும் தற்போதைய மத்திய மற்றும் ஊவா மாகாணங்களுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபருமான லலித் ஜயசிங்க கடந்த 15ஆம் திகதி குற்றப் புலனாய்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

தொடர்ந்து சந்தேக நபரான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ஊர்காவற்றுறை பதில் நீதவானின் உத்தரவிற்கு அமைய எதிர் வரும 25ஆம் திக்தி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

எவ்வாறாயினும் பாதுகாப்பு கருதி அவரை யாழ்.சிறைச்சாலையிலிருந்து அனுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே மாணவி வித்தியாவின் படுகொலை வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி மாணவி சிவலோகநாதன் வித்தியா காணாமற்போயிருந்தார்.

வன்புணர்விற்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட நிலையில் மாணவியின் சடலம் மறுநாள் மீட்கப்பட்டிருந்தது.

இந்த சம்பவம் தொடர்பில் தற்போது ஒன்பது சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (செ-11)

## தீவகப் பகுதி...

கடல்நீரை நன்நீராக்கும் திட்டம் தொடர்பான செயற்பட்டறையின் அனுபவ பகிர்வு கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் யாழ்.அரச அதிபர் நா. வேதநாயகன் தலைமையில் நீர் பற்றாக்குறை தொடர்பான கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்ட போதே தீவக பிரதேச செயலர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

தீவகத்தில் தண்ணீர் பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாக உள்ளது. இதை தீர்த்து வைக்க வேண்டியது மிக மிக அவசியம் ஆகும். இந்த மாதத்துடன் அப்பகுதியில் நீர் முற்றிலும் இல்லாத நிலை ஏற்படும். ஆகவே எந்த முறையிலாவது நீர் பிரச்சினையை தீர்த்து வைக்க வேண்டும்.

தீவகப் பகுதிகளுக்கு தண்ணீர் விநியோகிப்பதற்கு பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் அது நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளது. இதற்கு யார் தடையாக உள்ளார்கள் ஏன் நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளது என தெரியவில்லை. குடி நீர் இல்லாத காரணத்தினால் அங்கு உள்ள மக்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து செல்லும் அவல நிலை ஆரம்பித்துள்ளது.

எம்மால் முடிந்த வரை நீர்விநியோகம் மேற்கொண்டு வருகிறோம் ஆனால் கால நிலை மாற்றம் இன்றி இப்படியே தொடருமாக இருந்தால் பாரிய பாதிப்பை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

அதே போன்று தீவுப்பகுதிகளில் குடிநீர் இன்மையின் தாக்கம் கால்நடைகளை பெரிதும் பாதித்துள்ளது. அவைகள் இறக்கத் தொடங்கியுள்ளன. இதை தடுப்பதற்கு மிக அவசரமாக நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட வேண்டும் என பலமாக கோரிக்கை விடுத்திருந்தனர். (செ-9)

## இலங்.அகதிகளை...

யேற்றப்படவிருந்தனர்.

அமெரிக்காவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் பின்னர் இந்த திட்டம் கைவிடப்படலாம் என்று கருதப்பட்டது.

எனினும் இரண்டு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் பின்னர், குறித்த முகாம்களில்

# இதயசுத்தியுடன் செயற்பட்டால் சட்டமும் அதற்கு இடமளிக்கும்

## நம்பி செயற்படுவோம் என்கிறார் முதலமைச்சர்

நாம் நூறு வீதம் இதய சுத்தியுடன் விரைந்து செயற்பட முன்வந்தால் சட்டங்களும் அதற்கு இடமளிக்குமென நம்பி செயற்பட முன் வருவோம் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்:

ஒப்பந்த முகாமைத்துவம் மற்றும் முரண்பாடுகளை தீர்வு செய்தல் தொடர்பான கருத்தரங்கு நேற்றைய தினம் யாழ்.சுபாஸ் ஹோட்டலில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையா ற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடுமையான போருக்குப் பின்னர் மீண்டெழுந்து வருகின்ற வடமாகாணத்தின் அபிவிருத்திப் பணிகள் வேகமாக முன்னெடுக்கப்பட வேண்டிய இத்தருணத்தில் உங்கள் அனைவரதும் முனைப்புடனான ஈடுபாடுகளும் விரைவான செயற்பாடுகளும் பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றன.

எமது அபிவிருத்திக்கு வேண்டிய நிதி மூலங்களை தேடித்தேடிக் கண்டுபிடித்து அவற்றைப் பெற்றுக் கொள்ளல், அவ்வாறு கிடைக்கப்பெற்ற நிதிகளை முறையாகச் செலவு செய்வதற்கான திட்ட முன்மொழிவுகள் ஆகியவற்றைத் தயாரித்தல், நடைமுறைப்படுத்தல் ஆகிய செயற்பாடுகளை நாம் யாவரும் முனைப்புடன் செயற்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வேலைகள் துரிதமாக நிறைவுறுத்தப்படாமைக்கான காரணங்களை ஆராய்வது அவசியம். ஆனால் அதேநேரம் அவ் வேலைகளை விரைந்து நிறைவு செய்வதற்கான வழிமுறைகளையுந்தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். தொழில்நுட்பவியலாளர்கள் பற்றாக்குறை, அலுவலர்களின் அனுபவமின்மை போன்ற பல்வேறு காரணங்களை அடுக்கிக் கொண்டு செல்லாது தேவையேற்படின் சிரேஷ்ட பொறியியலாளர்கள் கூட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் கடமைகளை நிறைவு செய்ய முன்வரலாம் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும் என்றார் முதலமைச்சர். (செ-9)

அகதிகளை நேர்காணும் பணிகளை அமெரிக்காவின் உள்துறை செயலக அதிகாரிகள் மேற்கொண்டுவந்தனர்.

இருந்தபோதும், கடந்த 14ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் அவர்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

மீண்டும் அவர்கள் முகாம்களுக்கு பிரவேசிக்கமாட்டார்கள் என அவுஸ்திரேலியாவின் அகதிகள் செயற்பாட்டு ஒழுங்கமைப்பின பேச்சாளர் இயன் ரின்டோர் தெரிவித்துள்ளார்.

எனினும். இந்த ஒப்பந்தம் கைவிடப்படவில்லையென்றும், மீண்டும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி முதல் அகதிகளை நேர்காணும் பணிகள் இடம்பெறும் எனவும் அவுஸ்திரேலியாவின் வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷப் தெரிவித்துள்ளார். (செ-11)

## மாவட்டத்தை...

குற்றஞ் சாட்டியுள்ளார்.

மேலும் யார் என்னதை சொன்னாலும், எமது மாவட்டத்துக்கு சுத்தமான நீர் தேவை. அதற்கான நடவடிக்கைகளை அரசு சார்பில் நாம் மேற்கொள்வோம் எனவும் தெரிவித்துள்ளார்.

கடல்நீரை குடி நீராக்கும் திட்டம் தொடர்பான செயல்பட்டறையின் அனுபவ பகிர்வு கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அரச அதிபர் தலைமையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

யாழ்.மாவட்டத்தில் குடிநீர் பிரச்சினைகள் அதிகரித்துச் செல்கின்றது. இது பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

எமது மாவட்டத்தினை அபிவிருத்தி செய்ய முடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. அதிலும் முக்கியமான தடையாக, நல்லதை செய்தாலும் எதிர்க்கின்றார்கள் கெட்டதைச் செய்தாலும் எம்மவர்கள் எதிர்க்கின்றார்கள் அவர்கள் எந்தவொரு அநியாயத்தினைச் செய்தாலும் அவர்களுக்கு ஆதரவினை அளிக்கும் மோசமான நிலை தான் இங்கு உள்ளது.

அவுஸ்திரேலியாவிற்கான பயணத்தினை மேற்கொண்டிருந்த போது, கடல் நீரைக் குடி நீராக்கும் திட்டம் குறித்து எமக்கு விளக்கமளித்திருந்தார்கள். அங்குபல திட்டங்களை பார்த்துள்ளோம். அது தொடர்பாக அனைத்து அதிகாரிகளுக்கும் விளக்கமளிக்கவுள்ளோம். அவுஸ்திரேலியாவில் சுற்றாடல் அமைச்சு மிக கடுமையான சட்டத்தினையும் நடைமுறைகளையும் கொண்டுள்ளது. அங்கு சுற்றாடல் பாதிப்படைவதற்குரிய எந்த செயற்பாடுகளையும் செய்ய முடியாது. எமது நாட்டினை விட மிக நுணுக்கமான நடைமுறைகளை அவுஸ்திரேலிய அரசாங்கம் கொண்டுள்ளது. சுற்றாடல் மாசடைதல் போன்ற பல பிரச்சினைகளை எதிர்நோக்கியிருந்தாலும், அவற்றினை மிக வெற்றிகரமாக தீர்த்துள்ளார்கள்.

கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தை மிக சிறப்பாக செய்து வருகிறார்கள். எனவே யார் என்னதை சொன்னாலும், எமக்கு சுத்தமான நீர் தேவை. அவற்றினைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய திட்டங்களை நடைமுறைப்படுத்த நாம் செயற்படுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## சிங்கப்பூர் வெளி...

அவர் இன்றைய தினம் இலங்கை வெளிநாட்டமைச்சர் ரவி கருணாநாயக்கவையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் இலங்கையில் தங்கியுள்ள காலத்தில் அரசின் முக்கிய பிரதிநிதிகளுடன் இரு தரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார்.

உத்தியோக பூர்வ விஜயத்தின் ஒரு கட்டமாக வெளிநாட்டு அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் நாளை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார் எனவும் அறியமுடிகின்றது. அன்றையதினம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பாவும் அவருடன் யாழ்.வருகை தரவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (செ)

## டெனீஸ்வரனின்...

நியமிக்குமாறு ரெலோ கட்சி வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்குப் பரிந்துரைக்கவுள்ளதாக அறியக் கிடைத்துள்ளது.

கட்சியின் ஒழுக்க விதிகளை மீறி வட மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிராகச் செயற்பட்டார் என தெரிவித்து கடந்த வாரம் ரெலோவின் செயலாளர் நாயகம் என்.சிறிகாந்தா கடிதம் ஒன்றை வரைந்திருந்தார். அவர் தமது கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி வடக்கு மாகாண சபையில் அங்கம் வகிப்பதற்கான சகல தகுதிகளையும் வடமாகாண சபை அமைச்சராகவுள்ள பா. டெனீஸ்வரன் இழந்து விட்டதாக தெரிவித்து முதலமைச்சருக்குக் கடிதம் அனுப்பியிருந்தார்.

அக் கடிதத்திற்குப் பதிலளித்த முதலமைச்சர், அமைச்சர் டெனீஸ்வரன் தமது விசாரணைக்குழு முன் தெரிபடமாட்டார் என்று பகிரங்கமாகக் கூறியதை முன்வைத்தும் வேறு பல காரணங்களை முன்வைத்தும் அவர் மீது நடவடிக்கை எடுக்க தீர்மானித்திருந்ததாகவும் பதில் குறிப்பிட்டிருந்தார்.

இது பற்றி ஆராய்வதற்காகவும் முடிவுகளை எட்டுவதற்காகவும் ரெலோவின் அரசியல உயர்பீடம் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற பிரதிக் குழுக்களின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் நேற்று முன்தினம் வவுனியாவில் உள்ள தலைமைச் செயலகத்தில் கூடியிருந்தது.

கூட்டத்தில், வடக்கு மாகாண சபையில் ரெலோ சார்பில் நிலவுகின்ற அமைச்சுப் பதவிக்கு புதிய ஒருவரை வட மாகாண அமைச்சராக நியமிப்பதற்கான முடிவு எட்டப்பட்டது. அதன் பிரகாரம், வடக்கு மாகாண சபையின் உறுப்பினராகவுள்ள விந்தன் கனகரட்ணத்திடம் அமைச்சர் டெனீஸ்வரன் வகிக்கும் அமைச்சையும் அதற்குள் உள்ளடங்கும் பொறுப்புக்களான, வட மாகாண மீன்பிடி போக்குவரத்து வர்த்தக வாணிப கிராம அபிவிருத்தி மற்றும் வீதி அபிவிருத்தி விடயங்களை மாறுதல்கள் இன்றி வழங்க முதலமைச்சரைக் கோருவது எனவும் கட்சியின் அரசியல் உயர்பீடம் முடிவு எடுத்துள்ளதாக தெரிய வருகிறது

இம் முடிவினை இன்று காலை ரெலோவின் செயலாளர் நாயகமும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான என். சிறிகாந்தா உத்தியோக பூர்வமாக முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு விரைவில் கடிதம்மூலம் அறிவிக்கவுள்ளார எனவும் தகவல் கிடைத்துள்ளது. (செ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 மாவட்டங்களில்...

வட மாகாணம், வட மத்திய மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணம் என்பன வரட்சியினால் அதிக பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாக இடர் முகாமைத் துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களின் பல பகுதிகளில் நிலவும் வரட்சியினால், விவசாய செய் கைகள் பாதிப்படைந்துள்ளதுடன், குடிநீருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் 136 கிராம சேவகர் பிரிவுகளில், 135 கிராம சேவகர் பிரிவுகள் வரட்சி யால் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதி பர் தெரிவித்தார். நீர் நிலைகள் நீர் வற்றி காணப் படுவதுடன், கிணறுகளின் நீர் மட்டமும் குறைவடைந் துள்ளது.

50 கிராம சேவகர் பிரிவுகளுக்கு நீர்தாங்கி மூல மாக குடிநீர் விநியோகிக்கப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் குறிப்பிட்டார். வவுனியா மாவட்டத்தில் குளங்களில் நீர் வற்றியுள்ளமையினால், சிறுபோக நெற்செய்கை இம்முறை கைவிடப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது.

பாவற்குளத்தின் நீர் மட் டம் குறைவடைந்தமையால், நெற்செய்கை கைவிடப்பட்டு, சுமார் 600 ஏக்கர் வயல் நிலத் தில் சிறுதானிய செய் 23

## கஞ்சாவுடன்...

தகவலின் அடிப்படையில், பரந்தனிலிருந்து அனுராத புரம் நோக்கி கொண்டு செல்ல முற்பட்ட ஒரு கிலோ 790 கிராம் கேரள கஞ்சா பொதியை நேற்று மாலை 6.30 மணியளவில் வவு னியா மத்திய பேருந்து நிலை யத்தில் வைத்து பொலிஸார் கைப்பற்றியதுடன் கஞ்சா பொதியை வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் அடிப் படையில் தென்பகுதியை சேர்ந்த 22 வயது இளை ஞனையும் கைது செய்திருந் தனர்.

சந்தேக நபரிடம் மேற் கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஒப்படைக்க வுள்ளதாக வவுனியா பொலி ஸார் தெரிவித்தனர்.

கடந்த மாதத்தில் மட்டும் ஏழுக்கு மேற்பட்ட நபர்கள் வவு னியா மத்திய பேருந்து நிலை யத்தில் கேரளா கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-250)

## கர்ப்பிணி கொலை...

றானது குறித்த சந்தேக நபர் களிட மிருந்து கைப்பற்றப் பட்ட பொருட்களில் வழக்கிற்கு தேவையற்ற பொருட்களை அவர்களதுஉறவினர்களிடம் மீள ஒப்படைக்கவும் அனுமதி யளித்துள்ளது.இக்கட்டளையை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் இ.சபேசன் பிறப்பித்துள்ளார்.

ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்திற்கு உட்பட்ட பகுதியானகரம்பனில் கடந்த ஜனவரி மாதம் வீட்டில் தனித் திருந்த கர்ப்பிணிப் பெண் ணொருவர் கொடூரமான முறையில் படுகொலை செய் யப்பட்டிருந்தார்.

அதனை தொடர்ந்து சம்ப வம் தொடர்பில் சந்தேகநபர் கள் இருவர் கைது செய்யப் பட்டு அவர்களுக்கு எதிரான வழக்குவிசாரணையானது ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்று வருகின்றது.

இவ் வழக்கு விசாரணை யானது நேற்றையதினம் மன்றில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டிருந்த போது பாதிக் கப்பட்டவர் கள் சார்பில் சட்டத்தரணி சுகாஸ் அதே போன்றுசந்தே கநபர்கள்சார் பில் சட்டத்த ரணி திருக் குமாரன் ஆகியோர் முன் னிலையாகியிருந்தனர்.

இவ் வழக்கு விசாரணை யில்பொலிஸார்குறித்த கொலை சம்பவம் தொடர்பாக மேலும் ஒருவரிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளவுள்ளதாக தெரிவித்தனர்.

இத்தோடு இவ் வழக்கில் தற்பாது கைது செய்யப்பட டுள்ளஇருவரிடமும் கைது செய்யும் போது கைப்பற்றப் பட்ட பொருட்களில் வழக் கிற்கு தேவையற்ற பொருட் களை அவர்களது உறவினர் களிடம் மீள ஒப்படைக்க மன் றின் அனுமதியையும் பொலி ஸார் கோரியிருந்தனர். இதற்கு மன்றானது அனுமதியளித் ததை தொடர்ந்து மன்றில் வைத்து பொருட்கள் சந்தேக நபர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதன்படி ஒரு சந்தேக நபரிடம் கைப்பற்றப்பட்ட 35 ஆயிரத்து 370 ரூபாய் பண மும், தேசிய அடையாள அட் டையும், பணப்பையும் அதே போன்று மற்றைய சந்தேக நபரது 110 ரூபாய் பணமும், தேசியஅடையாள அட்டை யும் அவர்களது உறவினர் களிடம் ஒப்படைக்கப்பட்டது. இதனை தொடர்ந்து குறித்த இருசந்தேகநபர்களையும் எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க ஊர் காவற்றுறை நீதிவான் நீதி மன்ற பதில்நீதிவான் இ.சபேசன் உத்தரவிட்டிருந்தார். (செ-4)

## கடற்படை...

இந்தச் சந்திப்பு இடம்பெற் றுள்ளது.

இலங்கையில் பணி யாற்றிய காலத்தில் கடற் படைக்கு வழங்கிய ஒத்து ழைப்புக்காக அமெரிக்க தூதரக பாதுகாப்பு ஆலோச கருக்கு, கடற்படைத் தளபதி நன்றி தெரிவித்துள்ளார்.

அத்துடன், அவருக்கு நினைவுச் சின்னமொன்றை யும் வழங்கியதாகவும் கடற் படை ஊடகப் பிரிவு தெரி வித்துள்ளது. (செ-11)


**உடனடி வேலைவாய்ப்பு**

இலங்கையில் முன்னணி நிறுவனத்தில் பயிற்சியு டன் கூடிய சம்பளம், பின் நிரந்தர வேலைவாய்ப்பு.

- அடிப்படை கல்வித்தகைமை க.பொ.த, சா/த
- அனுபவம் அவசியம் இல்லை
- தங்குமிடம் இலவசம்

மன்னார், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு விண்ணப்பங்களுக்கு...



(9834)

தொடர்புகளுக்கு : 077 556 6226, 077 664 4442

**யாழில் மாபெரும் மலிவு விற்பனையில் பலகைகள்**

முதிரை அடி ரூபாய் 280 இல் இருந்து
வேம்பு அடி ரூபாய் 200 இல் இருந்து
பலகை, தீராந்தி மற்றும் பல. யாழ்ப்பாணத்தில் விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு : 077 057 2615, 075 807 7838 (C-9098)

**FALC FRENCH LANGUAGE CENTRE**

**பிரெஞ்சு வகுப்புக்கள்**

France இல் பயிற்றப்பட்ட விரிவுரையாளர் மூலம் கற்றுக் கொள்ளுங்கள்...
சர்வதேச டிப்ளோமா DELF A1,A2,B1,B2 வகுப்புக்கள் நடைபெறுகின்றன
2006 முதல் இன்றுவரை 1276 மாணவர்கள்... (C-9089)

இல. 40, பலாலி வீதி, (ஆரியகுளம்) 0779 789 456 021 221 7781
இல.181, முதலாம் மாடி, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973
IELTS Life SkillsA1,B1 வகுப்புக்களும்.....
(இலுப்பையடி சந்திக்கு அண்மையில் கராஜ் முன்பாக)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

**af பிரெஞ்சு மொழி**



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org (9829)

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

**போட்டிப் பரீட்சை மாலை நேர வகுப்புகள்**

முகாமைத்துவ உதவியாளர்
இன்று செவ்வாய் தொடக்கம் வெள்ளி வரை 3.00 - 6.00

வட மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்
இன்று செவ்வாய் தொடக்கம் வெள்ளி வரை 3.00 - 6.00

தொடர்புகளுக்கு 076 688 3394

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கியருகில்)
குறிப்பு : வவுனியா, மன்னார் ஆகிய இடங்களிலும் அப் பரீட்சைக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
தொடர்பு : 076 688 3394 (C-9100)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## நான்காம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 21.05.1948

விண்ணில் 01.08.2013

## ஆனந்தன் செல்வநாதன்

(உரிமையாளர், அரியாலை மண்ணெண்ணெய் நிரப்பு நிலையம்)

*தலைமகனாய் தலைவனாய் தரணிபோற்றும் தந்தையாய்*
*நிலந்தனிலே என்றும் நிறைவோடு வாழ்ந்தவரே*
*நிலையாக நினைவுகளில் வாழுகின்ற நிலைதந்து*
*நிறைந்ததுவோ நான்காண்டு நித்தமும் மறவோமே!*
*நன்றாய் வளர்த்து நல்வழிகள் காட்டியெமை*
*என்றும் சிறப்புடனே வாழவைத்த அப்பாவே!*
*சென்றிடினும் வாழ்நாளில் எம்சிந்தையிலே வாழ்வீர்*
*என்றினி உங்கள் எழில்வதனங் காண்போம்!*

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*22, கலைமகள் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.*

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(C-9101)


**விற்பனைக்கு**

கிளிநொச்சி வட்டக்கச்சி ஆறுமுகம் வீதியில் 2 ஏக்கர் மேட்டுக்காணி யில் புத்தம் புதிய வீடும், தென்னந் தோட்டமும் 3 ஏக்கர் வயல் காணி யும் விற்பனைக்குண்டு. (9831)

தொடர்புகளுக்கு : 071 531 5500

**விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்**

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு நாங்கப்பவுண்.மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு (C-9054)



UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

**வேலையாட்கள் தேவை**

மாவிட்டபுரத்தில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு வேலையாட்கள் தேவை (பெண்கள் மட்டும்) (9822)

தொடர்புகளுக்கு : 077 418 4484
Queen Exports (குயின் எக்ஸ்போட்ஸ்)
கே.கே.எஸ் வீதி, மாவிட்டபுரம், யாழ்ப்பாணம்.

**ஆங்கில வகுப்பு**

தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக் குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0767070069
M.Suren (9825)


## மகாஜனன்களின் ஒன்றுகூடல் - 2017

யா/மகாஜனக் கல்லூரி பழைய மாணவர்களின் வருடாந்த ஒன்று கூடலும் இராப்போசனமும் 29.07.2017 (சனிக்கிழமை) மாலை 5.00 மணி முதல் கல்லூரி வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் ரட்ணம் ரட்ணதுரை அவர்களின் "ரிதம் ஸ்ரார்" இன்னிசைக் குழுவினரின் இன்னிசைக் கானங்களும் நடைபெறும்.

ஒன்று கூடலுக்கான ரூபா. 500 பெறுமதியான நுழைவுச் சீட்டுக்களை கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

**மகாஜனன்கள் ஒன்றிணைவோம்**
**மகாஜனாவை வளப்படுத்துவோம்**

பழைய மாணவர் சங்கம், யா/மகாஜனக் கல்லூரி. (C-9095)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org